செந்தமிழ் மணி மாலை

இரண்டாம் புத்தகம்

[ஐந்தாம் பாரத்திற்கு உரியது]

OF THE REGISTRAR OF BOOKS
21 OCT
MADRAS

தொகுத்தோர் :

வித்துவான் இ. கே. நடேச சர்மா, B.O.L.
தமிழ் விரிவுரையாளர்,
லயோலா கல்லூரி, சென்னை.

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார்
தமிழ் விரிவுரையாளர்,
அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

பழனியப்பா பிரதர்ஸ்
குளம் : : திருச்சிராப்பள்ளி
1948
[விலை ரூ. 1—2—0

First Impression: Nov. 1944
Second Impression: June 1945
Third Impression: April 1946
Fourth Impression: May 1947
Fifth Impression: 1948

Approved by the Madras Text-book Committee for class use
(Vide Fort. St. George Gazette Part I-B,
dated, 1st May 1945 Page 14)

முகவுரை

மாணவர்கட்குத் தமிழ் மொழியில் ஆர்வமும் புத்துணர்ச்சியும் உண்டாக்கும் பொருட்டு, சென்னை அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை யொட்டியும், S. S. L. C தமிழ்ப் பாட புத்தக அமைதியை மேற்கொண்டும் **'செந்தமிழ் மணி மாலை'** என்னும் இப்பாடத்தொகை நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தொகையுள், மாணவரது தகுதிக்கும் கால நிலைக்கும் ஏற்றவாறு, மொழி, அரசியல், இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம், ஆராய்ச்சி முதலிய பல துறைக்கலைகளிலும் வல்லார் எழுதிய உரைநடைகளுட் சிறந்தனவாக உள்ளவை தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டுள்ளன. நீதிநூல், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல் முதலியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற சொற்சுவை பொருட்சுவை மிக்க செய்யுட்களும் இதனுள் இடம் பெற்றுள்ளன. இஃது ஆங்கிலப் பாடசாலைகளில் தமிழ் பயிலும் ஐந்தாம் [illegible]ர மாணவர்களுக்கென அமைந்த தாகும். இதனைத் தமிழுலகம் [illegible]ற்று ஆதரிக்கும் எனப் பெரிதும் நம்புகின்றோம்.

இந்நூலை வெளியிடுவதற்குத் தமது அரிய கட்டுரைகளை உதவிய பேரறிஞர்கட்கும், பேருதவிபுரிந்த எங்கள் அன்பர் **வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்கட்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதனை வெளியிட்ட திருச்சி பழனியப்பா பிரதர்ஸ் உரிமையாளரும், எங்கள் உழுவலன்பருமாகிய **உயர்திரு. செ. மெ. பழனியப்பச் செட்டியார்** அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகும்.

திரிசிரபுரம்
சென்னை.
6-11-44

இங்ஙனம்,
தி. ஐயன்பெருமான் கோனர்
இ. கே. நடேச சர்மா

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

உள்ளுறை
செய்யுள்

OFFICE OF THE REGISTRAR OF ... 21 OCT 1948 ... MADRAS

எண் பக்கம்

I. கடவுள் வாழ்த்து
1. தேவாரம் ... 1
2. திருவிசைப்பா ... 1
3. பெருமாள் திருமொழி ... 2
4. தாயுமானவர் பாடல் ... 2
5. கலைமகள் ... 3
6. தமிழ்த் தெய்வம் ... 3

II. அறவுரை
1. திருக்குறள் ... 4
2. ஏலாதி ... 5
3. பழமொழி ... 6
4. அறிநெறிச்சாரம் ... 7
5. மணிமேகலை ... 8
6. புறநானூறு ... 9

III. தொடர்நிலைச் செய்யுள்
1. கம்பராமாயணம் ... 10
2. நைடதம் ... 19
3. திருவிளையாடற் புராணம் ... 22
4. கலிங்கத்துப் பரணி ... 29
5. குசேலோபாக்கியானம் ... 33
6. அரிச்சந்திர புராணம் ... 39

IV. சிறு நூல்கள்
1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ... 43
2. திருவரங்கக் கலம்பகம் ... 43
3. கோயில் நான்மணி மாலை ... 44
4. பாரி காதை ... 45
5. நீதி நூல் ... 46
6. தமிழ் விடுதூது ... 46
7. நன்னூல் ... 48

V. தனிப் பாடல்கள் ... 49

VI. பல்வகைச் சுவைகள்
1. திருக்குற்றாலமலையின் வளம் ... 52
2. மழைத்தாரையும் அருவியும் ... 52
3. பெண்களின் பெருமை ... 53
4. கானகம் ... 53
5. தமிழ் நாடு ... 54

உரை நடை

எண்		பக்கம்
1.	இசை இன்பம் —மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்	55
2.	கும்பகருணன் —வித்துவான் V. வேங்கடராஜுலு ரெட்டியார்.	6[illegible]
3.	ஏறு தழுவுதல்—கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை.	69
4.	வீரமா முனிவர்—R. P. சேதுப் பிள்ளை, B.A., B.L.	75
5.	தமிழும் தமிழரும் —திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	80
6.	மாணிக்க வாசகர் —மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.	89
7.	நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனா?—கா. நமச்சிவாய முதலியார்	97
8.	வேள் - பாரி—வித்துவான் மு. இராகவையங்கார்	105
9.	இந்தியக் கிராமப் பொருளாதாரம் —J. S. பொன்னையா, M.A.	110
10.	வெண்ணெய் - அண்ணல் —வித்துவான் மா. இராசமாணிக்கம், M.O.L., L.T.	116
11.	டாடா - பட்டுத் தொழில் இ. கே. நடேச சர்மா, B.O.L.	121
12.	திருக்குறளும் பொதுநோக்கமும் —வித்துவான் S. ஆறுமுக முதலியார், B.A. (Hons) L.T.	126
13.	முகம்மது நபி—அல்ஹாஜ் பா. தாவூத்ஷா, B.A.	130
14.	அன்பின் அருஞ்செயல் —வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை	135
15.	முதற் குலோத்துங்கன் அரசியல் —T. V. சதாசிவப் பண்டாரத்தார்	141
16.	படக்காட்சி —வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார்.	146
	குறிப்புரை	150

031 N4

செந்தமிழ் மணி மாலை

இரண்டாம் புத்தகம்

செய்யுட் பகுதி

I. கடவுள் வாழ்த்து

1. தேவாரம்

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
    போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
    பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணு
    எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும்வயற்பழ னத்தணி
    ஆரூ ரானைம றக்கலு மாமே! 1

—சுந்தரர்

---

2. திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
    உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
    சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
    அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
    தொண்டனேன் விளம்புமா விளம்பே. 2

—திருமாளிகைத் தேவர்

3. பெருமாள் திருமொழி

தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை;
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே. 3

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 4

செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்;
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! உன்
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே. 5

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! என்
சித்தமிக உன்பாலே வைப்பன் அடியேனே. 6

—குலசேகர ஆழ்வார்

---

4. தாயுமானவர் பாடல்

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமும்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பங் கேளே. 7

—தாயுமானவர்

---

5. கலைமகள்

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். 8

—கச்சியப்ப சிவாசாரியார்

ஆடகன்னா நின்றுறையும் அன்னமே! நின்னுடைய
பாடகமுஞ் சீரடியும் பற்றினேன் ;—தேடரிய
அற்புதமே! அம்மே! அணங்கே! மணநாறுங்
கற்பகமே! நாயேனைக் கா. 9

—பெரும்பற்றப்புலியூர் நம்பி

புத்தகம் செபவடம் புனித ஞானமா
முத்திரை குண்டிகை முழுதும் ஏந்தெழில்
கைத்தலத் தமிர்தினைக் மலைம டந்தையை
முத்தமிழ்க் கிழத்தியை முடிவ ணங்குவாம். 10

—ஆகந்தக்கூத்தர்

---

6. தமிழ்த் தெய்வம்

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்(து)
இருப்பிலே யிருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள். 11

—வரந்தருவார்

II. அறவுரை

1. திருக்குறள்

நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 1

கல்வி

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 2

அறிவுடைமை

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 3

ஆராய்ந்து செயல்

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. 4

முயற்சி

முயற்சி திருவினை யாக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 5

வினைத் திட்பம்

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 6

நட்பாராய்தல்

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். 7

மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் ; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 8

சான்றாண்மை

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண்.

— திருவள்ளுவர்

2. ஏலாதி

பெரியோர் தன்மை

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருண்மேல்
செல்லான் சிறியார் இனஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிறை. 1

நிலையாமை

இளமை கழியும்; பிணிமூப் பியையும்;
வளமை வலியிவை வாடும்;—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி. 2

விண்ணோரால் நாடத்தக்கவன்

சிதையுரையான்; செற்றம் உரையான்; சீறில்லான்
இயல்புரையான்; ஈனம் உரையான்; நசையவர்க்குக்
கூடுவ தீவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்!
நாடுவார் விண்ணோர் நயந்து. 3

அன்புடையார்க்குள்ள ஆறு குணங்கள்

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொற் புணர்வுவத்தல்
நோதற் பிரிவிற் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன வாறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 4

ஈகையின் பெருமை

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம்—போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணி லவர்க்கீந்தார்
வைத்து வழங்கிவாழ் வார். 5

— கணிமேதையார்

3. பழமொழி

அறிவின் மாண்பு

அறிவினால் மாட்சியொன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனும்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணியெல்லாம் ஆடையின் பின். 1

பெரியாரைப் பிழையாமை

நெறியால்உணராது நீர்மையும் இன்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கள்நேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. 2

கீழ்மக்கள் செய்கை

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
துணலுந்தன் வாயாற் கெடும். 3

அற்பர்க்கு அதிகாரங் கொடுத்தல்

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். 4

உறவினர் கூறும் உறுதிமொழி

உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பது நன்றே;—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!
தாய்மிதித்த ஆகா முடம். 5

— முன்றுறையரையர்

4. அறநெறிச்சாரம்

அறிஞர்

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;—காய்வதன்கண்
உற்றகுணம் தோன்ரு தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும். 1

அறம்

இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 2

பொறுமை

எள்ளிப் பிறருரைக்கும் இன்னச்சொல் தன்னெஞ்சிற்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதொன்றும் வேண்டா தவம். 3

தற்புகழ்ச்சி

'பலகற்ரேம் யாம்' என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்ருர் கண்ணும் உளவாம், பலகற்ருர்க்(கு)
அச்சாணி அன்னதோர் சொல். 4

புறங்கூறுமை

முன்னின் ஞெருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்ரேரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. 5

— முனைப்பாடியார்

5. மணிமேகலை

அறத்தின் சிறப்பு

இளமையும் நில்லா; யாக்கையும் நிலையா;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்;
மிக்க அறமே விழுத்துணை யாவது. 1

உடலின் தன்மை

வினையின் வந்தது; வினைக்குவிளை வாயது;
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது;
மூப்புவிளி வுடையது; தீப்பிணி இருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை;
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பா லுடையது;
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய்! இதனைப் புறமறிப் பாராய். 2

வறுமையின் தன்மை

குடிப்பிறப் பழிக்கும், விழுப்பங் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,
நாணணி களையும், மாணெழில் சிதைக்கும்,
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்,
பசிப்பிணி என்னும் பாவி. 3

உணவே உயிர்

ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்;
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. 4

— சீத்தலைச் சாத்தனார்

6. புறநானூறு

உயரிய வாழ்க்கை

"யாண்டுபல வாக நரையில ஆகுதல்
யாங்கா கியரென வினவுதிர் ஆயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையரென் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. 1

— பிசிராந்தையார்

செல்வத்துப் பயன்

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நெடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பன இரண்டே;
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே. 2

—நக்கீரர்

கல்வியின் சிறப்பு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக' என்னா தவருள்
அறிவுடை யோனா றரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே. 3

—ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

III. தொடர்நிலைச் செய்யுள்

1. கம்பராமாயணம்

குகப்படலம்

பரதன் சேனையுடன் கங்கைக்கரையை அடைதல்

பூவிரி பொலன் கழற் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கமம் என்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை எய்தினன். 1

சேனையின் அளவு

நான் தலை நண்ணிய காலை பின்படர்
தோன்றலை அவ்வழி தொடர்ந்து சென்றன,
ஆன்றவ ருணர்த்திய அக்கு ரோணிகள்
மூன்றுபத் தாயிரத் திரட்டி முற்றுமே. 2

குகன் சேனையைக் கண்டு ஐயுறுதல்

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்புடைக் கடலின்நீர் சுமந்த மேகத்தை
ஒப்படை அண்ணலோ டுடற்ற வேகொலாம்?
இப்படை எடுத்ததென் றெடுத்த சீற்றத்தான். 3

குகனெனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகைமுரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகைமிகக் கண்கள்தீ நாற நாசியில்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான். 4

கட்டிய சுரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கண் தீயினன்
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன். 5

எலியெலாம் இப்படை அரவம் யானென,
ஒலியுலாம் சேனையை உவந்து கூயினான்;
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே. 6

மருங்கடை தென்கரை வந்து தோன்றினான்;
ஒருங்கடை நெடும்படை ஒல்லெ னார்ப்பினோ(டு)
அருங்கடை யுகந்தனில் அசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே. 7

குகன் தன் சேனையை நோக்கிக் கூறுதல்

தோன்றின புளிஞரை நோக்கிச் "சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்ப ரேற்றுதற்(கு)
ஏன்ற னென்; என்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீர் அமைதிராம்" என்றான். 8

"துடியெறி; நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
ஓடி எறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடி; எறிபட" எனாப் பெயர்த்தும் கூறுவான். 9

"அஞ்சன வண்ணன்என் ஆருயிர்
நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய
மன்னரும் வந்தாரே?
செஞ்சர மென்பன தீயுமிழ்
கின்றன செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடில் நாய்க்குகன்
என்றெனை ஓதாரோ? 10

"ஆழநெ டுந்திரை யாறுக
டந்திவர் போவாரோ?
வேழநெ டும்படை கண்டுவி
லங்கிடும் வில்லாளோ?
தோழமை என்றவர் சொல்லிய
சொல்லொரு சொல்லன்றோ?
ஏழமை வேடன் இறந்திலன்
என்றெனை ஏசாரோ? 11

“முன்னவ னென்று நினைந்திலன்
மொய்புலி யன்னா னோர்
பின்னவன் நின்றனன் என்றிலன்;
அன்னவை பேசானேல்
என்னிவ னென்னை இகழ்ந்ததிவ்
வெல்லைக டந்தன்றோ?
மன்னவர் நெஞ்சினில் வேடர்வி
டுஞ்சரம் வாயாவோ? 12

“பாவமும் நின்ற பெரும்பழி
யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல(கு)
ஆள்பவ ரெண்ணாரோ?
ஆவது போக; என் னாருயிர்த்
தோழமை தந்தான்மேல்
போவது சேனையு மாருயி
ருங்கொடு போயன்றோ? 13

“அருந்தவம் என்றுணை யாள
இவன்புவி யாள்வானோ?
மருந்தெனின் அன்(று); உயிர் வண்புகழ்
கொண்டுபின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர்
தம்மொடு போகாதே
இருந்தது நன்று; கழிக்குவென்
என்கடன் இன்றோடே. 14

“தும்பியும் மாவு மிடைந்த
பெரும்படை சூழ்வாரும்
வம்பியல் தாரிவர் வாள்வலி
கங்கைக டந்தன்றோ!
வெம்பிய வேடரு ளீர்! துறை
யோடம்வி லக்கீரோ;
நம்பிமுன் னே இனி நம்முயிர்
மாய்வதும் நன்றன்றோ? 15

"போனப டைத்தலை வீரர்த
மக்கிரை போதாவிச்
சேனைகி டக்கிடு; தேவர்வ
ரிற்சிலை மாமேகம்
சோனைப டக்குடர் சூறைப
டச்சுடர் வாளோடும்
தானைப டத்தனி யானைப
டத்திரள் சாயேனோ? 16

"நின்றகொ டைக்கை யெனன்பன்
உடுக்கநெ டுஞ்சீரம்
அன்றுகொ டுத்தவள் மைந்தர்ப
லத்தையென் னம்பாலே
கொன்றுகு வித்தநி ணங்கொள்பி
ணக்குவை கொண்டோடித்
துன்றுதி ரைக்கடல் கங்கைம
டுத்திடை தூராதோ? 17

"ஆடுகொ டிப்படை சாடிய
றத்தவ ரேயாள
வேடுகொ டுத்தது பாரெனும்
இப்புகழ் மேவீரோ?
நாடுகொ டுத்தவென் நாயக
னுக்கிவர் நாமாளும்
காடுகொ டுக்கில ராகி
எடுத்தது காணீரோ? 18

"மாமுனி வர்க்குற வாகிவ
னத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்றும
னத்திறை கொள்ளாதே
ஏமுனை யுற்றிடில் ஏழுக
டற்படை என்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழெ்ன
இப்பொழு தாகாதோ?" 19

[என்று இவ்வண்ணம் வார்த்தைகளைக் கூறிக்கொண்டு குகன் தன் சேனையின் நடுவில் நின்றான்.]

சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றிக் கூறுதல்

(வேறு)

"கங்கையிரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்(கு)
உயிர்த்துணைவன் உயர்தோளான்
வெங்கரியி னேறனையான்
விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க்
குகன்என்னுங் குறியுடையான். 20

"கற்காணும் திண்மையான்
கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய
அழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள்
மழைகாணு மணிநிறத்தாய்!
நிற்காணு முள்ளத்தான்
நெறியெதிர்நின் றனன்" என்றான். 21

பரதன் குகனைக் காணச் செல்லுதல்

தன்முன்னே அவன்றன்மை
தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே உவக்கின்ற
துரிசிலாத் திருமனத்தான்
"மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்
என்முன்னே அவற்காண்பென்
யானேசென்(று)" எனவெழுந்தான். 22

என்றெழுந்து தம்பியொடும்
எழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக்
குளிர்கங்கைக் கரைகுறுகி

நின்றவனை நோக்கினன்
திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி
எயினர்கோன் துண்ணென்றான். 23

பரதனைக் கண்டு குகன் ஆராய்தல்

வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான். 24

"நம்பியுமென் னாயகனை
ஒக்கின்றான்; அயல்நின்றான்
தம்பியையு மொக்கின்றான்;
தவவேடம் தலைநின்றான்;
துன்பமொரு முடிவில்லை;
திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ? பிழைப்(பு)" என்றான். 25

[என்று குகன் இவ்வார்த்தைகளைத் தனிமையாகக் கூறிப் பின் பரதன் மனக்கருத்தை அறியும்பொருட்டு ஓர் ஓடத்தில் ஏறித் தான் தனியே வடகரை வந்தான்.]

பரதனும் குகனும் சந்தித்தல்

வந்தெதிரே தொழுதானை
வணங்கினன்; மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கும்
அவனும்மவ னடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத்
தழுவினன்; தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்றிருக்கும் சீர்த்தியான். 26

பரதன் தன் செய்தியை அறிவித்தல்

தழுவின புளிஞர் வேந்தன்
 தாமரைச் செங்கணுனை
"எழுவினு முயர்ந்த தோளாய்!
 எய்திய தென்னை?" என்ன,
"முழுதுல களித்த தந்தை
 முந்தையோர் முறையி னின்றும்
வழுவினன்; அதனை நீக்க
 மன்னனைக் கொணர்வான்" என்றான். 27

அதனைக் கேட்ட குகனது நிலைமை

கேட்டனன் கிராதர் வேந்தன்,
 கிளர்ந்தெழும் உயிர்ப்ப னுகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்;
 விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
 சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில்
 உள்ளத்தன் புகல லுற்றான். 28

"தாயுரை கொண்டு தாதை
 உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
 சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை யென்ற போழ்து
 புகழினேய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
 ஆவரோ? தெரியின் அம்மா! 29

"என்புகழ் கின்ற தேழை
 எயினனேன்? இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
 ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்

மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்;
உயர்குணத் துரவுத் தோளாய்!" 30

[பின்னர்ப் பரதனும் குகனும் நண்பராயினர். பரதன், இராம லட்சுமணர் படுத்துறங்கிய இடத்தைக் காட்டும்படி குகனை வேண்ட, குகன் பரதனை அழைத்துச் சென்றான்.]

இராமன் பள்ளிகொண்ட இடத்தைக் கண்ட பரதனது ஆற்றாமை

காரெனக் கடிது சென்றான்;
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்;
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்;
பருவரற் பரவை புக்கான்;
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான். 31

"இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும்
அமிர்தென அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி
துறந்திலென்; சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடும்
செல்வமும் கொள்வேன் யானே." 32

பரதன் இலக்குமணனைக் குறித்து வினவுதல்

தூண்தர நிவந்த தோளான்
பின்னரும் சொல்லுவான்: "அந்
நீண்டவன் துயின்ற சூழல்
இதுவெனில் நிமிர்ந்த நேயம்

பூண்டவன் தொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்த
தியாண்(டு)" என இனிது கேட்டான் ;
எயினர்கோன் இதனைச் சொன்னன். 33

குகன் கூற்று

" அல்லையாண் டமைந்த மேனி
அழகனும் அவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்,
கல்லையாண் டுயர்ந்த தோளாய் !
கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்ருன்
இமைப்பிலன் நயனம் " என்ருன். 34

பரதன் தன்னை வெறுத்தல்

என்பதைக் கேட்ட மைந்தன்,
"இராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமிங்
யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானேன் ;
அவனது துடைக்க நின்ருன் ;
அன்பத்துக் கெல்லை யுண்டோ ?
அழகி தென் னடிமை" என்ருன். 35

அவ்விடை அண்ணல் தானும்
அன்றரும் பொடியின் வைகித்
"தெவ்விடை தரநின் ருர்க்குஞ்
செறிகழற் புளிஞர் கோமான் !
இவ்விடைக் கங்கை யாற்றின்
ஏற்றினை யாயின் எம்மை
வெவ்விடர்க் கடலின் றேற்றி
வேந்தன்பால் விடுத்த(து)" என்ருன். 36

[பிறகு நாவாய்கள் வந்தன ; அவற்றில் சேனைகள் யாவும் ஏறிக் கங்கையின் அக்கரை சேர்ந்தன.]

—கம்பர்

2 நைடதம்

நளன் சூதாடுதல்

நளனது ஆட்சியின் பெருமை

நிழலுமிழ்ந் துதிரங் காலும்
வயிரவாள் நிடதர் கோமான்
எழுபுவி வேந்தர் யாரும்
இடுதிறை கொணர்ந்தெஞ் ஞான்றும்
தொழுதன ரேத்தி நிற்பத்
தொடுகடல் உடுத்த ஞாலம்
முழுவது மொருகோ லோச்சி
முறைவழா தளித்தான் அன்றே. 1

கலி நளனைப் பற்றல்

கோவடு குருதி வேலான்
கொழுஞ்சுடர் பட்ட காலைச்
சேவடி கழுவ லின்றிச்
செய்கடன் கழித்தல் நோக்கிக்
காவலற் சேருங் காலம்
கருதுபு பன்னீ ராண்டு
மேவருந் தான்றி யுற்ற
வெங்கலி மேயி னனே. 2

கலி புட்கரனிடம் போதல்

வேறு

“விட்புலத் தரசரும் ஏனை வேந்தரும்
வட்கஇம் மன்னவன் மல்லல் மார்பகம்
பெட்புறு மடந்தையைப் பிரிப்பன் யான்” எனப்
புட்கரன் பாற்கலி போயி னனரோ. 3

கலி புட்கரனிடம் உரையாடல்

வருகலி புட்கரன் வதனம் நோக்குறக்
“குரைகழல் நளனெனும் கொற்ற வேந்தனே
ஒருகுடை நீழலின் உலகம் காத்திட
இருநிலக் கிழமைநீ இழந்த தென்கொலோ? 4

"வாட்டிறல் வேந்தனை மடந்தை தன்னொடும்
காட்டிடைப் புகுத்திமண் காக்கும் மன்னருன்
தாட்டுணை தொழுநறுந் தாம நீள்முடி
சூட்டுவன் நினக்(கு)" எனச் சொல்லி னனரோ. 5

புட்கரன் கலியைப் பார்த்து "நளனை வெல்லும் வழி யாது?" என்று கேட்டல்

சொல்லலுங் களிமகிழ் தூங்கிப் புட்கரன்
"கொல்லிய வருதிறல் கூற்றும் அஞ்சுறும்
மல்லடு திண்புய மன்னர் மன்னனை
வெல்லுமா றெங்ஙனம்? விளம்புவாய்" என்றான். 6

கலி "நளனைச் சூதாட்டத்தினால் வெல்லுவேன்" எனக் கூறுதல்

எண்ணலை யாதுநான் இழைத்த வஞ்சனை
விண்ணவ ராயினும் விலக்கற் பாலரோ?
அண்ணலைச் சூதினால் படுப்பல்; அஞ்சல்நீ
கண்ணுறும் யான்கொடுங் கலி" என் றனனரோ. 7

கலி காளை வடிவுகொண்டு புட்கரனைத் தாங்கிச் செல்லல்

முழையுறை கொடுவரி யனைய மொய்ம்பினன்
உழையினிற் போதுமென் றுரைத்து வெங்கலி
மழவிடை யுருக்கொடு நிற்ப வண்சுடர்
இழைதவழ் மார்பினன் இவர்ந்து போயினன். 8

புட்கரன் நளன் அரண்மனை வாயிலை அடைதல்

உரவுநீர்க் கருங்கடல் உலகு காவலன்
குரைகழல் பணிந்துதங் குறைகள் சாற்றுவான்
அரசர்கண் துயிலமை முகிலின் ஆர்ப்புறும்
முரசுகண் துயில்கிலா வாயில் முன்னினன். 9

புட்கரன் வாயிலோரிடம் தன் வரவைக் கூற நளன் அவனை அழைப்பித்தல்

"மன்னவற் கெம்வர வுரைத்தி ; வாயிலோய் !"
என்னலும் ஆங்கவன் எய்திக் கூறலும்
சொன்னவில் வேலினன் "கொணர்க" என்றனன்;
அன்னவன் "வரு"கென அவையின் எய்தினன். 10

புட்கரன் நளனுடன் இன்னுரையாடல்

களைகண தாகியோர் கவிகை நீழலில்
வளைகடல் உலகெலாம் புரக்கும் மன்னவன்
தளையவிழ் தாமரைத் தாளில் வீழ்ந்தெழும்
இளவலோ டளவளாய் இருக்கு மேல்வையில் 11

கோல்சின வாகைவேற் குரிசில்" மல்லலேற்(று)
எல்லுமிழ் மணிக்கொடி யுயர்த்த தென்?" என
"வல்லடு சூதினி லேற்ற மன்னரை
வெல்கொடி யீது" என விளம்பி னனரோ 12

நளன் புட்கரனைச் சூதாட அழைத்தல்

சொல்லிய அவ்வுரை கேட்டுத் தூமணிக்
கல்லெனப் பணைத்துயர் கலவைத் தோளினன்
"வெல்கொடி உயரிய விடலை! சூதில்நீ
வல்லையேல் ஆடுதும் வரு"கென் றோதினன். 13

மந்திரிகள் நளனுக்கு நீதி கூறல்

"சீலநற் றருமமெய் சிதைக்கும் ; தெண்டிரை
வேலைமுற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும் ;
மானுறுத்திடும் ; கவ றாடல்! மன்ன ! கேள் ;
கோலிழுக் கரசர்தங் கொள்கைத் தென்பவே. 14

"கள்ளுண விரும்புதல், கழகஞ் சேர்தல், மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல், ஒன்னலர்க்(கு)
எள்ளரு ஞாட்பினுள் இரியல் செய்திடல்,
வள்ளியோய்! அறநெறி வழுக்கும் என்பவே. 15

"ஐய! நீ ஆடுதற் கமைந்த சூதுமற்(று)
எய்துநல் குரவினுக் கியைந்த தூது;வெம்
பொய்யினுக் கருந்துணை ; புன்மைக் கீன்றதாய் ;
மெய்யினுக் குறுபகை என்பர் மேலையோர். 16

எள்ளுக சூதினை இகலி வென்றதூஉம்
கள்ளமேற் கொடுவலை கரந்து வேட்டுவர்
உள்ளுற அமைத்திடும் உணவை யோர்கிலாப்
புள்ளினம் அருந்தின போலு மென்பவே." 17

நளன் மந்திரிகளின் சொல்லை மறுத்துக் கூறல்

கலைக்கடல் கடந்துளார் கழறுங் கட்டுரை
சிலைத்தழும் பிருந்ததோட் செம்மல் கேட்(டு), உயிர்
உலப்பினு மறுக்கிலேன் உரைத்த வாய்மை; நீர்
விலக்குவ தென்?" என விளம்பி னனரோ. 18

நளன் புட்கரனுடன் சூதாடித் தோற்றல்

சூழ்வினைப் புணர்ப்பினல் சொன்ன வாறியைந்(து),
ஆழ்கடற் புவிதொழும் அரசன் ஆட, வெங்
காழ்மனக் கொடுங்கலி கவற்றின் வண்ணமாய்
வீழ்தலும் புட்கரன் வென்றிட் டான்அரோ! 19

—அதிவீரராம பாண்டியன்

---

3 திருவிளையாடற் புராணம்

மண்சுமந்த படலம்

வந்தி யென்ற ஒரு பிட்டு விற்குங் கிழவியின் இயல்பு

இந்நிலை யூரி லுள்ளார்
யாவர்க்குங் கூலி யாளர்
துன்னிமுன் னளந்த வெல்லைத்
தொழின்முறை மூண்டு செய்வார் ;

அந்நிலை நகரின் தென்கீழ்த்
    திசையுளாள் அளவி லாண்டு
மன்னிய நரைமூ தாட்டி
    ஒருத்திபேர் வந்தி யென்பாள். 1

செவியுண வான வேத
    சிரப்பொரு ளுணர்ந்து செந்தீ
அவியுண வூட்டு மீசன்
    அன்பரின் ஆற்ற நோற்ற
தவநிறை பேறு துய்ப்பாள்,
    தாயிலார்க் கன்னை யொப்பாள்,
சுவையுறு பிட்டு விற்றுண்
    தொழிலினள் தமிய ளாவாள். 2

வந்தி, தன் கரையின் பங்கை அடைப்பதற்கு ஆள் கிடைக்காமல் கடவுளை வேண்டுதல்

வளைந்தமெய் யுடைய அந்த
    மாதவ நரைமூ தாட்டிக்(கு)
அளந்தபங் கடைப்பான் கூலி
    யாள்கிடை யாமல் ஆற்றத்
தளர்ந்(து) 'இனி யென்னே! மன்னன்
    தண்டிக்கி னென்செய் கேனென்'(று)
உளந்தடு மாறிக் கூடல்
    உடையநா யகனை யுன்னும். 3

சிவபிரான் கூலியாளாய் வேடங்கொண்டு புறப்பட்டு வந்தி வசிக்கும் வீதிக்கு வருதல்

குறட்குநீ ரருத்தி வைகைக்
    குடிநுழையா யொழுகு கங்கை
அறற்குழல் பிரிவி னற்று(து)
    அன்பினு லவளைக் காண்பான்

மறக்கயல் நெடுங்க ணாளை
வஞ்சித்து வடிவ மாறிப்
புறப்படு வாரைப் போலப்
போதுவார் போத மூர்த்தி. 4

வேறு

அழுக்கடைந்த பழந்துணியொன்(று)
அரைக்கசைத்து விழுத்தொண்டர்
குழுக்கள் தந்த இண்டைநிகர்
சுமையடை மேற் கூடைகவிழ்த்(து)
எழுக்கடந்து திசைகடந்திட்(டு)
இணைகடந்த திருத்தோண்மேல்
மழுக்கடைந்து விளங்கியவாய்
மண்தொடுதிண் படையேந்தி, 5

ஆலுமறைச் சிரமுடையார்
அடிக்கமலம் நிலஞ்சூடக்
" கூலிகொடுத் தென் வேலை
கொள்வாருண் டோ!" என்றென்(று)
ஓலமறைத் திருமொழிபோல்
உரைபரப்பிக் கலுழ்கண்ணீர்
வேலையிடைப் படிந்தயர்வாள்
வீதியிடத் தணைகின்றார். 6

வந்திதரும் பிட்டுக்கூலிக்குப் பரமன்
ஆளாயினமை

அன்னையெனத் தன்பால்இன்
அருள்சுரந்து வருகாளை
தன்னையழைத்(து) "எனக்களந்த
கரையடைத்துத் தருவாயோ ?"
என்ன இசைத் தனளாக
"அடைக்கின்றே னெனக் கன்னை !
பின்னையதற் கிடுங்கூலி
யா(து) ?" என்றார் ; பெருமுதியாள், 7

"பிட்டிடுவே னுனக்கென்றாள்;"
அதற்கிசைந்து "பெரும்பசியால்
சுட்டிடநான் மிகமெலிந்தேன்;
சுவைப்பிட்டி லுதிர்ந்தவெலாம்
இட்டிடுவாய்; அதுமுந்தத்
தின்றுநா னிளைப்பாறிக்
கட்டிடுவேன் நின்னுடைய
கரை" என்றார் கரையில்லார். 8

தெள்ளியடு சிற்றுண்டி
சிக்கடைந்த பொதிநீக்கி
அள்ளியெடுத்(து) "அருந்தப்பா"
என்றிட்டாள்; அரைக்கசைத்த
புள்ளியுடைத் துகில்நீத்தார்
புறத்தானை விரித்தேந்தி
ஒள்ளியதென் றவளன்பும்
உடன்கூட்டி அமுது செய்தார். 9

"தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி யாளாக
வந்தஎனக் கொருதாயா யருள்சுரந்து மாறாத
இந்தவிளைப் பொழித்தனையே! இனிவேலைத் தலைச்சென்றுன்
சிந்தைகளிப் பெழவேலை செய்வேன்" என்றிசைத்தெழுந்தார். 10

வையைக் கரையில் பரமனார் விளையாடல்

வேறு

எடுத்தமண் கூடையோடும்
இடறிவீழ் வார்போ லாற்றின்
மடுத்திட வீழ்வார்; நீந்தி
வல்லைபோய்க் கூடை தள்ளி
எடுத்தகன் கரைமே லேறி
அடித்தடித் தீரம் போக்கித்
தொடுத்தகட் டவிழ்ப்பர்; மீளத்
துன்னுவர்; தொடுவர் மண்ணை. 11

வானத்தின் மண்ணிற் பெண்ணின்
மைந்தரிற் பொருளி லாசை
தானற்றுத் தமையும் நீத்துத்
தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே அன்றி
நாடருஞ் சோதி மண்ணோர்
ஊனக்கண் கொண்டும் காண
உடன்விளை யாடல் செய்வார். 12

பார்வையிட வந்த பாண்டியனின் கோபம்

எடுத்ததிண் கரைக ளெல்லாம்
இறைமக னுள்ளத் தோகை
மடுத்தனன் நோக்கிச் செல்வான்;
வந்திபங் கடைப்பா ரின்றி
அடுத்தநோன் கரையுங் கல்லி
அழித்தெழு வெள்ளம் நோக்கிக்
கடுத்துமின்(று) எங்குற் றான் இக்
கரைசுமந் தடைப்பான்?'' என்றான். 13

ஏவலாளிகள் வந்தியின் ஆளைப் பிடித்துவந்து மன்னனிடம் காட்டுதல்

வள்ளல்தன் கோபங் கண்ட
மாறுகோற் கையர் அஞ்சித்
தள்ளருஞ் சினத்த ராகித்
தடக்கைதொட் டீர்த்துப் பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலாய்
உயிர்தொறும் ஒளித்து நின்ற
கள்வனை "இவன்றான் வந்தி
யாள்" எனக் காட்டி நின்றார். 14

பாண்டியன் அடித்தலும் பரமசிவன் மறைதலும்

கண்டனன் கனன்று வேந்தன்
கையிற்பொற் பிரம்பு வாங்கி
அண்டமு மளவிலாத
உயிர்களு மாக மாகக்

கொண்டவன் முதுகில் வீசிப்
புடைத்தனன் ; கூடை யோடு
மண்தனை யுடைப்பிற் கொட்டி
மறைந்தனன் நிறைந்த சோதி. 15

பரமசிவன்மீது அடிபட்டபோது அடிபட்டவர்கள்

வேறு

பாண்டியன் முதுகிற் பட்டது செழியன்
பன்னிய ருடம்பினிற் பட்ட(து) ;
ஆண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட(து) ;
அரசிளங் குமரர்மேற் பட்ட(து) ;
ஈண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட(து) ;
இவுளிமேற் பட்டது ; பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்ட(து) ; எவ்வுயிர்க்கும்
போதன்மேற் பட்டஅத் தழும்பு. 16

சிவபிரான் ஆகாயவாணியால் அறிவித்தல்

வேறு

“ மறத்தாறு கடந்த செங்கோல்
வழுதி! நின் பொருள்க ளெல்லாம்
அறத்தாற்றின் ஈட்டப் பட்ட ;
அனையவை புனிதம் ; ஆன
திறத்தாலே நமக்கும் நம்மைச்
சேர்ந்தவர் தமக்கும் ஆர்வம்
உறத்தாவில் வாத வூரன்
உதவினன் ஆதலாலே. 17

“ அனையனை மறுக்கம் செய்தாய் ;
அரும்பிணப் புலவுத் தீவாய்
வனநரித் திரளை ஈட்டி
வாம்பரி யாக்கித் தந்தேம் ;
கனையிருட் கங்குற் போதிற்
கழிந்தன ; பின்னுந் தண்ட
வினையர்பால் விடுத்துத் துன்பம்
விளைத்தனை அதுபொ றுத்தேம். 18

"வருபுனல் பெருகப் பார்த்தேம்;
வந்திகைப் பிட்டு வாங்கிப்
பருகிவந் தாளாய் மாறு
பட்டனம்; மண்போ கட்டுப்
பொருகரை யுயரச் செய்து
போகிஅவ் அன்னை போல்வாள்
பெருகிய விடும்பை தீர்த்தெம்
பேருல கடையச் செய்தேம். 19

"நிறையுடை இவனை இச்சை
வழியினல் நிறுத்தி ஆன்ற
மறைவழி நின்று நீதி
மன்னர்க் களந்த வாழ்நாள்
குறைபடா தானச் செல்வ
வாரியுட் குளித்து வாழ்" கென்(று)
இறையவன் மொழிந்த மாற்றம்
இருசெவி நிரப்பத் தென்னன். 20

**பாண்டியன் தன் செயலுக்கு மிக வருந்திப்
பரமனைப் பலவாறு துதித்தல்**

வேறு

"அடையாளம் படவொருவன் அடித்தகொடுஞ் சிலைத்தழும்பும்
தொடையாக ஒருதொண்டன் தொடுத்தெறிந்த கல்லும்போல்
கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பும் உலகமெலாம்
உடையானே! பொறுத்ததோ? உன்னருமைத் திருமேனி. 21

"கைக்குமருந் தின்சுவையின் காட்டுமா றெனவினைக்கும்
பொய்க்குமருங் கலனகி மண்ணுண்டு புலைநரகம்
துய்க்குமருந் துயர்களைவான் மாறுய்நின் துணையடிக்கே
உய்க்குமருந் தவரிவரென் றறியாமை யொறுத்தேனே. 22

"அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்,
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட ஊனும்போல்
நன்று நரையாட்டி யிடுபிட்டும் நயந்தருந்தி
என்று மடியார்க்(கு)எளிவந்தாய் எந்தாயே!" 23

பாண்டியன் திருப்பணிசெய்து இன்புற்று வாழ்தல்

வேறு

என்றுபல முறையாலே துதித்தடைந்தோர்க்(கு)
அன்பரிவ ரிவரைத் தேறின்
நன்றுமிக பரபோகம் வீடுபெறல்
எளிதென்று நகைத்தார் வேந்தன்
அன்றுதிருப் பணிபூசை பிறவுநனி
வளம்பெருக்கி யழகார் வெள்ளி
மன்றுடையா னடிக்கன்பு முயிர்க்கன்பும்
சுரந்தொழுகி வாழு நாளில், 24

முன்புபெருந் துறையார்க்கும் அடியார்க்கும்
அறந்தெரிந்த முறையா லீட்டும்
தன்பொருள்போ யுடன்பலவாய்த் தழைத்துவரு
பயனேபோற் றலையு வாவின்
நன்பனிகான் மதிகண்ட வுவரியெனப்
பலசெல்வ நாளு மோங்க
இன்புறுவான் சகநாத னெனுமகப்பெற்(று)
இன்பத்து ளின்பத் தாழ்ந்தான். 25

—பரஞ்சோதி முனிவர்

---

4. கலிங்கத்துப் பரணி

படையெழுச்சி

கருணாகரத் தொண்டைமானது படைத்திறன்

கடல்க லக்கல்கொல்? மலையி டித்தல்கொல்?
கடவி டப்பொறிப் பணபணிப்
பிடரொ டித்தல்கொல்? படைநி னைப்பெனப்
பிரள யத்தினில் திரளவே. 1

பல வாத்திய ஒலிகள்

வளைக லிப்பவும் முரசொ லிப்பவும்
மரமி ரட்டவும் வயிரமாத்
தொளையி சைப்பவும் திசையி பச்செவித்
தொளைய டைத்தலைத் தொடரவே. 2

குடை முதலியவற்றைப் பிடித்தலால் பகல் கெட இருள் மூடுதல்

குடைநி ரைத்தலின் தழைநெ ருக்கலின்
கொடிவி ரித்தலின் குளிர்ச துக்கமொத் (து)
இடைநி ரைத்தலின் பகல்க ரப்பஉய்த்(து)
இருநி லப்பரப்(பு) இருள்ப ரக்கவே. 3

பற்பல ஒளிகளால் இருள் கெடுதல்

அலகில் வட்டிகை தழல்வி ழித்தலால்
அரிய பொற்பணிக் கலனெ றித்தலால்
இலகு கைப்படை கனல்வி ரித்தலால்
இருள்க ரக்கவே ஒளிப ரக்கவே. 4

மக்கள் நால்வகைச் சேனையைக்கண்டு அதிசயித்துக் கூறுதல்

அகில வெற்புமின்(று) ஆனை ஆனவோ ?
அடைய மாருதம் புரவி ஆனவோ ?
முகில னைத்துமத் தேர்க ளானவோ ?
மூரி வேலைபோர் வீர ரானவோ ? 5

பார்சி றுத்தலின் படைபெ ருத்ததோ ?
படைபெ ருத்தலின் பார்சி றுத்ததோ ?
நேர்செ றுத்தவர்க்(கு) அரிது நிற்பிடம்
நெடுவி சும்பலால் இடமு மில்லையே. 6

நால்வகைச் சேனைகள் பூமியை மறைத்து நிற்றல்

எனவெ டுத்துரைத்(து) அதிச யித்துநின்(று)
இனைய மண்ணுளோர் அனைய விண்ணுளோர்
மனந டுக்குறப் புறம றைத்த ; வான்
மாதி ரங்களைச் சாது ரங்கமே. 7

யானைப் படை

கடல்க ளைச்சொரி மலையுள வென இரு
கடத டத்திடை பொழிமத முடையன
கனல்வி ளைப்பன முகிலுள வெனவிழி
கனல்சி ன்த்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில உளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமி டிப்பன வடஅனல் உளஎன
ஒலிமு கிற்கட கரிகளு மிடையவே. 8

குதிரைப் படை

முனைக ளொட்டினர் முடிகளை இடறுவ
முடியின் முத்தினை விளைபுகழ் எனநில
முதுகில் வித்துவ நிலமுறு துகளற
முகில் மிதிப்பன முகில்விடு துளியொடு
கனைக டல்திரை நிரையென விரைவொடு
கடலி டத்தினை வலமிடம் வருவன
கடலி டத்(து) இறும் இடியென அடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடுகவே 9

தேர்ப் படை

இருநி லத்திடர் உடைபடும் உருளன
இருபு டைச்சிற(கு) உடையென முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி(து)
இவுளி முற்படின் இதுபரி பவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன விளையன
உயர்செய் மொட்டொடு நறுமலர் என அவிழ்(வு)
ஒழித ரச்செரு உறுபுனல் உமிழ்வன
உலக ளப்பன இரதமும் விரவவே. 10

காலாட் படை

அலகில் வெற்றியும் உரிமையும் இவையென
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவர்
அடிபு றக்கிடில் அமரர்தம் உலகொ(டு) இவ்

உலகு கைப்படும் எனினும(து) ஒழிபவர்
உடலை மக்(கு) ஒரு சுமையென முனிபவர்
உயிரை விற்(று) உறு புகழ்கொள உழல்பவர்
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே. 11

வீரர்களின் மறக்குணம்

விழித்த விழிகனல் விழித்த விருதர்கள்
விடைத்து வெடுவெடு சிரித்தவாய்
தெழித்த பொழு(து) உடல் திமிர்க்க இமையவர்
திசைக்கண் மதகரி திகைக்கவே. 12

சேனையின் செலவு

எழுதூளி யடங்க நடந்(து) உதயத்(து)
ஏகுந் திசைகண்(டு) அதுமீ ளவிழும்
பொழு(து)ஏ கல்ஒழிந் துகடற் படைஎப்
பொழுதுந் தவிரா துவழிக் கொளவே. 13

கருணாகரத் தொண்டைமான் என்னும் சேனைத்தலைவன் யானையின்மீது ஏறுதல்

தண்ணார்மலர் சேர்திரள் தோள் அபயன்
தானேவிய சேனை தனக்கடையச்
கண்ணாகிய சோழன் சக்கரமாங்
கருணாகரன் வாரண மேல்கொளவே 14

உதவிச் சேனைத் தலைவர் வேறு யானையின்மீது ஏறுதல்

தொண்டையர்க்(கு) அரசு முன்வருஞ்சுரபி
துங்க வெள்விடை யுயர்த்தகோன்
வண்டையர்க்(கு) அரசு பல்லவர்க்(கு) அரசு
மால்க ளிற்றின்மிசை கொள்ளவே. 15

வாசி கொண்(டு) அரசர் வார ணங்கவர
வாணர் கோவரையன் வாள் முகத்
தூசுகொண்டுமுடி கொண்ட சோழன்ஒரு
சூழி வேழமிசை கொள்ளவே. 16

—சயங் கொண்டார்

5 குசேலோபாக்கியானம்

குசேலர் வாழ்க்கை

சுசீலையின் தன்மை

மாசிலாக் குலத்து வந்தாள்,
வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள் கொண்கன்
நினைப்பறிந் தொழுகும் நீராள்,
தேசுறு வாய்மை உள்ளாள்,
சினந்திடல் என்று மில்லாள்,
பேசுதிண் கற்பு வாய்ந்தாள்,
பெற்றதே கொண்டு வப்பாள். 1

குசேலர், தன் மனைவியிடம் யாசித்தல் இழிவு எனல்

பல்லெலாந் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல வோட்டி
மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ!
இழிவிழி(வு) எந்த ஞான்றும். 2

சுசீலை தன் குழந்தைகளுக்கு உணவு போதாமை கண்டு துன்பம் அடைதல்

இற்றிவன் வாழ்க்கைத் தன்மை
இருபத்தேழ் மைந்த ருக்கும்
மற்றவப் பாகக் கஞ்சி
மட்குழி சியைப்பால் வைத்துச்
பற்றுகோ ரிகையால் மொண்டு
வாக்கிப் பற்றுமை கண்டு
வெற்றுடம் பாகி நிற்பள்;
மெலிவள்; பின் என்செய் வாளால். 3

OFFICE OF THE REGISTRAR
21 OCT 194
MADRAS

குழந்தைகள் உணவு பெற மன்றாடுதல்

வேறு

ஒருமகவுக் களித்திடும்போது ஒருமகவு
கைநீட்டும்; உந்தி மேல்வீழ்ந்(து)
இருமகவும் கைநீட்டும்; மும்மகவுங்
கைநீட்டும்; என்செய் வாளால்!
பொருமியொரு மகவழும், கண் பிசைந் தழுமற்(று)
ஒருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற்(று) ஒருமகவு! எங்
ஙனஞ்சகிப்பாள்; பெரிதும் பாவம். 4

"அந்தோ! என் வயிற் றெழுந்த பசியடங்கிற்(று)
இல்லை" யென அழுமால் ஓர் சேய்;
"சிந்தாத கஞ்சிவாக் கில்லையெனக்கன்
னாய்!" எனப்பொய் செப்பும் ஓர்சேய்;
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ
தினிலொருசேய் முடுகியீர்ப்ப
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய். 5

சுசீலை தன் குழந்தைகளுக்குச் சமாதானம் கூறுதல்

இவ்வண்ணம் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி யேங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்து, மடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்து,
மைவ்வண்ணக் கண்ணீரைத் துடைத்து, முகம்
வெரிந்புறந்தை வந்தும், ஆம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயத்(து)
ஓர்விதத்தில் ஆற்றல் செய்வாள். 6

சுசீலையின் அருங் குணம்

இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலுள்
அழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை அந்தணனை வெறுத்துரையாள்;
அலர்மொழிகள் சிறிதுஞ் செப்பாள்;

துவ்வாமை மைந்தர்கள் பால் மறந்தும் இயற்
றுள்; அவள் தன் சுகுண மென்னே:
"எவ்வாறித் துயர்க்கடல்நீந் துவம்" எனுமோர்
எண்ணமுளத்(து) என்றும் உண்டால். 7

சுசீலை வறுமையால் வாடி மனம்நொந்து கணவனைப் பார்த்துக் கூறுதல்

"கொழுந்துவிட் டெரியும் முத்தழல் வளர்க்கும்
கோதிலா முனிவ! நம் சிறுர்கள்
அழுந்துபட் டேங்க எழும்பசி யொழிக்க
அனமிலா துயங்கினர் அந்தோ!
முழங்குமீ ரொன்பான் புராணம் நன்(கு) ஓர்ந்தோர்
மூரலால் உயிர்நிற்கு மென்று
வழங்குவர்; அச்சொல் மறிதிரைக் கடல்சூழ்
மண்ணிடத் துண்மையே யாமே. 8

வறுமையின் கொடுமையினைச் சுசீலை கூறல்

"தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்;
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்;
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்;
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்;
தரித்திரம் அவமா னம்பொய்பே ராசை
தரும்; இதிற் கொடியதொன் றிலையே. 9

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை;
சாற்றுமெண் ணங்கள்வாழ் இடமாம்;
தரித்திரம் பற்பல துக்கமும் தோன்றத்
தக்கபே ராகர மென்ப;
தரித்திரம் நன்மை சாலொழுங்(கு) என்னும்
தழைவனந் தனக்(கு) அழல் தழலாம்;
தரித்திரங் கொடிய எவற்றினுங்கொடி(து); அத்
தகையதை ஒழித்தல்நன் றுமே. 10

சுசீலை தன் கணவனிடம் 'செல்வம் வேண்டிக் கண்ணனிடத்துச் செல்க' எனல்

"யாதவர் குலத்தில் தோன்றிய அரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார்;
ஆதலின் அப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந் தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநஞ் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும். 11

"இளமையில் நின்னோ டிருங்கலை கற்ற
ஏழிலிபோல் வண்ணனிற் கண்ட
அளவையே யெல்லாப் பேசரும் வளமும்
அளிக்குவன்; ஐயம தின்றால்;
பளகறு நேசன் ஒருவனைப் படைத்தல்
பருந்தனப் பொதிபெற்றாற் போன்மென்(று)
உளமிகத் தெளிந்தோர் புகலுநன் மாற்றம்
உண்மையாம்; பொம்மையா காதே. 12

"கண்ணனைத் துளப மாலிகை நிறத்திற்
கமலைவாழ் தரவருள் புரிந்த
மண்ணிய மணியைத் தினந்தினம் போற்றும்
மாசறு தவத்தினர் உள்ளத்(து)
எண்ணிய வெண்ணி யாங்களிப் பவனை
எய்திநஞ் சிறாருய்ச் செல்வம்
நண்ணிவா" என்ற நங்கைசொற் றிடலும்
நற்றவக் குசேலனீ துரைக்கும்: 13

குசேலர் தன் மனைவிக்கு யாவும் விதியின்படி நடக்கும் எனல்

வேறு

"மக்களுக் கிரங்கி வாடும்
மடத்தகை யணங்கு! கேட்டி;
தக்கமுற் பவத்தில் ஆன்ற
தருமம்நன் கியற்றி னோர்கள்

ஒக்கவிப் பவத்தில் இன்பம்
ஒருங்கனு பவிப்பவர் ; இன்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வர் ;
இதற்குளம் மெலித லென்னே ? 14

"மைந்தர்கள் தம்மைப் போற்ற
வளநிதி வேண்டும் என்றாய் ;
நந்திய பறவை கானம்
நயந்துறை விலங்கு முன்னா
வந்தபல் லுயிர்க்குச் சேம
வைப்புண்டோ? வருவாய் உண்டோ?
எந்திடத் தேனும் போய்ஒன்(று)
இரப்பது தானும் உண்டோ? 15

"நல்லினுள் சிறுதே ரைக்கும்,
கருப்பையண் டத்து யிர்க்கும்,
புல்லுண வளித்துக் காக்கும்
புனத்துழாய்க் கண்ணி யண்ணல்,
ஒல்லுமின் மைந்தர்க் காவா(து)
ஒழிவனோ? ஒழியான் ; உண்மை ;
மெல்லியல்! கொண்ட துன்பம்
விடுவிடு ; மறந்தும் எண்ணல். 16

செல்வத்தின் இழிவினைக் கூறுதல்

"சிறியரே மதிக்கும் இந்தச்
செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
வாயுள்ளார் மூக ராவர் ;
பறியணி செவியு ளாரும்
பயில்தரு செவிட ராவர் ;
குறிபெறு கண்ணு ளாரும்
குருடராய் முடிவர் அன்றே? 17

செல்வம் என்றதன் உட்பொருளைக் கூறல்

“பல்கதிர் விரித்துத் தோன்றிப்
பாடுசெய் கதிரே போல
மல்லல்நீர் உலகில் தோன்றி
மறைந்திடும் ‘ நும்மை விட்டுச்
செல்வம்’ என்(று)உறு வதற்குச்
செல்வம் என்றுரைக்கும் பேர்நன்(று);
அல்லலை விளைப்ப தாகா(து)
அரும்பெறற் செல்வம் பாவாய்! 18

தரித்திரம் என்றதன் உட்பொருளைக் கூறல்

“தரித்திர மென்று பல்காற்
சாற்றினை ; எதிர்ம றுத்தல்
பரித்திடும் அச்சொல் தன்மைப்
பன்மை முற்றுக வல்லோர்
விரித்துரை பொருள்நீ சற்றும்
விளங்கிட உணர்ந்தாய் அல்லை ;
அரித்தடங் கருங்கண் மாதே !
ஆதலின் நிலைத்த(து) அன்றால். 19

குசேலர் தம் உள்ளக் கருத்தை அறிவித்தல்

“பாற்கடல் அடுத்த மீனப்
பால்விரும் பாது மற்ற
ஏற்குமா விரும்பி னாற்போல்
எம்பிரான் திருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கும் இன்பச்
செல்வத்தை நண்ணி டாமல்
சேற்கருங் கண்ணாய்! துன்பச்
செல்வமோ நண்ணு வேன்யான் ?” 20

[பின்னர்க் குசேலர் கடவுளைத் தியானித்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்.]

—வல்லூர் - தேவராஜப் பிள்ளை

---

6 அரிச்சந்திர புராணம்

மயான காண்டம்

காசி மன்னனது பிள்ளையைக் கொலை செய்ததாகப் பொய்க்குற்றஞ் சாட்டப்பட்ட சந்திரமதியைக் கொலைக் களத்திற்குக் கொண்டு செல்லக்கண்ட நகர மாந்தர் கூறுதல்

"கையோ செழுங்கமலம், முகமோ நிறைந்தமதி,
காலோ இளஞ்சினைவரால்,
மெய்யோ கலாபமயில், இடையோ நுடங்குகொடி,
விழியோ கடைந்தவடிவேல்,
மையோ சுருண்டகுழல், இதழோ செழும்பவழம்,
வனிதைக்(கு), எனப்புகலுவார்;
'அய்யோ! இவட்குவிதி கொலையோ!' எனக் கதறி
அழுவார்; அறைந்துவிழுவார். 1

'தவளத் திருத்தரள நகையும், சிறந்தவிரு
தனுவைப் பழித்தநுதலும்,
பவளத்தை யொத்ததனி இதழும் படைத்த விதி
பதறிப் படைத்த துளதோ!
கவளக் களிற்றரசன் உலகத் துயிர்க்குதவு
கபடற் றிரக்க முடையோன்
இவளைக் கொலக்கருதி இவர்கைக் கொடுத்ததிறம்
யா(து)?' என் றிரங்கிஅழுவார். 2

'அழியாத காசிபதி மகனைவி யுண்டஇவள்
அநியாய காரி; அசடி;
பழிபூணி; இங்ககலின் எளிதாய் விடாதுநமர்
பலராவி யும்பருகுவாள்;
விழியால் எறிந்துமுயிர் கவர்வாள்; முகத்திலெதிர்
விழியாது நில்லும்' எனவே
மொழிவார்; 'வதைத்திடுதல் பொருளாக அற்பமனம்
முசியாள்' எனப்பகருவார். 3

'தப்பாது மன்மகனை உயிர்கொண்டு திரமுண்ட
தறுகண் அரக்கிகமர்தம்
கைப்பாச முற்றுவர வலளோ? விசும்பினிடைக்
கரவாதி ருத்தல் இலளே ?
அப்பால னைக்கறுவி இவள்கொன்ற தோ ; அலதி
யார்கொன் றதோ தெய்வமே!
இப்பாவி தன்தலையில் வைத்தாய் உனக்குநடு
இலையோ' எனப்புகலுவார். 4

'தனியாய பாவிகுறை எவர்போய் உரைத்திடுவர் ?
தருமா ல்யப்புரவலன்
அனியாயம் என்றுசிறி துணராதோர் பெண்பழியை
அவமே கொளக்கருதினன் ;
இனியார் இரங்குபவர்' எனவே அலைந்துவயி(று)
எறியா உலைந்துசுழல்வார் ;
கனிவாய் புலர்ந்துநிலை தளர்வார் ; கலங்கிஉடல்
கரைவார் ; புலம்பிஅழுவார். 5

'பதியேது ? பாவிஇவண் வரவேது ? வந்துபெறு
பலனேது ? பாவம்நிகழ்பெண்
மதியேது ? இத்தனையும் விளைவித்த தேதெ'ன்று
மறுகா மருண்டுவிழுவார் ;
'விதியே! அறக்கொடியை; எளியாள் தனைக்கறுவி
விலைகூறி விற்றதுமலால்,
சதியே விளைத்தனை இ(து) அறமோ?' எனச்சிலர்கள்
தளர்வார்; முகத்தில்அறைவார். 6

'அங்கே அடித்தவடி அங்கே அலைக்குமலை
அல்லாமல் எய்துகொலையும்
பங்கே ருகத்தினறு மலர்போல் விளங்குமுகம்
அறியாத பாவை அனையாள் ;
எங்கே பிறந்தனள் கொல்! எங்கே வளர்ந்தனள் கொல் !
எங்கே இருந்தனள்கொலோ !
இங்கே இறந்தவிய வந்தாள்' எனப் பலரும்
இடைகின்ற எல்லை தனிலே. 7

அரிச்சந்திரன், சந்திரமதியைக் கொண்டு நகர்ப்புறம் அடைதல்

வேறு

'என்ன பாதகம் செய்தனம் என இறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப் புரிசையின் புறத்துவந் திறுத்தான்.

கௌசிகன், அரிச்சந்திரனைப் பொய்யுரைக்குமாறு தூண்டுதல்

அந்த வேளையில் கவுசிகன் விரைந்துவந்(து) 'அரசே!
இந்த நோதக வெய்தல்என்? எனக்கு நீ முன்னம்
தந்த நாடி "யான் தந்திலேன்" எனுமொழி சாற்றி
உந்தம் நாடும்இவ் வுயிர்களும் பெறு'கென உரைத்தான். 9

அரிச்சந்திரனும் சந்திரமதியும் கௌசிகனுக்கு எதிருரைத்தல்

'சேய்மை அண்மையில் உயிர்க்கொரு துணைஎனச் சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம்; மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால் சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் குறிதி. 10

'புலைய னும்விரும் பாதஇப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்;
கலையு ணர்ந்தநீ எமக்கிது கழறுவ தழகோ? 11

'இம்மை அம்மைவீ டெனமறை புலங்கொள இயம்பும்
மும்மை யும்தரும் முறையுடைத் தெனும்நிலை முரணி
எம்மை ஆழ்வயிற் றடக்கி, நீ டுமிழ்கலா எரிவாய்
வெம்மை கூர்நர குய்க்கினும் மெய்ம்மையை விடேமால். 12

'பதியி ழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; இனி நமக்குள தென நினைக்குங்
கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேம்' என்றார்;
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். 13

அரிச்சந்திரன் சந்திரமதியைக் கொண்டு மயானத்தை அடைதல்

வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கைப் பற்றிப்
பேசத் தான்பெருன் பிணஞ்சுடு கோலினால் தள்ளி
நேசத் தார்மகன் கிடந்ததோர் நெடுநிலஞ் சேர்ந்தான். 14

'வழக்கின் என்றும்நீ வழிபடு கடவுளை வணங்கிக்
கிழக்கு நோக்கியீண் டிரு' எனக் கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப் பரவி, 'என் ஆவி
இழக்கற் கஞ்சி நீ அறம் வழுவேல்' என இயம்பும். 15

சந்திரமதி அரிச்சந்திரனைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுதல்

'பொருந்தும் நீத்தத்தில் புற்புத வாழ்வை நீ மெய்யென்(று)
அருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ ! வழிவழி சிறக்'கென வாழ்த்தி
இருந்த பின்சுடர் வாட்படை வலக்கையின் எடுத்தான்.

சத்தியம் வெல்லுதல்

'உலகு யிர்க்கெல்லாம் பசுபதி ஒருமுதல் ஆயின்,
அலகில் சீருடை அவன்மொழி மறையெனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மையீ டிலதேல்
விலகு ருமலவ் வாய்மையை விரதமாக் கொளின்யான். 17

'நெறியின் அன்னவன் றனைவிடா நிறைஇவட் குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக; அன்றெனின் இவள் இறுதி
பெறுக' என்றுவாள் வீசினன் ; பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்த(து) அவ் வடிவாள். 18

—நல்லூர் - வீர கவிராயர்

IV சிறு நூல்கள்

1 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை யகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக்கோ யிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென்பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக, வருகவே.

—குமரகுருபர சுவாமிகள்

---

2. திருவரங்கக் கலம்பகம்

மறம்

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறைஉடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியாய் போலும்
மற்றதுதான் திருமுகமே யானு லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே? மன்னர் மன்னன்
பெற்றவிள வரசானுல் ஆலின் கொம்பைப்
பிறந்தகுலத் துக்கேற்கப் பேசு வாயே.

பேச வந்த தூத! செல்ல ரித்த ஓலை செல்லுமோ? [லே
பெருவ ரங்கள் அருள ரங்கர் பின்னை கேள்வர் தாளி
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்ன
பட்டமன்னர் பட்ட தெங்கள் பதிபுகுந்து பாரடா;[மே
வாச லுக்கி டும்ப டல்க வித்து வந்த கவிகை; மா
மகுட கோடி திணைய ளக்க வைத்த காலும் நாழியும்;
வீசு சாம ரம்கு டில்தொ டுத்த கற்றை; சுற்றிலும்
வேலியிட்ட தவர்கள் இட்ட வில்லும் வாளும்வேலுமே.

—பிள்ளைப் பெருமாளையங்கார்

---

3. கோயில் நான்மணிமாலை

அறிவி லொழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநக ரொருதுறை நீத்தத்துப்
புலனெனும் கோள்மின் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்
துயர்த்திரை உவட்டிற் பெயர்ப்பிட மயர்த்துக்
குடும்ப மென்னு நெடுங்கடல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனு நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக!
தொல்லெயி லுடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை யம்பல வாண! நின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்துமா செய்யே. 4

—பட்டினத்தார்

---

4 பாரி கதை

முல்லைக்கொடிக்குத் தேர் அளித்தல்

வேள்பாரி வனத்துள் நுழைதல்

தேந்தண் துளிசிதறித் தென்றல் அடிவருட
மாந்து மணமெதிர வண்டிசைக்க—கூந்தல்
மயிலாடக் கிள்ளை மகிழ்மிழற்றப் புக்கான்
அயிலாடல் வேள்கான் அகத்து. 5

வனத்தின் வளம் காணுதல்

செழியாத் தழைகான் திருவிருந்து செய்ய
விழைவாற் பருகி வியந்தான்—கழியாத
காதல் விளைக்கக் கடவுள் படைத்தளிக்கும்
தீதில் வனப்பின் திறன். 6

முல்லைக்கொடிக்கு இரங்குதல்

காடு கமழுங் கடிமுல்லைப் பைங்கொடிவெம்
பாடு தெரிந்து பருவந்தான்—நீடுதுயர்
ஓவத்துக் கண்டாலும் உள்ளுருகும் வள்ளலுயிர்
ஆவத்துக்(கு) என்படான்? ஆங்கு. 7

முல்லைக்கொடியின் துயரை உணர்தல்

மக்களுடம்பின் வழியுயிர்க்கும் சார்புபெறா(து)
உக்க கொடியின் உயிர்க்கும்மிடர்—ஒக்கும்;
பொறிகுறைந்தும் முல்லை புலங்குறைந்த தில்லென்(று)
அறிவறிந்தான் வெளிவேள் ஆய்ந்து. 8

முல்லைக்குத் தேர் கொடுத்தல்

'சார்பு பெறாது தளர்ந்தோர் நடுக்கமி(து)' என்(று)
ஓர்பு மணித்தேர் உவண்விடுத்துப்—பாரடைந்தான்;
ஓர்பொறி யுற்ற உயிர்மாட்டும் இன்னருளான்
ஆரஞர் உற்ற அரசு. 9

—மகாவித்துவான் ரா. இராகவையங்கார்.

5 நீதிநூல்

பெற்றோர் வழிபாடு

சின்னவோர் பொருள்தந் தோரைச் சீவனுள் ளளவு முள்ளத்(து)
உன்னவே வேண்டுமென் றுரைத்தனர் பெரியோர்; தேகம்
தன்னை ஆருயிரைச் சீரார் தரணியின் வாழ்வைத் தந்த
அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைம்மா றுளதோ? அம்மா.

பொய்

முன்னமோர் பொய்யுரைக்க, அப்பொய்வெளி
யாகாமல் மூடும் வண்ணம்
பின்னுமோர் பொய்யுரைக்க, அந்தையும்நிலை
நிறுத்திடவோர் பெரும்பொய் சொல்ல
இன்னவகை கைதவமொன் றிருநூறு
கைதவத்துக் கிடமாம்; வாய்மை
தன்னையே முன்பகரில் சங்கடமொன்(று)
இலை; அதுவே தகைமை நெஞ்சே! 11

—வேதநாயகம் பிள்ளை

---

6 தமிழ்விடு தூது

1. மண்ணிற் புகழுருவாய்
வாழ்வதற்கும் வாழூநர்
விண்ணிற்போய்த் தேவுருவாய்
மேவுதற்கும்—எண்ணியுனைக்

2. கொண்டுபுகழ் கொண்டவர்க்கே
கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே
தோன்றுமால்—தண்டமிழே!

3. ஈங்குனது சங்கத்தால்
ஈசர் உயர்ந்தாரோ?
ஓங்குமவ ரால்நீ
உயர்ந்தாயோ?—பூங்கமல

4. வீடாளும் வாணியங்கை
மேலே இருந்தாயோ?
ஏடாக வுன்மேல்
இருந்தாளோ?—ஆடரவத்

5. தாழ்பாய லாளரைநீ
தானே தொடர்ந்தாயோ?
சூழ்பாயோ டுன்னைத்
தொடர்ந்தாரோ?—வாழ்வே! என்(று)

6. ஓதிமுனி கேட்க
உனைமுருகர் சொன்னாரோ?
சோதி யவரைநீ
சொற்றனையோ?—பேதியா

7. நேசருனக் கேபொருளாய்
நின்றாரோ? நீண்மதுரை
வாசருக்கு நீபொருளாய்
வந்தாயோ?—பாசமுறும்

8. என்செய்தி நீகண்(டு)
இரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானோ?
உரைசெய்வேன்!—இன்சொல்லாய்!

9. கற்க கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத்
தகவென்ற—சொற்குள்ளே

10. எல்லார்க்கும் புத்தி
இயம்பிக் கரையேற்ற
வல்லாய்! உனக்குரைக்க
வல்லேனோ!—சொல்லியஉன்

11. ஈரடிக்குள் ளேயுலக
மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே
நிலனுண்டோ?—ஓரடிக்கோர்

12. ஆயிரம் பொன்னிறைக்கும்
ஐயரை வீதியிலே
போயிரந்து தூதுசொல்லப்
போக்கினோ - யாயிருந்தும்

13. மாண்பாயோர் தூதுசொல்லி
வாவென் பேன் என் வருத்தங்
காண்பாய்என் பெண்மதிநீ
காணாதே— 12

---

7 நன்னூல்

மாணாக்கரின் வகை

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம்ஆ டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர். 13

மாணாக்கராகாதவர்

களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே. 14

நூற்பயிற்சி

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். 15

புலமை நிரம்பும் வகை

ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே. 16

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும். 17

ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றலன் ஆகும். 18

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்வியின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும். 19

—பவணந்தி முனிவர்

V தனிப் பாடல்கள்

பாணாற்றுப் படை

“தேரு லேப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்னன்! நின்
தேய மேதுனது நாம மேதுபுகல்?”
“செங்கை யாழ்தடவு பாண! கேள்;
வாரு மொத்தகுடி நீரும் நாமுமக
தேசன் ஆறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேகும்; அவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்கு முயர் வேம்பு நிற்கும்வளர்
பனையு நிற்கு மத னருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்த சில
அத்தி நிற்கு மடை யாளமே.” 1

—கம்பர்

உடற் பயிற்சி

சிலம்பமுதல் மல்யுத்தம் தேசிநடை கொள்ளில்
பலம்பரவும்; மெய் இறுகும்; பன்னத்—துலங்குபசி
உண்டாம்; கபவாத மோடுவலி சூலையும்போம்;
பண்டாம் மலமிறங்கும் பார். 2

பதார்த்தகுண சிந்தாமணி

சகோதர அன்பு

செஞ்சுடரோன் மைந்தனையும், தென்னிலங்கை வேந்தனையும்,
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே;—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார். 3

—வரதுங்கராம பாண்டியன் மனைவி

பதினாறு பேறு

துதிவாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்
அதிதானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம், குலம், நோவகல், பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே. 4

—காளமேகப் புலவர்

துஷ்டருக்கு இல்லாக்குணம்

ஞானம் பெருமை நயம்கருணை உண்மையபி
மானம் பொறுமை வணக்கம் உயர்—தானமுடன்
சற்குணம் ஆசாரம் தருகல்வி நீதிநெறி
துர்க்குணருக் கில்லென்றே சொல்.

—அருணசலக் கவிராயர்

ஊனுண்போரைப் பழித்தல்

தேனேடும் ஊனுண் ணும் மானுடர்க் கஞ்சிச் சிவன்கரத்தில்
மானேடிப் புக்கது ; அயம்கோழி யோடின மைந்தனிடம்;
மீனேடிப் புக்கது விண்ணினும் சிந்தினும் ; வெவ்விலங்கும்
வானேடி யேபல ராசிக ளாயுயிர் வாழ்ந்தனவே. 6

—வேதநாயகம் பிள்ளை

ஆடைச் சிறப்பு

மேலாடை யின்றிச் சவைபுகுந் தாலிந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண் ணார் ; நுவல் பாற்கடலோ,
மாலா னவர் அணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே. 7

—நையாண்டிப் புலவர்

உண்மைத் தத்துவம்

ஒன்றுகக் காண்பதே காட்சி ; புலனைந்தும்
வென்றான் தன் வீரமே வீரமாம் ; என்றாலும்
சாவாமற் கற்பதே கல்வி ; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே உண்.

—ஔவையார்

புண்ணுக்குப் புண் காட்டியது

வஞ்சகர்பால் நடந் தலைந்த காலிற் புண்ணும்
வாயில்தொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா ;

கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லால் அடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்றான் பரமன் றானே. 9

வறுமைத் துன்பம்

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ! எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே. 10

—இராமச்சந்திர கவிராயர்

அறிவுடையோர் உயர்வினை அற்பர் அறியார்

"வாரும்; நீர் யார்?' என்ன, 'வித்துவான்' என்னவும்
'மதிமோசம் வந்த'தென்றே
வாய்குளறி மெய்யெலாம் மிகநடுக் குற்று, 'நீர்
வந்தகா ரியமே தெ'னச்
'சீருலா வியகாம தேனுவே! தாருவே!
சிந்தா மணிக்கு நிகரே!
செப்புவச னத்தரிச் சந்த்ரனே!' என்னலும்
சினந் திருக ணுஞ்சிவந்தே
'ஆரைநீ மாடுகல் மரமென்று ரைத்ததும்
அலாதரிச் சந்த்ரனென்றே
அடாதசொல் சொற்றனை! யார்க்கடிமை யாயினும்?
யார்கையிற் பெண்டை விற்றோம்?
தீருமோ இந்தவசை ?' என்றுரைசெய் ஈயாத
தீயரைப் பாடி நொந்தேன்
திருமன்றுள் நடுநின்று நடமொன்று புரிகின்ற
தென்றில்லை நடராசனே!

—அட்டாவதானம், சரவணப்பெருமாள் கவிராயர்

———

VI பல்வகைச் சுவைகள்

1 திருக்குற்றால மலையின் வளம்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் ;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் ;
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார் ;
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார் ;
தேனருவி திரையெழும்பி வானின்வழி ஒழுகும் ;
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்;
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே. 1

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும் ;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்;
கிழங்குகல்லித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம் ;
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை இடிப்போம்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும் ;
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும் ;
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே. 2

ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும் ;
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும் ;
வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும் ;
காடுதோறும் ஓடிவரை யாடுகுதி பாயும் ;
காகமணு காமலையில் மேகநிரை சாயும் ;
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூட மலையெங்கள் மலையே. 3

—திரிகூட ராஜப்ப கவிராசர்

2 மழைத்தாரையும் அருவியும்

புள்ளி மால்வரை பொன்னுல கிடத்(து) எடுத் துய்த்தல்
உள்ளி வான்விடும் வடமெனத் தாரைகள் ஒழுக
வெள்ளி நீள்தொடர் விசித்தகைப் பிடித்தெனச் சூழத்
துள்ளி வீழுயர் தூங்கிய அருவியின் தோற்றம். 4

—வீரமா முனிவர்

3 பெண்களின் பெருமை

மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா! 5

உள்ளந் தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளி யெடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார்? 6

நீதிநெறி நில்லா வம்பருமே—நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவரார்?
ஓதிய மான மிழந்தவரை—உயர்
உத்தம ராக்க முயல்பவரார்? 7

ஆவி பிரியுமவ் வேளையிலே—பக்கத்(து)
அன்போ டகலா திருப்பவரார்?
பாவி யமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவரார்? 8

அன்பினுக் காகவே வாழ்பவரார்?—அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்ப வுரைகள் தருபவரார்?—வீட்டை
இன்னகை யாலொளி செய்பவரார்? 9

—சி. தேசிக விநாயகம் பிள்ளை

---

4 கானகம்

முட்புதர்கள் மொய்த்த தரை எங்கும்—எதிர்
முட்டுகருங் கற்களும்நெ ருங்கும்—மக்கள்
இட்டடி யெடுத்தெடுத்து
வைக்கையிலே கால்களில்த டுக்கும்—உள் நடுங்கும். 10

கிட்டிமர வேர்கள்பல கூடும்—அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும்—மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும்—பின் வாடும்.

நீள்கிளைகள் ஆல்விழுதி னோடு—கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு—கூர்

வாளெயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவருங் காடு—பள்ளம் மேடு. 12

கேளொடும் கிளம்பிவரும் பன்றி—நிலம்
கீண்டுகிழங் கேயெடுத்த தன்றி—மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ள நரி குன்றில்—புகும் ஒன்றில். 13

வானிடையோர் வானடர்ந்த வாறு—பெரு
வண்கிளை மரங்களென்ன வீறு—நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு—இன்பச் சாறு. 14

கானிடைப் பெரும்பறவை நோக்கும்—அது
காலிடையே காலிகளைத் தூக்கும்—மற்றும்
ஆனினம் சுமந்தடி
ஆறெனவே பால்சுரந்து தீர்க்கும்—அடை ஆக்கும். 15

—பாரதிதாசன்

5 தமிழ்நாடு

வேங்கடமே தென்குமரி வேலைஎல்லை நாடு
மென்மைகன்னி இனிமைகனி மேன்மைபொழி நாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றலுமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு
பாவளர்த்த வைகையொடு பழம்பொருநை நாடு
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு
சிற்றேடை கால்பரந்த செய்யதமிழ் நாடே. 16

'யாதும்ஊர் எவருங்கேளிர்' என்றுணர்ந்த நாடு
'எவ்வுயிர்க்கும் அன்புசெய்க' என்றிசைத்த நாடு
ஓது'குலம் தெய்வம்ஒன்றே' என்றுகொண்ட நாடு
ஒக்கு 'முயிர் பிறப்பென்னும்' ஒருமைகண்ட நாடு
நாதன் 'அன்பு நீதிஇன்பு நட்(பு)' என்ற நாடு
'நாமார்க்குங் குடியல்லோம்' என்றிருந்த நாடு
தீதில்லா மொழிவளர்க்கத் தெளிவுபெற்ற நாடு
'செந்தண்மை' விருந்தளிக்கும் தெய்வத்தமிழ் நாடே.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

OFFICE OF THE REGISTRAR
21 OCT 194
MADRAS

வசனப் பகுதி

1 இசை இன்பம்

[மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், D.LITT.]

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே தமிழர் முத்தமிழுள் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்திருக்கின்றனர். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப்பட வேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாத தென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலியன உடையரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனல், இசையோ, கற்ருர், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை உயிர்களும், இசையின் வயப்பட்டு நின்றன வென்பது பல இடங்களிற் கூறப்பட்டுள்ளது.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு 'போது' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவரும் பிறரும் சிற்சில போதுகள் மலர்வதாற் காலத்தை யறிந்துவந்தனர். 'நள்ளிருள் நாறி' என்றெரு மலர் உண்டு. அது நடுயாமத்திற்ருன் மலரும். சூரியன் மறைந்திருப்பினும் அது மலர்வதாலும், குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின், போதெனப் பெயர் பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட அவை மலரும்; "முல்லை, வரிவண்டூத வாய்நெகிழ்ந்தனவே," என்பது குறுந்தொகை. பாம்பு இசைக்கு அடங்கும் என்றும் கூறப்படுகின்றது. மதம் பிடித்து அலையும் யானைகளும் இசையினல் அடங்கிவிடும்; பரிக்கோல், குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்கமுடியாத ஒரு யானை, வீணை இசைக்கு அடங்கி

விடுவது உவமானமாகக் "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தங்கி யாங்கு" எனக் கலித்தொகை என்ற சங்க நூலிற் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் "அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணியொலி வீணையும்," என்று பெருங்கதையிலும், "மகரயாழ் வல்ல மைந்த னொருவனைக் கண்ட மத்தப், புகர்முகக் களிற்றின்" என்று மேருமந்தர புராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின் றன. அகநானூற்றில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்கும் ஒரு பெண், தெள்ளிய சுனையில் நீராடிப் பரண் மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக் கொண்டு மிகுந்த களிப்புடன், அந்நிலத்துக்குரிய குறிஞ் சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில் தினைக்கதிரை உண்பதற்காக அங்கே வந்த யானை யொன்று அந்தப் பண்ணின் இசையில் மயங்கிக் கதிரை யுண்ணுமல், தான் கொண்ட பெரும் பசியையும் மறந்து, மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. இந்தக் காட்சியையே,

> "ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
> மறம்புகன் மழகளி றுறங்கும் நாடன்"

என்ற அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி என்ற மதம் பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி, அதன்மேல் ஏறி, ஆயுதங்களை அதையே எடுத்துத் தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படு கின்றது. இசையினல் வணக்கப்பட்ட அந்த யானை உத யணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில், 'குருவினிடத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன்போல் யானை படிந்தது' என்னும் பொருள்பட, "வீணை கெழீஇ வீதியி னடப்ப, ஆணையாசாற் கடியுரை செய்யு, மாணி போல மதக்களிறு படிய" என்று பாடியுள்ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் உதயண குமார காவியம் செய்தவர்

இங்கே தந்தையைக் கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிறார்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணபிரானார் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளையாடிக்கொண்டிருந்த கண்ணபிரானார், மாலைக்காலத்திற் பசுக்களை ஆயர்பாடிக்கு ஓட்டிச்செல்ல வேறு ஏதும் செய்வதில்லை; குழலையெடுத்து ஊதுவார்; உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு அவர்பால் வந்து சேரும். இதனையே "ஆக்குவித்தார் குழலா லரங்கேசர்" என்று திவ்ய கவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுள் ஆனாய நாயனாருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படுகின்றன.

அசுணமா வென்றொரு விலங்குண்டு. அதைப் பறவையென்பாரு முளர். அஃது இசையை அறிவதிற் சிறந்தது; இனிய இசையைக் கேட்டுக் களிக்கும்; இன்னா இசையைக் கேட்பின், மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்து, இருங்கல் விடரளையசுண மோர்க்கும்" என்ற அகநானூற்றடிகளாலும், "இன்னளிக் குரல் கேட்ட வசுணமா வன்னளாய் மகிழ்வெய்துவித்தாள்," என்ற சிந்தாமணிப் பாடலாலும், "யாழ், நறையடுத்த வசுண நன் மாச்செவிப் பறையடுத்தது போலும்." என்ற கம்பர் வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க எண்ணியவர்கள் செடிமறைவிலிருந்து யாழ்வாசிப்பவர்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்குமென்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக்கொள்ளுவார்களென்றும் தெரிகிறது. அவர்கள் கை முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத்தாள்கையில், "அசுணம் கொல்பவர் கைபோலன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டிமாடு கபிலை ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்போது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவைகளைக் கேட்டு அவ்விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன் பாங்குபோலும்! குழந்தைகள் அன்னையரின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை யோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ்செயலை மறந்து இசைவயத்தராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப்படுகின்றது: பாலை நிலத்தில் ஆறலை கள்வர் வழி வருவோர் பொருளையும் உயிரையும் கவர்வர்; பொருளில்லையெனினும், வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர்முன் பொருநர் பாலைப் பண்ணைப் பாடினால், அக்கள்வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தம் வன்றொழிலை மறந்து இன்புற்று இசைக்கு உருகுவாராம். இதனையே, "ஆறலை கள்வர் படைவிட வருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதாநாயகனான சீவகன், ஆண்களைப் பார்ப்பதுமில்லை யென்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று, இசைபாடி, அவளை வசப்படுத்தினன். அவன் இசையைக் கேட்ட பெண்டிர் யாவரும் வேடன் பறவை போலக் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப் போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத்தில் வருணிக்கிறார்:

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத வீதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழைம லர்த்த டங்கணார்

> புள்ளி வம்ம திம்மகன் புணர்த்த வோசை மேற்புகன்(று)
> உள்ளம் வைத்த மாமயிற் குழாத்தி னேடி யெய்தினர்''

என்பது அந்தப் பாட்டு.

இசை பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்ததுண்டு. சிறந்த சங்கீத வித்துவானும் மகா சிவபக்தரும் ஆகிய கோபாலகிருஷ்ண பாரதியாரவர்கள் தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினார்கள். அதில் பிழைகள் காணப்பட்டமையாற் 'சிறப்புப் பாயிரம் தரமாட்டோம்,' என்று பிள்ளையவர்கள் மறுத்து விட்டார்கள். மறுத்தும், பாரதியார் முயன்றே வந்தார். ஒருநாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது, அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியார் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறார்களென்பதையறிந்து எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தேயிருந்து, தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள, "கனக சபாபதி தரிசனம் ஒரு நாள் கண்டாற் கலி தீரும்,'' என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும்பாடும் வரையில் இருந்து கேட்டு, மனமுருகி, "இதற்குச் சிறப்புப் பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று,'' என்று உடனே வந்து சிறப்புப்பாயிரமொன்றை வழங்கினார்கள்.

ஈசுவரரே இசையின் வடிவமா யிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். "ஏழிசையா யிசைப்பயனாய்,'' "இயலவன் இசையவன்,'' "இயலிசைப் பொருள்களாகி,'' "ஏழிசையை'' என வரும் தேவாரப் பகுதிகள் சிவபெருமான் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அனவரதமும் இசையைக்

கேட்டு ஆனந்திக்கும்பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளி யிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசை விரும்பும் கூத்தனார்," என்பதும் இறைவருடைய இசை விருப்பத்தை வெளியிடும். ஈசுவரர் கையில் வீணையை வைத்து அகத்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். "எம் மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி 'வீணா தக்ஷிணாமூர்த்தி' என்று வழங்கப்படுவார். கண்ணன் வேய்ங்குழலோடு விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? இத்தகைய இசையின் பெருமையையும், இன்பத்தையும் இன்னும் விரிக்கிற் பெருகும்.

---

2. கும்பகருணன்

[வித்துவான் V. வேங்கடராஜுலு ரெட்டியார்.]

தென்கடலில் நடுவண் தீவு ஒன்றனில் இராவணன் என்பவன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்குக் கும்பகருணன், விபீடணன் என்னும் துணைவரிருவர் இருந்தனர். இராவணன், கடுந்தவம் புரிந்துபெற்ற வரத்தாலும், கும்பகருணன் பலத்தாலும், தன் மைந்தன் மேகநாதன் திறத்தாலும் வானவர்களையும் வாசவனையும் வென்று மூவுலகினையும் தன்னடிப்படுத்திப் புகழ்பெற்று விளங்கினான். கும்பகருணன், திண்மையும் வன்மையும் வாய்ந்தவனாயினும், மீதூண் அருந்தி, நெடிதுறங்கிக் காலம் போக்கினான். ஒருவர் நெடுநேரம் உணர்வின்றித் துயில்வாராயின் அவரைக் கும்பகருணன் என்று வழங்குதல் இன்றும் வழக்கில் உளது. இதனைப் 'பண்டொரு நாள், கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகருணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?' என்று ஸ்ரீ ஆண்டாள் அருளியிருத்தலினாலும் அறியலாம். விபீடணன் மறநெறி கடிந்து, அறநெறி யொழுகி, எவரும் பேரறிஞன் என்று புகழும்படி விளங்கினான்.

அக்காலத்தில் ஸ்ரீராமர், தன் தந்தையாரின் கட்டளைப்படி, கானுறைதலை மேற்கொண்டு, தேவி சீதை

யோடும், இளவல் இலக்குவனோடும் அயோத்தியினின்று நீங்கிப் பஞ்சவடி என்னுமிடத்தில் வதிந்திருந்தார். இராவணன் சீதையின் பேரழகினைத் தன் உடன்பிறந்தாளாகிய சூர்ப்பணகையால் அறிந்து, சீதைமேல் வேட்கையுற்று, அவளை வஞ்சகமாகக் கவர்ந்து சென்று, தனது இலங்கை நகரில் சிறையிட்டான். சீதையைத் தேடித் திரிந்த இராம இலக்குமணர், அனுமான் சுக்ரீவன் முதலான வானர வீரர்களைத் துணைக்கொண்டனர். சீதையைத் தேடுமாறு நாற்றிசைக்கும் அனுப்பப்பட்டவருள் சிறந்தவனாகிய அனுமான் தென்கடலைக் கடந்து, இராவணனது இலங்கை நகருட் புகுந்து, ஆங்குப் பலவிடங்களிலும் சீதையை நாடித் திரிந்தான். கடைசியில், இராவணனது பூஞ்சோலையாகிய அசோக வனத்தில் சீதை சிறையிருத்தலைக் கண்டு, அற்றமறிந்து அவளுக்குத் தன் வரவை அறிவித்து, ஸ்ரீராமன் செய்தியைத் தெரிவித்து, அவளிடம் விடைபெற்று வெளிப்பட்டான். வெளிப்பட்டவன், அப்பொழிலின் மரங்களை ஒடித்து, காவலரையடித்து, தன்னொடு பொருதோரைப்படுத்து, இலங்கை நகரை எரிவாய் மடுத்து, மீண்டு சென்று ஸ்ரீராமரைச் சார்ந்தான்.

இவ்வாறு குரங்கொன்று தன் கடிநகர்புக்கு, பொழிலை யழித்து, படைகளைத் தொலைத்து, ஊரை எரித்துச் சென்றதை அறிந்த இராவணன், 'இனிச் செய்யத்தக்கது யாது?' என்று, அமைச்சர் படைத்தலைவர் முதலியோருடன் ஆலோசனை செய்தான். ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்குத் தோன்றியவாறு கூறினர். அப்பொழுது கும்பகருணன் எழுந்து அவர்களை விலக்கி, அண்ணலை வணங்கி, 'ஐய, என் உரையை இகழாது ஏற்றுக்கொள்வீராயின், யான் உறுதி பயக்கும் செயலை உரைக்கின்றேன்' என்று பணிமொழி பகர்ந்து கூறுவான்:

"அண்ணலே! தாமோ ஆயிரம் மறைகளையும் கற்றுணர்ந்த அறிஞர்; அத்தகைய நீவிர் தீச்செயல் புரிதல் தகுமோ? பிறர் மனைவியைக் கவர்ந்து, சிறையிட்டிருத்தல்

பழியும் பாவமும் பயக்கும். இது, நமது உயர்ந்த குடிப் பிறப்பிற்கு ஒத்ததன்று.

'ஆசில்பர தாரமவைஅஞ்சிறை யடைப்பேம்;
மாசில்புகழ் காதலுறு வேம்; வளமைகூரப்
பேசுவது மானம்; இடைபேணுவது காமம்;
கூசுவது மானிடரை; நன்றுநம கொற்றம்!'

சீதையை, இன்னே சிறைவிடுத்து ஸ்ரீராமர் பக்கலிற் சேர்த்தல் நலமாகும். அதனால், அவர் வென்றவர் ஆயினும் ஆகுக; நமக்கு வசையன்று; இசையே இது செய்ய எண்ணமில்லையாயின், நம் படைகளெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துக்கொண்டு சென்று, ஒரே நாளில் அம் மானவரையும் வானரரையும் கொன்று, பகை தவிர்ந்து இன்புறுதல் தக்கது" என்றான். இராவணன், "எல்லாப் படைகளுடன் சென்று, வென்று வருதலே நன்று" என்று ஒருப்பட்டான். அப்பொழுது, இந்திரஜித்து அதனை மறுத்து, "இது நன்று, நன்று! தேவரையும் யாவரையும் வென்று மூவுலகும் கைக்கொண்ட தேவரீர், மானிடரையும் வானரரையும் வெல்லுதல் வேண்டி, எல்லாப் படைகளுடனும் செல்லுதல் ஒல்லாது; யான் ஒருவனே சென்று இமைப்பளவில் அவர்களை வென்று இன்னே வருவல்" என்று தன் வீரம் தோன்ற விளம்பினன். இதுகேட்டு விபீடணன், அவனை விலக்கிச் "சீதையை ஸ்ரீராமரிடம் விட்டுவிடுதலே நலம்" என்று பலவாறு பகர்ந்தான். இராவணன் அவ்வுரைகளை மனங் கொள்ளாது, அவனை வெறுத்துக் கூறினன். அதனால் விபீடணன், ஸ்ரீராமரிடம் அடைக்கலம் புகுந்தான். கும்ப கருணன் வழக்கம்போல் உறங்குவா னயினன்.

பின்னர், ஸ்ரீராமர் வானரப் படைகளைத் துணைக் கொண்டு கடலில் அணைகட்டி, இலங்கையை அணுகினர். அதனையறிந்த இராவணன், தன் நகரின் நாற்புறத்தும் காவற் படைகளை நிறுவி, சில படைகளுடன் தான் போருக்குச் சென்று, ஸ்ரீராமரது போர்த்திறனை அறிந்து மீண்டான். மீண்டவன் தன் மந்திரியாகிய மகோதரன்

கூறியவாறு, கும்பகருணனைப் போருக்கனுப்ப எண்ணி, அவனை எழுப்பி வருமாறு ஏவலர் நால்வரை விடுத்தான். ஏவலர் விரைந்து சென்று, கும்பகருணன் கோயிலையடைந்து அவனை எழுப்பினர்; அவன் சிறிதும் உணராதது கண்டு, மனம் நொந்து இராவணனைக் குறுகி வணங்கி, அவன் துயிலுணராமையை அறிவித்தனர்.

உடனே இராவணன், மல்லர் பலரை ஏவிக் கும்பகருணனைத் துயிலுணர்த்துமாறு பணித்தான். அவ்வளவில் மல்லர், அவன் கோயிலுட் புகுந்து, அவனை நெடு நேரம் துயிலுணர்த்தினர்; பின்னர், கும்பகருணன் துயிலுணர்ந்து எழுந்து, உலகை யளக்க நிமிர்ந்த திருமால் போல் நிமிர்ந்து நின்றான்; உடனே, பல சகடங்களில் கொணர்ந்திருந்த உணவினையும், பல குடங்களில் நிறைந்திருந்த நறவினையும் உண்டு சிறிது பசியாறினன்; பின்னர், இடியேறும் அஞ்சும்படி ஆரவாரித்தான்.

அப்பொழுது பணியாளர் அவனைப் பணிந்து, "நும் அண்ணலார் நும்மைக் காண விரும்பினர்" என்றனர். எனலும், அவன் கடிது சென்று இராவணன் கோயிலுட் புகுந்து அவனடிகளில் வீழ்ந்து வணங்கினன். தன்னை வணங்கிய இளவலை இராவணன் எடுத்து மார்புறத் தழுவித் தன்னுடனிருத்தி, ஊனும் தேனும் ஊட்டினன்; நுரை போன்ற வெள்ளிய துகிலை உடுத்தினன்; பல அருங்கலன்களைப் பூட்டினன்; நறிய சாந்தைச் சாத்தினன்; கவசத்தைக் கட்டினன்; தம்பியின் தோற்றப் பொலிவை நோக்கினன்.

கும்பகருணன் அண்ணனை நோக்கி, "தாம் இவ்வாறு செய்வது ஏன்? அதனை அறிவித்தருள்க" என்று வேண்டினன். இராவணன், "மானவரும் வானரரும் நமது புறநகரடைந்தனர்; நீ சென்று அவர்களைக் கொன்று வருதி," என்றான். உடனே கும்பகருணன் கூறுவான்.

"ஆனதோ வெஞ்சமர்! அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ; புகுந்ததோ பொன்றுங் காலமே."

"சீதையை இராமனிடத்தில் விட்டுவிடும் என்று முன்னமே சொன்னேனே; இன்னமும் அவளை விட்டனரல்லிரோ! ஆ! புலத்தியன் மரபு அழிந்ததோ! அந்தோ! நும் பெருமையை நீரே கெடுத்துக்கொண்டீரே! அறமே துணையாக நன்னெறியில் நடப்பவரை, மறமே வலியாகப் புன்னெறியில் நடப்பவராகிய நாம் எங்ஙனம் வெல்லுவம்? இவ்வுலகம் அனைத்தையும் கல்லுதல் இயலுமாயினும், இராமனை வெல்லுதல் இயலாதே; கடலைக்கடந்து, நமது கடிநகர் புகுந்து, செயற்கருஞ் செயலைச் செய்த வானரத்தைப் போன்ற எண்ணிறந்த வானரங்களை எளிமையாகக் கருதுதல் தகுமோ? நாம் உய்ய வேண்டுமாயின் சானகியை இராமன் பக்கலில் விட்டுவிட்டு, அவர்களோடு அளவளாவுதல் வேண்டும்; இன்றேல், நமது படையெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்துச் சென்று, போர்புரிந்து அவரை யழித்தல் வேண்டும். அவ்வாறன்றி, ஒவ்வொருவரையும் தமியராக அமருக்கு அனுப்புதலால் ஆவதில்லை" என்றான்.

கும்பகருணன் கூறியவற்றைக் கேட்ட இராவணன், "யான் உன்னை வருவித்தது ஆலோசனை கூறுதற்கன்று; சரி, நீ ஊனும் தேனும் உண்டனையன்றே? உறங்குதற்குச் செல்; உன் வீரமே வீரம்! மானிடச் சிறுவரையும் வானரங்களையும் கும்பிட்டு உயிர் வாழ்தல், உன் தம்பிக்கும் உனக்குமே தக்கது; நீயும் அவனோடு போதி. இதோ யான் செருவிற்குச் செல்கின்றேன்" என்று முனிந்து மொழிந்து, பணியாளரை நோக்கி, 'என் படைகளை இன்னே தம்மின்' என்றான்.

அண்ணன் அமருக்கு எழக்கண்ட கும்பகருணன் அவனை வணங்கி, "ஐயனே, அடியேன் விண்ணப்பம் செய்வது ஒன்றுளது. அதனை முனியாது ஏற்றருளல் வேண்டும். யான் இன்னே செருக்களம் செல்கின்றேன்; விதி என்னைப் பிடர் பிடித்துத் தள்ளுகின்றது. அதற்கு எவர்தாம் யாது செய்வர்? யான் மீண்டு, ஈண்டு வாரேன். யான் மாய்ந்த பின்னராயினும், வைதேகியைச் சிறைவிடுத்து வாழ்ந்திரும். மானிடர் என்னைக் கொன்றுவிடு

வாராயின், நும்மைக் கொல்லுதலும் திண்ணம்; ஆதலின் நீர் செய்யத்தக்கது எண்ணிச் செய்யும்; அன்றியும்,

'இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்தி; கொற்றவ!
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய!
பெற்றனென் விடை' யெனப் பெயர்ந்து போயினான்.

இவ்வாறு பணிமொழி கூறி அகலும் துணைவனைக் காண்டலும், இராவணனுக்குக் கண்கள் கலுழ்ந்தன; கண்ணீர் ததும்பியது; கண்டோர் கரைந்தனர்; 'அந்தோ!' என இரங்கினர்; ஏங்கினர். கும்பகருணன், படைகள் புடை சூழத் தேர்மேலேறினான்; செருக்களம் நோக்கிச் சென்றான்.

செருக்களம் நோக்கிச் சினந்து செல்கின்ற கும்பகருணனை இராமர் நோக்கினார்; உடனே விபீடணனைக் கூவி, 'அன்பனே! மால்வரை கால்கொடு நடந்து வருதலே போல்,' அங்கே வருகின்றவன் யாவன்? இராவணனே வேறு பேருருக்கொண்டு வருகின்றானோ!" என்று வினவினார். விபீடணன் இராமரை இறைஞ்சி, "அண்ணலே! அங்கே வருகின்றவன் இராவணனுக்குப் பின்னவன்! அடியேனுக்கு முன்னவன்; கும்பகருணன் என்னும் பெயரினன்; ஓர் ஊழிக்காலமெல்லாம் ஒரு நாளே போல் உறங்குபவன்; இந்திரனோடு பொருதகாலத்தில், பெரிய கயிறு ஒன்றனை எளிதிற்பற்றிச் சுழற்றியவன்; கண்ணுதற் கடவுள் அருளிய சூலப்படையை உடையவன். இவன் இதுகாறும் இரவும் பகலும் உறங்கிக் கிடந்ததனால் இவ்வுலகம் உய்ந்தது. இவன், அண்ணனுக்கு அறிவுரை பலவும் கூறினான்; அவன் வெறுத்தும் மறுத்தும், மீண்டும் ஆவன கூறி அறிவுறுத்தினான். அவ்வறிவுரைகளை அவன் அகங்கொள்ளாமையின், அவன் விரும்பியவாறே நம்மோடு அமர் செய்தற்கு அடைந்திருக்கிறான்" என்று பலவும் பகர்ந்தான்.

விபீடணனது மெய்ம்மொழியைக் கேட்ட சுக்ரீவன் இராமரை வணங்கி, "கும்பகருணனைக் கொல்லுதலில் பயனில்லை; அவன் நம் பக்கல் வருவானாயின், சேர்த்துக்

கொள்ளுதல் செவ்விது; அவ்வாறாயின், விபீடணன் மனமும் மகிழ்வுறும்" என்றான். அதனைக் கேட்ட இரகுவீரர், "அது நன்று" என, உடனே விபீடணன், "ஆயின், அடியேன் இன்னே சென்று, அவனுக்கு நல்லுரை நவின்று உடன்கொண்டு வருகின்றேன்" என்று விடைபெற்று அகன்றான்.

விபீடணன் தன்பால் வருதலை யறிந்து கும்பகருணன் மகிழ்வுற, அவனும் அணுகி அன்புடன் அடி வணங்கினன். அடியில் வீழ்ந்த இளவலை எடுத்து மார்புறத்தழுவி, "அன்புடைத் தம்பி! நீ ஸ்ரீராமரை அடைக்கலம் புகுந்ததும் அபயம் பெற்றதும் கேட்டுக் களிப்பென்னும் கடலுட் படிந்திருந்தேன்; புலத்தியன் மரபு நின்னால் பொலிவுறும் என்று மகிழ்ந்திருந்தேன்; நீ அவர் பக்கலினின்று இங்கு வந்ததன் காரணம் யாது? யாங்களனைவரும் மடிந்துபடுதல் திண்ணம். எங்களுக்கெல்லாம் நீயே எள்ளும் தண்ணீரும் இறைத்துக் கரையேற்றுவாய் என்று எண்ணினேன்; நீயும் எங்களோடு சேர்ந்துவிட்டால் எள்ளும் நீரும் இறைப்பவர் யாவருளர்? அமிர்தம் உண்ணுபவர் நஞ்சு உண்பதுபோல, ஸ்ரீராமரைச் சார்ந்து நல்வாழ்வு பெற்ற நீ, இங்கே வந்தது எங்களோடு இறந்துபடுதற்கோ! பிறர் மனை விரும்பும் தீயவனோடு சேர்ந்த எம்மை, உறவினர் என்று உளங்கொள்ளலாமோ? இன்னும் உனக்கு அரக்கர் தன்மை நீங்கிற்றில்லை போலும்! நீ இப்போது இங்கு வருதல் தகாது; யாம் அனைவரும் இறந்துபட்ட பின்பு, இராமருடன் கூடி இலங்கைக்கு வா; வந்து முடிசூடி அரசு செய்; இப்பொழுதே இராமர்பால் ஏகு" என இன்மொழி புகன்றான்.

அண்ணன் அன்புடன் கூறியவற்றைக் கேட்ட விபீடணன் வணங்கி, "ஐய, யான் நுமக்கு விண்ணப்பம் செய்யவேண்டுவது ஒன்று உளது. அறத்தின் உருவாய் விளங்கும் ஸ்ரீராமபிரானை, நீரும் சரணமடைந்து உய்யவேண்டும்; பாவியாகிய நாயேனுக்கும் அருள்புரிந்த வள்ளல், நுமக்கு அருள் புரிதலில் ஐயமின்று. இராமபிரான் அடியேனுக்கு நல்கியருளிய இலங்கையரசினை,

யான் நுமக்குத் தந்து, நுமது ஏவலின்படியே நடப்பேன். தேவரீர் இளைஞனாகிய அடியேனது மனத்துயரைப் போக்கி, வாழ்வுபெறல் வேண்டும். நீர் இனி, இராவணனிடத்திற்குப் போதல் தகாது; ஆங்குப் போகாது அமர்புரிவீராயின், ஆருயிர் கெடுதல் திண்ணம். தாமோ, அறநூல்களைக் கற்ற அறிஞர். தமக்கு நாயேன் கூறுதல் யாதுளது? தீத்தொழில் புரிபவர் தாயராயினும் தந்தையராயினும் அவர்பால் அன்பு செலுத்துதல் அறமாமோ? ஒருவன் தீங்கிழைப்பானாயின், அவனைச் சார்ந்த நன்னெறியாளரும் அவனுக்காக ஆருயிர் விடுதல் அழகிதோ? உறவினராயினும் மறவினை புரிவோரை அழித்தல் முறையேயாகும். நமது உடம்பில் தோன்றும் பருவினைக் கருவியாலறுத்துச் சுட்டுத் துயர் தீர்க்கின்றோமன்றோ? அதுபோல, நம்மோடு உடன் பிறந்தானாயினும், அவனால் துன்பமுண்டாகுமாயின், அவனை நீத்தல் அவமாகாது அவனோ, தாம் கூறும் நல்லுரைகளை உள்ளங் கொள்கின்றிலன். அப்பாவியின் பொருட்டு அநியாயமாக உயிர் விடுதல் அறமோ? தேவதேவராகிய ஸ்ரீராமரால், தாம் இலங்கையரசு எய்தினால், எவராலும் அழிக்க இயலாது; அதனால் பெருமையேயன்றிச் சிறுமை யுண்டாகாது; தேவர் முனிவர் முதலாக யாவரும் நமக்கு அருள்செய்வர். நமக்குப் பகைவரான வானவர்களே நண்பினராகுங்கால், வேறு யாவர் பகையாவர்? ஒருவரும் இலர். ஆதலின், நீவிர் எனது வேண்டுகோளுக்கு இணங்கி இராமரிடத்து இன்னே வரல்வேண்டும். அவர், தாமே நும்மிடத்து அருள்கூர்ந்து, என்னை அனுப்பினர். இதனை உளங்கொண்டு என்னோடு வாரும்" என்று இசைத்து, இணையடிகளில் இறைஞ்சினான்.

தன் பாதங்களில் விழுந்து புலம்பும் விபீடணனைக் கும்பகருணன் எடுத்து இன்புறத் தழுவி, அன்புறக் கூறுவான்: "அன்புமிக்க தம்பி! நீயோ நான்முகன் நல்கிய வரங்களால் நன்னெறியில் ஒழுகுகின்றாய்; ஆதலின், நீ போய் இராமபிரானை யடைந்தது நேர்மையே. யானோ புலைத்தொழில் புரிவோன்; ஆதலின், இன்னுயிரிழந்

தலே ஏற்புடையது. நம் அண்ணல், தீத்தொழிலில் மனங் கொண்டால், அதனை மாற்றுதல் நமது கடமை. அஃது இயலாதாயின், நாம் அவருக்கு முன் இறந்துபடுதலே சிறந்தது. அதுவே செஞ்சோற்றுக் கடனும் ஆகும். அவ்வாறன்றி, யான் உன்னோடு அங்கு வருவேனாயின், செய்நன்றி கொன்றவனாவேன்.

> 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் மறைமொழியை மறக்கலாமோ? அமரரை வென்று அரும்புகழ் படைத்த அண்ணலார், துணைவரின் றித் தமியராய்ச் சாதல் தகுமோ? என் ஐயனுக்குப் பகைவராயிருக்கும் அவர்பால் சரணம் புக்கு உயிர் வாழ் தலினும், இழிவு வேறு யாதுளது? யான் அவ்வாறான இழிதொழில் புரியேன். 'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்துவிட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்.' யான் இராம இலக்குமணரையும், அனுமன், அங்கதன், சுக்ரீ வன் முதலாயினோரையும் நொடியில் மடித்து, வெற்றி பெறுவேன். என்முன் எதிர்ப்போர் எவரேயாயினும் அவர் இரவிமுன் பனியேபோல் விரைவில் கெடுவர். அன்றியும், ஆகுங்காலத்தில் ஆதலும், போகுங்காலத்தில் போதலும் இயற்கை. அவை ஒருவர் தடுப்பினும் அடுக் காமல் அகலா. ஆதலின், நீ என்னைக் குறித்து இரங்கு தல் வேண்டா: இராமரிடம் இப்பொழுதே ஏகு; இங்கு நின்று கவலாதே. யாங்கள் நரகில் அழுந்தாவாறு எங் களுக்கு எள்ளும் நீரும் இறை; அதுவே நீ எங்கட்குச் செய்யவேண்டுவது. நீ அகத்துயர் விடுத்து, அவர்பால் அடைந்து உய்தி."

இவ்வாறு தன் மனநிலை கூறிய கும்பகருணன், மீட்டும் இளவலை யெடுத்து மார்புறத் தழுவி, அவனை நோக்கி "இன்றோடு நம் உடன் பிறப்பு ஒழிந்தது" என்று கண்ணீர் வடியக் கரைந்தான். அதனைக் கேட்ட விபீடணன், அருந்துயர் மேலிட்டு, அவனடிகளில் வீழ்ந்து வணங்கி, உடலொடுங்கி, உரை யொடுங்கி, அவன்

யால் விடைபெற்று மீண்டான்; மீண்டும் இராமரைச் சார்ந்து கும்பகருணன் மனநிலைகூறி மாழ்கினன்.

பின்னர்க் கும்பகருணனுக்கும் இராமருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. கும்பகருணன் கண்டோர் வெருவுமாறு கடும்போர் புரிந்து, பல வானரர்களை மாய்த்துத் தன் செஞ்சோற்றுக் கடனை யாற்றி, முடிவில் இராமரால் கொல்லப்பட்டு, வீர சொர்க்கத்துள் விளங்கினன். அவனது அருஞ்செயலும் பெருங்குணமும் என்றும் அழியாது நிலவலாயின.

---

3. ஏறு தழுவுதல்

[கவியரசு R. வெங்கடாசலம் பிள்ளை]

தண்டமிழ் நாட்டு மக்களிடத்துப் பண்டைக் காலத்துச் சிறந்து விளங்கிய வீரச் செயல்களுள் ஏறு தழுவுதல் என்பதும் ஒன்றாகும். இஃது, அக்காலத்து ஒரு விழாவாகவே கொண்டாடப்பட்டு வந்துள்ளது. பாரத காலத்துக் கண்ணபிரான் நப்பின்னையாரை ஏழு ஏறுகளைத் தழுவி மணந்திருப்பதனையும் சங்க நூல்களில் இவ்வேறு தழுவுதல் கூறப்பட்டிருப்பதனையும் நோக்கின், இதன் பழமை ஒருவாறு விளங்கும். இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் இச்செயல் காலந்தோறும் பிறழ்ந்தும் குறைந்தும் வந்திருப்பினும், இன்று நமது நாட்டுப்புறங்களில் ஒருவாறு நடைபெற்று வருகின்றது. அங்கு, இவ்வேறு தழுவற் கிளர்ச்சிகளை, முன்பனிக் காலமாகிய மார்கழி தைத் திங்கள்களில் நாளைக்குங் காணலாம். இக் காணப்பெறினும், தைத்திங்கள் இரண்டு, மூன்றும் நாளில் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் வீட்டிலும் இவ்விழா நிகழக் காணலாம்.

பண்டைக் காலத்தே ஐந்திணை நிலங்களுள் ஒன்றாகிய முல்லை நிலத்தே, அத்திணைக்குரிய மக்களாகிய ஆயரிடத்தே மட்டும் நிகழ்ந்துவந்த இது, இக்காலத்தே எத்திறத்தாரிடத்தும் ஒப்ப நிகழக் காணப்பெறுகின்றது.

இவ்விழா, பண்டைத் தமிழரின் அரிய செயல்களுள் ஒன்றை நமக்கு நினைவூட்டி, ஊக்கம், வீரம் முதலியவற்றை விளைவிப்பதொன்ருகும். இவ்விழாவினைப்பற்றிய பண்டைய நிகழ்ச்சிகளை முல்லைக்கலி, சிலப்பதிகாரம் என்னும் நூல்கள், அவற்றின் உரைகள் ஆகிய இவைகளைக் கொண்டு விரிவாக உணரலாம்.

'தென்னவன் தொல்லிசை நட்ட குடியோடு தோன்றிய நல்லினத் தாயர்' 'இருங்குடியார்' என்றெல்லாம் தொன்னூல்களிற் சிறப்பிக்கப்பெறும் ஆயர் குடியினர், தங்கள் பெண்மக்களுக்குத் தக்கவராய் வீர மணமக்களைத் தேர்ந்துகொள்ளுதற்கு, மணத் தேர்தலாக இந்த ஏறு தழுவலைக் கையாண்டுவந்தனர். இவ்வாயர் குடியில் ஒரு பெண் மகவு பிறக்கின், அதே காலத்து அக்குடியினருக்குரிய ஆநிரையிற் பிறந்துள்ள ஏற்றிளங் கன்றுகளைத் தம்மூட்டாக (பால் கறவாது), தம் போக்காகவிட்டு வளர்த்துவந்து, அம்மகளின் மணப்பருவத்தே இவ்விடைகளைத் தழுவி வலியடக்குவானுக்கு அம்மகளை மணஞ்செய்து தருவது அவர்கள் வழக்கம். இக்காலத்தே இதனை மணத் தேர்தலாகக் கொள்வது இன்று எனினும், சில அரிய பணையங்கள் வைத்தேனும் நடத்துவர்.

இவ்விழா, பண்டு ஆண்டுதோறும் குறித்த காலங்களிலாவது, ஆயர் மகளொருத்தியை மணம் விரும்பினவன் உரிய ஏற்றினைத் தழுவ முன்வந்து வேண்டிக்கொள்ளுங் காலத்திலாவது நிகழும். ஏறுகட்கு உரியோரும், தழுவுவோருமாகிய ஆயர்கள், பிடவம், செங்காந்தள், காயா, கொன்றை,வெட்சி) முல்லை, கஞ்சங்குல்லை,குருந்து முதலிய மலர்களாலும் கொத்துக்களாலும் ஆகிய மாலைக் கண்ணிகளைத் தரித்துச் செந்துவராடை பூண்டு திரண்டு கூடுவர். முல்லைநிலக் கடவுளாகிய மாயோனையும், அவ்வவ்வூர் நீர்த்துறைகளிலும், மரங்களின் கீழுமுள்ள ஊர்த்தெய்வங்களையும் பரவித் தத்தம் அலுவல்களை மேற்கொள்வர்.

இவ்வாயர்குல மகளிர் முல்லை நிலத்திற்குச் சிறந்த குடிப் பிறப்பும் கற்பும் முதலாய உயர் சிறப்புக்கள் உடையவர். இவர் 'விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்—

அறநெறி ஆயர் மகளிர்க்கு—இருமணங் கூடுதல் இல்லியல்பன்றே' என்று பாராட்டப்படுபவர். தாம் 'தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலோடு காமன் கோயிலிலே செல்லின், அக்காமனும் நெஞ்சழிந்து தன் கையிற் படையைக் கீழேபோகட்டு மயங்குதற்கேற்ற பேரழகினர்.' 'கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய் தளிர் மேனி—யினைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்—நிலவுலகத்தின்மை தெளிநீ' என்றெல்லாம் பாராட்டப்படுவர். பூங்கரை நீல ஆடை நிலந்தாழ உடுத்து மயிலொடு மாறு கொள்ளுஞ் சாயலவர்; குயிலொடு மாறுகொள்ளுங் கொம்பனுர்'; 'மாணவுருக்கிய நன்பொன்மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன மேனியர்.'

தொன்றுதொட்டு வரும் மிக்க திருவினராகியும், தம் முயற்சியாலீட்டும் பொருளினையே துய்த்து மகிழ்பவர்! இதனை ஒரு சிறுமி மணல்வீடு கட்டி விளையாடுங்காலை, ஒரு சிறுவன் போந்து, 'நல்லாய்! யானும் வீடு கட்டித் தருவ'னெனக் கூறிக் கட்டப்புக, 'எம்போல்வாரை மணந்து ஓர் இல்லமைத்து அறம் நடாத்தும் தன் முயற்சி இல்லாதவனுகிய நீயோ எனக்கு வீடு கட்டித் தருவது' என்று நகையாடிக் கூறிய,

> 'முற்றிழை யேஎர்மட நல்லாய்! நீயாடும்
> சிற்றில் புனைகோ சிறிதென்றுன்; எல்லாநீ
> பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
> கற்ற திலைமன்ற'

என்ற முல்லைக்கலியான் உணர்தலாகும். இங்ஙனம் இவ்வாயர் மகளிடத்துக் காணலாகும் உயர் குணங்கள் மிகப் பல. இன்னவர் தத்தம் காதலர் ஏறு தழுவுங்காட்சியைக் காண வந்தீண்டுவர். இம்மகளிர் நன்கனம் வீற்றிருந்து காண, பக்கலில் பரண் அமைக்கப் பெற்றிருக்கும்.

இவ்வேறுகள், வானிடத்து விரிந்த திங்கள் போலவும், திருமாலினிடத்துள்ள சங்குபோலவும், அழகிய நெற்றிச் சுட்டியையுடைய கரிய நிறமுடைய காரிகள்; கரிய மஞ்சு சூழும் மலையிடத்து நின்று வீழ்கின்ற அருவிகள்போல அழகிய வெள்ளைக் கால்களையுடைய காரிகள்; பலராமன்

திருமார்பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்ட கொடி மறுவினையுடைய வெள்ளைகள்; விண்மீனுடன் விளங்கும் செவ்வானம் போல அழகிய வெள்ளைப் புள்ளிகளையுடைய சிவந்த நிறத்தனவாகிய சேய்கள்; சிவபெருமான் திருமிடற்றின் கண் தோன்றுங் கருமையைப் போலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும், உயர்ந்து வளர்ந்த திமிலினையுமுடைய கபில நிறத்தனவாகிய குரால்கள்; விளக்கமாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளிகளுடைய வெள்ளைகள் எனப் பலவகைப்படும் உருவச் சிறப்பினை யுடையனவாகும். மதம் பொருந்திய களிற்றினும் மிக்க அஞ்சாமையை யுடையன; இடையறுது காலாலே தரையினை வெட்டித் தூளியெழுப்புவன; கொம்பாலே குத்திக் கோட்டுமண் கொள்வன; ஒன்றோடொன்று தாக்கியும், மீண்டும், அடியால் மண்ணைப் பறித்தும் கூரிய கொம்புகளால் குத்தியும் பொருது கொண்டிருப்பன; மெய்யினின்றும் வடிகின்ற குருதியால் மூடப்பெற்றுச் சிவந்த மேகங்கள் போல்வன. அவற்றை அவற்றிற்குரிய ஆயர்கள் பிடித்துப் பரமன் கணிச்சிப் படையென, முள்ளின் முனையெனக் கொம்புகளைச் சீவி, வழுக்குமாறு நெய்தடவி, நீராட்டித் தொழுவினுட்கொண் டுய்ப்பர். அவைகூற்றுவனையும் அவன்ஏவலரையும் ஒப்பச் சினந்து, மருண்டு, சுழன்றுகொண்டிருக்கும்.

குறித்த நேரத்தே பறையும், கொம்பும், முழவும், பிறவும் இணைந்து இடிக்கூட்டமென இயம்பும். இந்நிலையில் தொழுவினைத் திறந்து விடுப்பர். ஏறு தழுவோர் தாம் தாம் குறித்த ஏறுகளின்மீது, புலியெனப் பாய்ந்து பிடிப்பர். உடன் பெரும் போர் நிகழும்.

அப்போர் நிகழ்ச்சி வருமாறு; ஏறுகளின் மீது பாய்ந்தோர், கொம்பை இறுகப் பற்றியும், கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப்பற்றியும், கழுத்திடத்திலே மாலை போல் அடங்கிக் கிடந்தும், கொண்டை முறியும்படி தழுவியும், தங்கள் தோளுக்கு நடுவே அவற்றின் கழுத்தைப் புகுத்திவிட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம் மேலே படுதலை ஏற்றுக்கொண்டும் எங்ஙனமும் தப்பாது

பிடிப்பார். ஒரு வெள்ளேற்றின் பக்கத்தே ஒடுங்கிக் கிடப்பான் ஒருவன், திங்களிற் கிடக்கின்ற மறுப்போலக் காணப்படுவான். ஒரு மறுவினையுடைய ஏற்றின் மீதேறி, ஒடுங்கி விடாது செல்வான், நீர்த் துறையினிடத்துத் தெப் பத்தின்மீது கிடந்து அதனைத் தள்ளுகின்றவனை யொப் பான். தன்மீது கடிது ஓடிவந்த ஒரு காரியை அதன் வலியடங்கத் தழுவி வருத்தி, அதன்மேலே தோன்றும் ஒருவன், கூற்றுவனை உதைத்துத் தள்ளி அவன் உயிரை வாங்கும் பரமனைப் போல்வான். நீங்காச்சினத்துடன் தன் மேலே பாய்ந்த ஒரு சிவந்த ஏற்றைக் கொம்பைப் பிடித்து அதன் வலியைப் போக்கி அடக்கினவன், கஞ்சன் தன் னைக் கொல்ல ஏவிய குதிரையின் வாயைக் கிழித்துக் கொன்ற கண்ணபிரானை நிகர்ப்பான். இங்ஙனம் ஏறு தழுவுவோர் வெற்றியுறுவர். இங்ஙனமின்றித் தோல்வி யுறுவதும், ஒரோ வழி வீரர்பதம் புகுவதும் உண்டு.

ஊழ்வயத்ததாக நிகழ்வது உண்மைக் காதல். இக் காதலரை ஊழ்வினை எங்ஙனமும் கூட்டுவிக்கும் கடப்பாடு டையது. தன் முயற்சிக்குத் தடையாய எத்தகைய இடை யூறுகளையும் அவ்வூழ்வினை உப்பக்கம் காணவல்லது. இங்ஙனம் ஊழின் வழியராய உண்மைக் காதலர் வெற்றி யுறுதலும், ஒழிந்தார் புரியும் முயற்சிகள் பயன்படாமை யோடு தாமும் ஒழிதலும் இயற்கையானதல்லவோ! ஆகவே, இப்போரில் ஊழின் புறத்ததாக ஒருதலைக் காதலுற்றார் சிலர் தோல்வியுறுதலோடு மாண்டொழிதலு முண்டு.

இங்ஙனம் ஏறு தழுவுதற்குரிய நாளின் முன்னாள் மாலையிலாவது, ஏறு தழுவும் நாளன்று மாலையிலாவது, ஊர்ப் பொதுமன்றமாகிய தாதெரு மன்றத்தே ஒரு குரவைக் கூத்து நிகழும். குரவைக் கூத்தாவது—ஆடவரும் பெண்டிரும் சேர, எழுவர் ஒன்பதின்மர் கூடி, கைகோத்து வளைந்து நின்று பாடியாடுவது. குரவைக் கூத்து நிகழு மிடமே, காதலர்கள் தடையின்றி ஒன்றுபட்டுத் தம் உள் ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் இடமாகும். ஏறு தழுவும் நாளின் முன்னாளாயின் தம் காதலரை ஏறுதழுவு

நற்குத் தூண்டும் பாட்டுகளும், ஏறு தழுவிய நாளாயின், தம் காதலர் வெற்றியைக் கொண்டாடிப் பாடும் பாட்டுகளும் நிகழும். 'எம் தந்தையார் குறித்துள்ள ஏறுகளைத் தழுவினர்க்கே யாம் உரியேம்; ஆகவே, காதலர் முனைந்து தழுவி எம்மை யடையும் கடப்பாடுடையர்' என்னும் குறிப்பினைத் தம் காதலர்க்குப் பாடித் தெரிவிப்பார்.

இன்னும் தங்கள் காதலரை மிக வற்புறுத்தித் தூண்ட வேண்டுமிடத்து, 'காதலீர்! எமக்கு உரிய ஏற்றினை நாளை நீர் தழுவீரேல், எம்மை இம்மையில் மட்டுமன்று, மறுமையிலும் அடைதல் அரிது' என்று குறிப்பிப்பவராய்,

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்"

என்றும்,

"அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கரிய......ஆயமகள் தோள்"

என்றும் பாடுவர். மேலும் தங்கள் காதலர் எய்திய வெற்றியும், வெற்றியுடையாரையே மணக்கும் தங்கள் மேன்மையும் தங்கள் ஆயர் குடிக்குப் புதியனவல்லவாகலின், ஏறுகளை அஞ்சும் ஆயர்களும், அங்ஙனம் அஞ்சுவார் உளரேல் அவர்களை மணக்கும் ஆய்ச்சியர்களும் தமது குடியில் இல்லை என்னும் பெருமித உணர்ச்சியோடு,

"போரேற் றருந்தலை அஞ்சலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ வெங்கேளே!"

என்று பாடியும் மகிழ்வர்.

இங்ஙனம் ஏறுதழுவல் பற்றித் தங்கள் குறிப்புக்கள் எல்லாம் வெளிப்படப் பாடியபின், முல்லைத் தெய்வமாய மாயோனை உன்னி,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!"

என்ற குரவைப் பாட்டுப்பாடி, அம் மாயோனைத் தங்கள் வாழ்வினைக் கடைக்கணித்தருள வேண்டிக்கொண்டு, அந்திக்காலத்தே தத்தம் இல்லம் வந்துற்று மகிழ்வர்.

---

4. வீரமா முனிவர்

[R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.]

இவ்வுலகில் வழங்கும் செம்மைசான்ற தொன்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றென்று மொழித்திறமறிந்தோர் கூறுவர். இற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே, சிறப்புற்றிருந்த தென்னாட்டில் தமிழ் மொழிதோன்றி வளர்ந்த வரலாறு இன்றும் புதை பொருளாகவே அமைந்துளது. ஆயினும் இக்காலத்தில் வெளிவந்துலவும் பழந்தொகை நூல்களைத் துணைக்கொண்டு ஆராயும்பொழுது அக்காலத்திய அந்தணரும், அரசரும், வணிகரும், வேளிரும் வளமார்ந்த தமிழ்மொழியை ஆதரித்து வளர்த்த ஆர்வம் பளிங்குபோல் விளங்குவதாகும். இவ்வாறு அறிஞரனைவரும் மனமொத்து வளர்த்தமையாலேயே தமிழ்மொழி முற்காலத்தில் தழைத்தோங்குவதாயிற்று. இன்னும் சைவரும், வைணவரும், சமணரும், பௌத்தரும் பைந்தமிழ் மொழியைப்போற்றி வளர்ப்பாராயினர். இங்ஙனம், சாதிமதச் சுழிகடந்து, காலமென்னும் கடும்புனலில் தமிழ்க்கலம் களித்துலாவியது.

இத்தகைய தொன்மைவாய்ந்த தமிழ்மொழியைச் சென்ற இருநூற்றாண்டுகளாகப் பிறநாட்டு நல்லறிஞர் போற்றி வளர்க்கத் தலைப்பட்டார்கள். ஐரோப்பிய நாடுகளில் சீரும் சிறப்புமுற்று விளங்கும் கிறிஸ்துமதக் கொள்கைகளைத் தமிழ் நாட்டிற் பரப்பக்கருதி இந்நாட்டிற் போந்த பாதிரிமார்கள், அருந்தமிழ் மொழியை வருந்திக் கற்கத் தொடங்கினார்கள். இயேசு மதக் கொள்கைகளைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்து ஆதரிக்கும் வண்ணம் அவற்றைப் போதிக்கக் கருதிய பெரியார், பிழையறப் பேசவும் எழுதவும் விரும்பித் தமிழ்மொழியிலமைந்த சிறந்த நூல்களை ஆராயத் தலைப்பட்டார்கள். அறநூல்

களிற் சிறந்த திருக்குறளையும், அருஞ்சுவை நிரம்பிய பெருந்தமிழ்க் காவியங்களையும், அன்னர் ஆர்வமுறப் பயின்றபொழுது, அந்நூல்களின் தெள்ளிய சுவை அவர் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. தமிழ் மொழியைப் போதியவளவு கற்றுப் போதனை செய்யக்கருதிய மேலை நாட்டறிஞர் செழிந்தமிழ்த்தேனை மாந்தித் திளைத்தார்கள். இத்தகைய மேலை நாட்டறிஞருள், இத்தாலிய நாட்டினின்று தமிழகம்போந்து தமிழ்மக்களோடு கலந்துறைந்து விழுமிய புகழ்பெற்ற **வீரமாமுனிவர்** தலைசிறந்தவராவார். ஐரோப்பிய நாடுகளில் உயர்தனிச் செம்மொழிகளாகக் கருதப்படும் லத்தீன், கிரீக்கு, முதலிய மொழிகளில் அமைந்த செழுங்கலைகளைச் செவ்வையாக ஓதியுணர்ந்து செல்வத்துட் செல்வமாய செவிச்செல்வம்பெற்ற அம் முனிவர் அருந்தமிழ் மொழியின் அகலங்காண விரும்பிப் பல்லாண்டு முயன்று பயின்றார். அறம் மணக்கும் திருக்குறளின் அருஞ்சுவையையும் தமிழ் மணக்கும் சிந்தாமணியின் செழுஞ்சுவையையும், கலைமணக்கும் கம்பன் கவிச் சுவையையும், கலந்து நுகர்ந்த முனிவர் உள்ளம், பள்ளத் துட்பாயும் வெள்ளம்போல் ஏனைய தமிழ்ப் பனுவல்களிலும் பரந்து படர்வதாயிற்று. தாளுண்ட நீரைத் தலையாலேதரும் தெங்கின் தகைமை வாய்ந்த அப்பெரியார் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு அருமை வாய்ந்ததாகும்.

தைரியநாதர் என்றும், வீரமாமுனிவர் என்றும் தமிழகத்திற் புகழ்பெற்ற வித்தகரே தமிழ் அகராதியின் தந்தை யாவார் என்று கூறுதல் மிகையாகாது. தமிழ் மொழியில் அமைந்த சொல்லின் பொருளை அறிந்து கொள்வதற்கு முற்காலத்தில் நிகண்டுகளே சிறந்த கருவிகளாயமைந்தன. திவாகரம், பிங்கலம், கயாதரம், சூடாமணி முதலிய பழைய நிகண்டுகள் தமிழ்மொழியில் விளங்கக் காணலாம். நூற்பாவால் அமைந்த அந்நிகண்டுகள் யாவும் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குப் பயன் படாதனவாயின. கவிபாடும் புலவர்க்கும், பொருள்காணும் அறிஞர்க்குமே அவை பெருந்துணையாயிருந்தன. கற்றோரே

யன்றி மற்றோரும் தமிழ் மொழியின் சொற் செல்வமறிந்து இன்புற வேண்டுமென்று கருதிய வீரமா முனிவர் 'சதுர் அகராதி' என்னும் பெயரால் ஒரு சிறந்த அகராதி செய்து உதவினர். அவ்வகராதி நூற்பாவால் அமைந்த நிகண்டுகள்போலாது, தமிழ்ச் சொற்களை அகர முதலாக எடுத்தடுக்கிப் பொருள் விளக்கிய பான்மையால் 'தமிழ்ப் பெருங்கடற்கு அஃது ஓர் மரக்கலமாகத் திகழ்ந்த'தென்று அந்நூற்பாயிரம் கூறுகின்றது. சதுரகராதி அளவிற்சிறியதாயினும் அருமை வாய்ந்ததென்பதில் ஐயமில்லை. பிற்காலத்தில் தமிழில் எழுந்த பேரகராதிகட்கெல்லாம், சதுர் அகராதி கலங்கரை விளக்கம்போல் நின்று நெறிகாட்டும் தகைமை யொன்றே அதன் பெருமைக்குப் போதிய சான்றாகும். பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுப்புடையதாய் நலமுறத் திகழும் சதுரகராதி பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாகும். அவ்வகராதியை அடிப்படையாகக் கொண்டு, தனித் தமிழ் அகராதிகளும், தமிழ் ஆங்கில அகராதிகளும் எழுந்தன.

தமிழ் அகராதியின் தாதையாய வீரமா முனிவர் தமிழ் லத்தீன் அகராதி யொன்றும், போர்ச்சுகீசியத் தமிழ் அகராதி யொன்றும் இயற்றிப் போந்தார். இவ்வாறு அகராதிகள் இயற்றிச் சிறப்புற்ற முனிவர், தேம்பாவணி யென்னும் நறுந்தமிழ் மாலை புனைந்து தமிழணங்கைப் போற்றுவாராயினர். சூதேய நாட்டிற் பிறந்து புகழ் பெற்ற சூசையப்பர் என்னும் வளன் பெருமையைக் கூறும் தேம்பாவணியில் திருக்குறளின் தெள்ளிய கட்டுரை மணமும், சிந்தாமணியின் செவ்விய கற்பனை நலமும், கலைமலிந்த கம்பன் கவிச்சுவையும் ஆங்காங்கு அமைந்து அழகு செய்யக் காணலாம். இதனை விரித்துரைத்தல் ஈண்டியலாதாயினும் இரண்டொரு சான்று காணலாகும்.

வேளாண்மை யென்னும் விழுமிய பணியின் நலமுணர்த்தப் போந்த திருவள்ளுவர் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம், தொழுதுண்டு பின்செல்பவர்" என்று அருளிப் போந்தார். இத்திருக்குறளின் தெள்ளிய நயமறிந்த முனிவர்,

"உழுதுண் பார்உயிர் வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண் பார்எனில் தாம்தொழில் செய்தபின்
அழுதுண் பார்கொடை கோடலில் லாயின
பொழுதுண் பாரில் யாரெனப் பூசவே"

என்று தேம்பாவணிற் பொதிந்துரைத்துப் போந்தார்.

இனிக் கல்வியிற் பெரியவர் என்று தமிழ்நாடு போற்றிப் புகழும் கம்பர் அருளிய கவிகள் வீரமாமுனிவரது உளத்தைக் கவர்ந்து, அவர் காவியத்தில் மிளிரும் தன்மையை ஆராய்வோம். தமிழ்நூல் மரபுக் கேற்பத் தேம்பாவணியில் வழிபடு தெய்வ வணக்கம் கூறலுற்ற வீரமாமுனிவர்,

"சீரிய உலகம் மூன்றும் செய்தளித்து அழிப்ப வல்லாய்!
நேரிய எதிர் ஒப்பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமல பாதம் வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன் தன் காதை அறமுதல் விளங்கச் சொல்வாம்"

என்றருளினர். முழுமுதற் பொருளாகிய இறைவனைப் பெயராற் குறியாது முத்தொழில் புரியும் முறையால் அறிவித்தார். 'மும்மை சால் உலக மெல்லாம் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் கடவுளைச் சீரிய உலகம் மூன்றும் செய்து, அளித்து, அழிப்பவல்லாய்' என்று சிறப்பித்தார். தனக்குவமையில்லாத் தனிப்பெருந் தலைவனை 'நேரிய எதிர் ஒப்பில்லான்' என்று ஏத்தினர். இருள்சேர் இருவினையும் கடந்து, காலமும் கணக்கும் நீத்த காரணனாய் நின்ற இறைவனை, 'நீத்த ஓர் கடவுள்' என்று குறித்தார். உள்ளுவார் உள்ளத்தில் ஆனந்தத் தேன் சொரியும் இறைவன் திருவடியை 'வேரிய கமல பாதம்' என்று வியந்துரைத்தார். இத்தகைய தெய்வ மணங் கமழும் திருவடி மலர்களை 'வாக்கால் தணிவு தோன்ற வாழ்த்தியும், மெய்யாற் பணிவு தோன்றத் தொழுதும்' அறம் முதலாய உறுதிப் பொருள்களை விளக்கும் வளன்கதையை முனிவர் தமிழ் மொழியால் விளக்கலுற்றார். இவ்வாறு தேம்பாவணியில் அமைந்த தெய்வ வணக்கம்,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே"

என்னும் கம்பர் கவியோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும்.

இன்னும், தேம்பாவணி, அவையடக்கக் கவியின் ஈற்றடியில் அமைந்த 'ஆசையுற்று ஊமனேனும் அருங் கதை அறையலுற்றேன்' என்னும் முனிவர் மொழிகள் 'அன்பெனும் நறவம் மாந்தி மூங்கையான் பேசலுற்றான், என்ன யான் மொழியலுற்றேன்' என்னும் கம்பர் வாக்கைத் தழுவி எழுந்தனவென்று கருதுதல் மிகையாகாது.

இனிச் சிந்தாமணியின் நந்தாச் சுவையினை நுகர்ந்து இன்புற்ற வீரமா முனிவர் நாட்டு வளம் கூறும் கவிகளிலும், நகர நலம் கூறும் கவிகளிலும், அக்காவியத்தின் சிறந்த வாடை வீசுகின்றது. தேமாவும் தீம்பலாவும் தெங்கும் வாழையும் எங்கும் நிறைந்து இலங்கிய ஏமாங்கத நாட்டைப் புகழப் போந்த சிந்தாமணி யாசிரியர்,

"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனியோடு வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென்னும் இசையால் திசை போயதுண்டே"

என்று செந்தமிழ் மொழிகளால் எழுதியமைத்தார். இக் கவியின் இன்பம் நுகர்ந்த முனிவர், சூதேய நாட்டு வளங்கூற நேர்ந்தபொழுது,

"பாய்ந்த தெங்கதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி சரிந்த தேன்புனல்
தோய்ந்த வாயெலாம் இனிமை தோய்ந்தன"

என்று திருத்தி யமைத்துத் திளைப்பாராயினர்.

அரியதோர் அகராதி தொகுத்தும், அருங்காவியம் இயற்றியும் தண்டமிழ் மொழிக்குத் தொண்டுசெய்த வீரமா முனிவர், நன்னூல் முதலிய பன்னூல்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து '**தொன்னூல் விளக்கம்**' என்னும் பேரால் ஒரு

செந்தமிழ் இலக்கணம் இயற்றினர். இந்நூல் எழுத்து முதல் அணியீருகவுள்ள ஐந்திலக்கணங்களையும் அழகுறத் தொகுத்துரைக்கின்றது. நன்னூல் போலவே இந்நூலும் நூற்பாவால் ஆக்கப்பட்டுள்ளது. நால்வழக்கில் அமைந்த செந்தமிழ் மொழியின் திட்பநுட்ப முணர்ந்து ஐந்திலக்கண நூலும் உரையும் எழுதிய வீரமா முனிவர், உலக வழக்கிலமைந்த தமிழையும் இனிதறிந்து, 'கொடுந்தமிழ்' என்னும் பெயரால் லத்தீன் மொழியில் ஓர் இலக்கண நூல் வரைந்துதவினர். தமிழ் மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் ஆர்வமுற்று முயலும் பிறநாட்டறிஞர்க்கு இந்நூல் பேருதவியாக நிற்பதாகும். பழம் பெருமை வாய்ந்த தமிழ்நாட்டாரது பண்பினை மேலை நாட்டினரும் இனிதுணருமாறு, தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும், வீரமா முனிவர் லத்தீன் மொழியிற் பெயர்த்தமைத்தார். இன்னும், இவர் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், வாமன் கதை முதலிய வசன நூல்களும் இயற்றித் தமிழ் உரை நடையை ஆதரித்தார். இங்ஙனம் தமிழ் மொழிக்குப் பல்லாற்ருற் பணிசெய்த வீரமாமுனிவர் போன்ற மேலை நாட்டறிஞரைச் செய்ந்நன்றியறியும் தமிழ் நாட்டார் என்றும் பாராட்டுவர்.

---

5. தமிழும் தமிழரும்

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

தமிழ்: இசை மயமான இயற்கை நிலத்தில் வாழ்வு நடாத்தி அவ்வியற்கைத் தமிழைச் சுவைத்தவர்கள் நம் முன்னோர்கள். தமிழ் என்பதற்கு 'இனிமை' என்பது பொருள். 'தமிழ் தழீஇய சாயலவர்' என்றும், 'தமிழ் சேர் காஞ்சி' என்றும், புலவர்கள் 'இனிமை' என்னும் பொருள்படத் 'தமிழ்' என்னும் சொல்லை ஆண்டிருத்தல் காண்க. பழமை மக்கள் இயற்கையினூறுந் தமிழையே, பின்னைத் தாங்கள் அவ்வியற்கைப் பொருளுக்கிட்ட தென்மொழிக்கும் வழங்கினர்கள் போலும்! இயற்கை இனிமையோடு—தமிழோடு—அம்மக்கள் கொண்ட வாழ்

விலெழும் இன்பக் கிளர்ச்சியால், தாங்கள் மாந்திய இனிமை - தமிழ் - உறையுளாம் இயற்கையைச் சொல் லோவியமாக எழுதுவது அவர்களது பெருவிளையாட்டு அச்சொல்லோவியங்களைக் கொண்ட இன்பப் பெட்டகங் கள் கலித்தொகை, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம் முதலிய நூல் களாம்.

நம் மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண் டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ். அத்தமிழ் அமிழ்தம் கொண்ட நாடு இந்நாடு. ஆ! ஆ! இது நினைவிலுறும்போது, ஊறும் இன்பத்தை என் னென்பேன்! அவ்வின்பம் நுகர்ந்த இக்காலத் தமிழ்ப் பாவலர் பெருமானாகிய நம் பாரதியார், "செந்தமிழ் நாடெ னும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது காதி னிலே" என்று கூறியிருத்தல் காண்க. இவ்வின்பத் தமிழ் நாட்டிற் பிறந்த நாம், இதுபோழ்து அத்தமிழின் பம் நுகர்கிறோமா? இல்லையே! காரணமென்ன? உரிமை இழந்தோம்; தமிழை மறந்தோம். மீண்டும் அவ்வுரிமை யுணர்வு பெற யாண்டுப் போதல் வேண்டும்? தமிழ்த் தாயிடஞ் செல்வோமாக. அவள் சேவையால் உரிமை யுணர்வு பெறலாம். தமிழ் மக்களே, அச்சேவைக்கு எழுங்கள்! எழுங்கள்!!

வாழ்வு: பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்வை இரு கூறுகப் பிரித்து வாழ்ந்தார்கள். அவை அகவாழ்வு, புற வாழ்வு என்பன. அகவாழ்வாவது, ஒத்த நலன், ஒத்த குணன், ஒத்த கல்வி முதலியனவுடைய ஒருத்தியும் ஒரு வனும் கூடி நடாத்தும் இல்லற வாழ்வு. அவ்வாழ்வு, இன்ப வாழ்வாக இயங்க வேண்டுமேல், அதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டற்பாலது. "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை," என்றார் பொய்யாமொழியாரும். அப் பொருள் எவ்வாறு கிடைக்கும்?

பொருட் பேற்றிற்குக் கல்வியும், தொழிலும் தேவை. கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெறுதற்குச் சிறந்த அமைப்புக்கள் இன்றியமையாதன. அவ்வமைப் புக்கள் செவ்வனே இடையூறின்றி இயங்க, நாட்டில்

அமைதி நிலவல்வேண்டும். மாற்றார் பகை கடிந்து, அமைதிகாக்க நல்லரசுவேண்டும். நல்லரசில்லையேல், நாடு காடாகும். ஒழுங்குபட்ட அரசிருந்தாலன்றி, அக வாழ்வென்னும் இல்லறம் ஒழுங்குபெற நடைபெறல் அரிது. இவ்வரசு, கல்வி, பொருள் முதலியவற்றைக்கொண்டதே புற வாழ்வு என்பது. இதனால், அக வாழ்விற்கும் புறவாழ்விற்கும் உள்ள தொடர்பு நோக்கற் பாலது. அவை இரண்டும் உடல் உயிர் போல்வன. அகவாழ்வு, அவ்வந் நாட்டு இயல்புக்கேற்றவாறு அமைந்து கிடப்பது. அவ் வாழ்விற்கு அரணமாறு அவ்வந்நாட்டு இயல்புக்கேற்ற வண்ணம் புற வாழ்வும் அமைதல்வேண்டும். அகமும் புறமும் ஒன்றுபட்ட வாழ்வே இயற்கை வாழ்வாகும். பழந் தமிழ் மக்கள் கோலிய முறையில், எங்கணும் வாழ்வு நடைபெற்று வரின், உலகில் போர் ஏது? அடக்குமுறை ஏது? ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஆள்வது ஏது? இப்பொழுது அகம் நம்முடையதாகவும், புறம் மற்றவருடையதாகவும் இருத்தலால், நாட்டில் இன்பம் இல்லை. பழந் தமிழ் நூல்கள் அவ்வின்ப உரிமைபெறும் வழியைக்காட்டுகின்றன. அவ்வழியைப் புதுக்கண் கொண்டு நோக்குவோமாக.

சாதி: பண்டைத் தமிழ் நாட்டில் பிறப்பால் சாதிப் பாகுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. நிலப் பாகுபாடு ஒன்றே அந்நாட்டில் நிலவியிருந்தது. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்" என்றார் நந்தமிழ்ப் பெரியாரும். இடைக் காலத்தில் முளைத்த பிறப்பு உயர்வு தாழ்வும், தீண்டாமைக் கொடுமையும் நாட்டை அடிமைக் குழியில் வீழ்த்தி விட்டன. அக்கொடுமையினின்றும் நாட்டை விடுக்க இது போழ்து அன்பர் பலர் முயன்று வருகின்றனர். அம் முயற்சிக்குப் பழந்தமிழ் நூலாராய்ச்சி பெருந்துணை செய்யும் என்பதை யான் விரித்துக் கூற வேண்டுவதில்லை.

பெண்மக்கள்: பழந்தமிழ் நாட்டில் பெண்மக்கள் நிலை எவ்வாற்றிருந்தது என்பதும் ஆராயற்பாலதே. அது குறித்து இரண்டோர் உரை கூறுகிறேன்; 'தலைவனுந்

தலைவியும் ஒத்த கல்வியுடையவராயிருந்தார்,' என்னுங் குறிப்பும், 'பெண்மகள் தனக்கினிய ஒருவனைத் தனக்குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்' என்னுங் குறிப்பும், இன்ன பிறவும், பழந் தமிழ் நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் புலப்படுத்தும். விரிவு களவியலிற் காண்க.

"பெண்ணை வெறுத்தல் பேரின்பம்," என்னும் பாழுங் கொள்கை இடைக்காலத்தில் தோன்றியதாகும். பெண்ணழகில் அன்புக் கடவுளுண்மை உணரும் பெருமை வாழ்வு பெற்றிருந்தார்கள் நம் பண்டைத் தமிழ் மக்கள். இறந்துபடாது இன்னும் உள்ள பழந் தமிழ் நூல்கள் அறம் பொருள், இன்பம் என்னும் மூன்றையே அறிவுறுத்தல் காணலாம். ஆண்மகன், தன்னையொத்த பெண்மகளைக் காமப் பொருளாக என்று கருதினனோ, அன்றே இன்பம் சிற்றின்பம், பேரின்பம் எனப் பிரியலாயிற்று. அப்பிரிவு தோன்றிய நாள் தொட்டு, உலகும் கூடா ஒழுக்கத்துக்கு இரையாகித் தேய்கிறது. பிரிந்த பேரின்பத்தை வீடெனக் கொண்ட வழக்குப் பின்னைய வழக்காகும்.

'பழந்தமிழர்கள் கடவுளுண்மையில் உறுதி இல்லாத மக்களா? என்று சிலர் வினவலாம். அவர்கள் கடவுள் உண்மையில் உறுதியுடையவர்களே. ஆனால் அவர்கள் கொண்ட கடவுள் எது? அவர்கள், கடவுளைக் 'கந்தழி' என்னும் பெயரால் வழுத்தினர்கள். கட்டற்ற ஒன்று 'கந்தழி' என்பது. அழுக்காறு, அவா, வெகுளி முதலிய கட்டுகள் கடந்து விளங்கும் இன்ப அன்பே அக் 'கந்தழி' என்னுங் கடவுள். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடை அன்பே!' என்று பின்வந்த தமிழ் நாட்டன்பர்—மணிவாசகனர்—அருளியிருத்தலை நோக்குக. அவர் கடவுளை, 'இன்பமே,' என்றும்,' 'அன்பே,' என்றும், விளித்திருத்தலை ஓர்க. அவ்வன்புக் கடவுள் யாண்டில்லை? இயற்கையெல்லாம் அவ்வன்புக் கடவுள் வடிவல்லவோ? அவ்வியற்கையினின்றும் திரண்டெழுந்த அன்புக் கொழுந்தன்றே நம் பெண் அமிழ்தம்? அப்பெண்ணமிழ்தமா காமப் பொருள்! கொடுமை! கொடுமை!! மாசு

படர்ந்த மனத்துக்கன்றே பெண்ணெனும் பெருமை காமப் பொருள்? மாசிலா மனத்தார்க்கு அப்பெண்ணெனும் பெருமை காதற் கடவுளல்லவோ? அப்பெண்ணோடு கூடி வாழும் வாழ்வன்றே இயற்கை வடிவான இறை அன்பைக் கூட்டும் வாழ்வாகும்? இயற்கையை விடுத்து, இறைவனை எவ்வாறு காண்டல் முடியும்? இதுபோழ்து உலகம் போற்றும் கவியரசர் இரவீந்திரநாத தாகூரது கொள்கை, பெரிதும் பழந்தமிழர் கொள்கைக்கு அரண் செய்வதெனச் சுருங்கச் சொல்கிறேன்.

"பெண்ணுக்கு உரிமை நல்கிய என்னருமைத் தமிழ் நாடே! இதுபோழ்து யாண்டுளாய், யாண்டுளாய்?" என்று யான் அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? தமிழகத்திற் பிறந்த நாமல்லவோ முயலவேண்டும்? என்னுடன் பிறந்த அருமைத் தமிழ் மக்களே, அந்நாட்டைக் காண வீறுகொண்டு எழுங்கள்! எழுங்கள்!!

கலை: இனித் தமிழ் நாட்டின் கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானூராய்ச்சி, தொழில், வாணிபம், அரசியல், வீரம் முதலியவற்றின்மீது சிறிது கருத்துச் செலுத்துவோம்; தமிழ், இயல் இசை நாடகம் என்னும் மூன்று வழியிலும் வளர்ந்து வந்தது. தமிழ்க் கல்வித்திறனை உணர்த்தப் பழைய சங்கம் மருவிய நூல்களும், பெரிய புராணம், கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களும் கருவிகளாகத் துணைபுரிகின்றன. பன்னூறு ஆண்டுகளாக நாடு உரிமை இழந்தமையானும், மக்கள் நாட்டுக் கல்வியல்லாத கல்வியை வயிற்றுப் பிழைப்பு நாடிப் பயின்று வருவதலானும், நாட்டில் நல்விலக்கியங்கள் பிற்காலத்தில் தோன்றவில்லை.

தமிழ் நாட்டுக்கெனச் சிறப்பாக இசையுண்டு. இதனை வலியுறுத்தச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதை ஒன்றே சாலும். தமிழ் நாட்டின் இசைச் சிறப்பைக் காலஞ்சென்ற தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய 'கருணாமிர்த சாகரம்' என்னும் விரிந்த நூலில் பரக்கக் காணலாம். தமிழ் நாட்டின் மருத்துவ மாண்பைச் சித்த நூல்கள் தெரிவிக்கின்றன.

நாடி பார்த்து நோய் இயல்பு உணர்தலும், பாடாணங்களில் மருந்து செய்தலும் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும்.

தமிழ் மக்கள் வான ஆராய்ச்சியில் வல்லுநர்களாயிருந்தார்கள் என்பதற்கு,

"செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்தென் போரும் உளரே......

என வரூஉம் ஒரு புறப்பாட்டை எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிடுகிறேன். இது குறித்து, அணித்தே இவ்வுலகு நீத்த அறிஞர் சாமிக்கண்ணுப் பிள்ளை அவர்கள் செய்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து பெருக்கவேண்டுவது நந்தமிழறிஞர் கடமை.

தமிழ் மக்களின் ஓவியப் பெற்றியை விரித்துக் கூற வேண்டுவதில்லை. பழைய சோழர் கட்டடங்களும், பழைய கோயில்களும், அமராவதி,மாவலிபுரம் முதலிய இடங்களிலுள்ள சிற்ப நுட்பங்களும், பழந்தமிழ் மக்களின் அணிகலன்களும், அவர்களது பாட்டுக்களும் தமிழ் ஓவியத்தின் உயர்விற்கு நிலைக்களன்களாயிருக்கின்றன. தாகூர் முதலிய கவிவாணரும், தமிழர் ஓவியத்தைப் போற்றியிருத்தல் கருதத் தக்கது. 'நெடுநிலை மாடத் திடைநிலத் திருந்துழி,' என்றும், 'நிரைநிலை மாடத் தரமிய மேறி' என்றும், 'வேயா மாடமும்' என்றும், 'மான் கண் கால் அதர் மாளிகை இடங்களும்' என்றும் இளங்கோ அடிகள் தமிழ் மக்கள் கட்டடங்களைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

தொழில்: தமிழ் மக்களது தொழின்முறைகள், சிலப்பதிகாரம், இந்திரவிழவூ ரெடுத்த காதையில் கடல்மடை திறந்தாலெனப் பொழியப்பட்டிருக்கின்றன. 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டு நுண் வினை,' கண்டவர்கள் நந்தமிழ் மக்கள்; 'கிழியினுங் கிடையினுந் தொழில் பல

பெருக்கிய' மக்கள் நந்தமிழ் மக்கள்; 'பாலாவியன்ன,' மிக மெல்லிய ஆடை நெய்தவர்கள் நந்தமிழ் மக்கள்; இயற்கை இன்ப வாழ்விற்கு இன்றியமையாத தொழில் பல தமிழ் நாட்டிலிருந்தன.

தமிழ் நாட்டார் பண்டை நாளில் பிறநாட்டாரோடு செய்து வந்த வாணிபப் பெருக்கை நோக்குழித் தமிழ் நாட்டின் வளனும், தொழில் முறைகளும் நன்கு புலனாகும். அந்நாளில் தமிழ் மக்கள், காலிற் பிரிவதோடு, கலத்திற் பிரிந்துங் கடல் கடந்து வாணிபஞ் செய்தார்கள். 'காலிற் பிரிதல், கலத்திற் பிரிதல்,' என வரூஉம் பழந்தமிழ் நூல்களின் வழக்கும், 'திரை கடலோடியுந் திரவியந் தேடு,' என்னும் பழமொழியும், தமிழ் மக்கள் கடல் கடந்து செய்த வாணிபப் பெருக்கைக் குறித்தல் காண்க. பண்டைத் தமிழ்நாடு, கிறிஸ்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ் சிரியா முதலிய நாடுகளோடு வாணிபஞ் செய்ததைத் தற்காலச் சரித்திரக்காரர்கள் நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார்கள். அந்நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலியன தமிழ் நாட்டினின்றும் அனுப்பப்பட்டன என்பதற்குப் பல அகச் சான்றுகளிருக்கின்றன.

யவனர்க்கும் தமிழ் மன்னர்க்கும் இருந்த உறவும், அங்கும் இங்கும் ஒற்றர்களும் மெய்காப்பாளர்களும் நடமாடியதும், தமிழ் நூல்களில் வெள்ளிடை மலைபோல அறியக் கிடக்கின்றன. யவனர் முதலிய சொற்கள், தமிழ் நூல்களில் நுழைந்ததும், தோகை முதலிய தமிழ்ச்சொற்கள், துகி முதலிய சொற்களாக மருவி ஹீப்ரு முதலிய மொழிகளில் நுழைந்ததும் ஆராயத்தக்கன. இவ்வுண்மைகளைத் திரட்டிச் சரித்திர வடிவாக உலகுக்கீந்த கனகசபைப் பிள்ளை, சவரிராயப் பிள்ளை, நல்லசாமிப் பிள்ளை, சூரியநாராயண சாஸ்திரியார், சீநிவாசப் பிள்ளை முதலிய தமிழ் மக்களது நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

அரசியல்: இவ்வுலகியற்றுறைகள் யாவும் நேர்பட இயங்குதற்கு அந்நாளில் நிலைக்களனாக நின்றது அரசி

யலே ஆகும். நல்லரசியல் இல்லா நாட்டில் அமைப்பேது? வாழ்வேது? அறஒழுக்கமேது? ஒரு நாட்டின் நாகரிகமோ, அநாகரிகமோ, அந்நாட்டின் அரசியலை அன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல் என்பது, உலகிடை மறவினை மலியாது, அறவினை மலியுமாறு செய்தற்கு ஏற்பட்ட ஓர் அமைப்பு. அது குடி ஆட்சியோ, கோனாட்சியோ; குடிக்கோனாட்சியோ, எவ்வாட்சியோ பற்றி இயங்கினும் இயங்குக. அதனால், குடிமக்கட்குக் கேடு விளைதலாகாது என்பதொன்றே கவனிக்கற்பாற்று. பெயருக்குக் குடியாட்சி என்ற ஓர் ஆட்சி வகுத்துச் செல்வாக்குடைய சில்லோர் ஒன்றுகூடி, நாட்டை வருத்துவதால் என்ன பயன் விளையும்? எவ்வாட்சியாயினும், அதன் அடியில், அறமும், அருளும், கால்கொண்டு நிற்றல் வேண்டும். இவையில்லா அரசியல் அரசியலாமோ?

பழந்தமிழ் நாட்டில் வளர்ந்த அரசியல் பெரிதும் அறத்தையும், அன்பையும், அருளையும் அடிப்படையாகக் கொண்டு நிலவியது என்பதற்குச் சான்றுகள் பலவுள.

> "நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
> மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்."

என்று புறநானூறு, உலகத்துக்கு உயிர் அரசு என்பதைத் தெரிவித்தல் காண்க. உயிரனைய அரசு, கோல் கோடி, மறவினை பெருக்கின், நாட்டு நிலை என்னும்? அந்நாட்டினும் கடும்புலி வாழும் காடே நன்று. ஒரு நாட்டார் தமது நிறை காக்க வேண்டுமேல், முதலாவது அவர் நல்லரசு கோலிக்கொள்ளுதல் வேண்டும். தமிழ் மக்கள், அரசின் பெற்றி உணர்ந்த முதியவர்களாகலான், அவர்கள் அரசை உயிரெனக் கொண்டார்கள். அம்மக்கள் நிலைக்கேற்ற முறையில், அரசு அந்நாள் அமைந்திருந்தது. பழந்தமிழ் அரசின் நடுநிலையும், அருட்டன்மையும் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

'இத்தமிழ் நாட்டவராகிய நாம், பலப்பல சாதியினராய்ப் பலப்பல சமயத்தவராய்ப் பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கின்றோமே! ஒருமைப் பாட்டுக்கு வழியும் உண்டோ?'

என்று சிலர் வினவலாம்; சிலர் கருதலாம். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நின்று நம்மனைவரையும் ஒருமைப் படுத்தி நிற்பது ஒன்றுளது. அதன்மீது நாம் கருத்தைச் செலுத்துவமேல், அது வேறுபாடுகளை வீழ்த்தி, ஒருமைப் பாட்டைப் உண்டுபண்ணும். அஃது எது? அதுவே நமது அருமைத் தமிழ்.

தமிழ் நாட்டிற் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து, தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்ட எல்லோரும் பெரிதும் தமிழே பேசுகின்றனர். பிற நாட்டினின்றுந் தமிழ் நாட்டிற் குடி புகுந்தோர் சிலரே. அவரும் தமிழ கத்தைத் தாயகமாகக் கொண்டிருத்தல் கண்கூடு. அச் சிலரது ஒழுக்க வழக்கங்களையும் வழிபாடு முதலியவை களையுங் கொண்ட பலரும் தமிழரேயாவர். பழமையில் பற்றுடைய மற்றவர் தமிழரென்பதை விளக்க வேண்டுவ தில்லை. இவ்வனைவரும் தமிழ் என்னும் அமிழ்தை நாடோறும் வாழ்வில் பருகும் சகோதரரே யாவர். சிலர் தமக்குள் ஒருமை காட்டுந் தமிழ் மொழியிற் பற்றுக் கொண்டு உழைப்பாராயின், தமிழ் நாட்டில் ஒருமைப்பாடு நிகழும் என்பது திண்ணம்.

சமய வேற்றுமை, கடைச்சங்கப் புலவர் காலத்தி லேயே தலைகாட்டிற்று. அன்னார் சமய வழிபாட்டில் பன் மைப்பட்டு நின்றும், தமிழை வளர்ப்பதில் ஒருமைப்பட்டு நின்றமையான், இவ்வொருமை அப்பன்மையை விழுங்கி, நாட்டை ஓம்பியதை ஆராய்ந்து, உண்மை கண்டு ஒருமைப் படுவோமாக. ஆதலால், நம்மை ஒருமைப்படுத்தவல்ல தமிழை வளர்க்க முயல்வோமாக.

———

6. மாணிக்கவாசகர்

[மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்]

செந்தமிழ்ப் பாண்டிவள நாட்டிலே, சைவ மணங் கமழுந் திருவாதவூர் என்னும் திருநகரில், சிவபக்தி மிகுந்த அந்தணர் குலத்தில் மாணிக்கவாசக அடிகள் தோன்றியருளினார்கள். இவர்களுக்குப் பிள்ளைத் திருப்பெயர் திருவாதவூரர் என்ப தாம். இவர்கள் தோன்றியருளினமையைக் குறித்துக் கட வுண் மாமுனிவர், 'உலகில் மாயப் பொங்கிருள கல, எம்மையா ளுடையான் அன்பர் இதயதாமரைகளெல்லாஞ் செம்மை யாய் மலர, ஞான தினகரர் உதயஞ் செய்தார்' என்று சிறப்பித்துப் பாராட்டுவர். திருவாதவூரர் இளம்பருவத்தில் கருவி நூல்கள். அரசியல் நூல்கள், சமய நூல்கள் முதலிய வற்றை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்த அறிவுடையராக விளங்கினர். அக்காலத்து மதுரையிலிருந்து தமிழ்நாடு புரந்த அரிமர்த்தன பாண்டியன் இவர்கள் அறிவின் மாண்பை யுணர்ந்து, அழைத்துத் தன் அரசியல் நடாத்துதற்குரிய அமைச்சருள் தலைவராக்கினன். இவர்கள் மதிநுட்பம் நூலோடுடையராய் அமைச்சருள் தலைவராக வீற்றிருந்து அறநிலை பேணித் தம் செயலாற்று நாளில், 'நானார், என் னுள்ளமார், ஞானங்களார்' என்று இன்னோரன்ன தத் துவ ஆராய்ச்சியில் தலைப்பட்டு, இருவினைக் கீடாகப் பிறந்து இறந்துழலும் உயிர்த்தொகுதிகளினியல்பும், அவ் வுயிர்களை வினைப்பயன் நுகர்வித்து அருள்புரியும் பரங் கருணைத் தடங்கடலாகிய இறைவ னியல்யும், அவ்விறை யுணர்ந்து இன்பம் எய்துதற்குத் தடையாகவுள்ள பாசப் பொருள்களினியல்பும் உள்ளவா றுணர்ந்து தெளி வெய்தினர். இந்நிலையில் அடிகள், 'கூத்தினர் தன்மை வேறு கோலம் வேறுகுமாபோல்' பாண்டியன் இட்ட பணி யைப் புறத்தே மேற்கொண்டும் அகத்தே பற்றற்றும் சிவபக்தியில் ஈடுபட்டு ஒழுகுவாராயினர்.

அந்நாளில், பாண்டியற்குக் குதிரை வாங்கப் பொன் கொண்டு சென்றவர், திருப்பெருந்துறையில் குருந்த மரத்து நீழலில், இவர், 'பந்தமறும் எல்லையது பார்த்தினி

திருந்த' சிவபரம்பொருளாகிய குருபரனைத் தரிசித்து உள்ளங் கரைந்து உலகியலை மறந்து 'உன்னடியடைந்து நாயேன் உறுபவம் ஒழித்தல் வேண்டும், என்னுயிர்க் கிறைவா' என்று முன்னுற வணங்கி நின்றார். இவர் அதிதீவிர பக்குவநிலையைக் கண்டு பெருமான் அருள் கூர்ந்து சிவஞானபோதமென்னுஞ் சைவத்தலை நூலின் நுண்பொருள்களைத் தெளிவுறுத்தியபின், 'இருவினைப் பாசமும் மலக்கல்லார்த்தலின் வருபவக் கடலின்வீழ் மாக்களேறிட, அருள்மெய்யஞ்செழுத்தை' அநுபவ நிலையில் உபதேசித்தருளினர். இங்ஙனம் குருபரன்பாலு ணர்ந்த தம் அநுபவத்தையே, 'நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்' என்று அடிகள் திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறாகப் பாண்டியன்பொருட்டுக் குதிரை வாங் கப்போனவர் கொன்னுறு பரிகொளாமல் கோவணங் கொண்ட செய்தியைப் பாண்டியன் கேட்டு, ஓலை போக்கி, அடிகளை அழைப்பித்துத் துன்புறுத்தினுகை, அடிகள் தஞ்செயலற்று எல்லாம் இறை செயலாகக்கொண்டிருப் பாராதலின், அவ்விறை நினைவில் ஈடுபட்டிருந்தனர். பின்னர் இவர்பொருட்டு இறைவன் நரியைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தும், மண் சுமந்தும், பிரம்படி யுண்டும், அடிகள்பால் தாங்கொண்ட அருட்டிறத்தை உலகுக்கு விளக்கியருளினுர். அடிகள் திருவருளமிர் தத்தை நிறையவுண்டு, சிவாநுபவச் செல்வராக விளங்கிய நிலையில், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற முதுமொழிப்படி, தம் அருளநுபவத்தை உலகத் துள்ள மக்களுக்கெல்லாம் வழங்க ஆண்டவன் அருள்வழி நினைந்து, திருவாசகம் என்னும் இசைப்பாடற் றொகுதியைத் திருவாய்மலர்ந்தருளினர்.

உலகப் பற்றை முழுதும் துறந்த உத்தமச் சிவ ஞானச் செல்வர், தமக்கு இறைவன் அருளிய ஒப்புயர் வில்லாப் பேரின்ப நிலையைத் தாம் அநுபவித்த அளவில் நின்றுவிடாது, உலகத்து மக்களுக்கெல்லாம் உபகரிக்க நினைந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. இல்வாழ்வார்க்கு

அன்பென்னும் அருங்குணமும், துறவற வாழ்க்கை யுடையார்க்கு அருளென்னும் பெருங் குணமும் சிறப்பாக இருத்தல் வேண்டும் என்பர் திருக்குறளாசிரியர். மாணிக்கவாசகப் பெருமான் இவ்விரு பெருங் குணங்களுக்கும் நிலைக்களமாக விளங்கிய பெரியராவர்.

இவர் மேற்கொண்ட நெறி, சரியை கிரியை யோகங்களுக்கு மேலான ஞான நெறியாகிய சன்மார்க்கமாகும். இந் நெறியில் நின்ற அடிகள், காணப்படும் இவ்வுலக வியல்புகளைத் தம் கூர்த்த மதியால் உய்த்துணர்ந்து, பருப்பொருளாகிய மாயா காரியங்களெல்லாம் தத்தங்கால வெல்லையில் அழிந்தழிந்து தேய்ந்தொழிவன என்னும் உண்மையையும், இவ்வெல்லாவற்றையும் கன்மங்களுக்கீடாகப் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் பேராற்றல் வாய்ந்து காலவெல்லையைக் கடந்து நிற்கும் கடவுள் ஒருவருளர் என்பதையும், அப்பெருமான் சார்ந்தார்க்குத் தண்ணிழலாய்ப் பேரின்ப வடிவாகத் திகழும் இயல்பினர் என்பதையும் உள்ளவாறுணர்ந்து, அப்பெரும் பெயர்க் கடவுள் உபதேசத்தால், தாம் எய்திய பேரானந்தப் பெருஞ் செல்வத்தை மக்களெல்லோரும் துய்க்கவேண்டுமென்னும் பேரருளுடையராய்த் திருவாசகம் என்னும் தெளிதேனைப் பொழியும் அருண்முகிலாயினார்.

திருவாசகப் பாடல்கள் மாணிக்கவாசக அடிகளுடைய சிவானுபவ நிறையில் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுத வெள்ளமெனின் மிகையாகாது. பிற்காலத்துச் சிவயோக நெறி நின்று இறையருள் அநுபவத்திலீடுபட்டு ஒழுகிய தாயுமான அடிகள், 'என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து, அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே' என்று கூறியதற்கு இலக்கியமாகவுள்ளவர் மாணிக்க வாசக அடிகளே. இவர்கள் அன்பு நெறியை வியந்தே, 'வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ' என்றுங் கூறினார். படிப்பவர் கேட்பவர் உள்ளங்களைக் கனிவிக்கும் கவிமழை பொழிந்த சமீபகாலத்துக் கவிஞர் தலைமணியாகிய இராமலிங்க அடிகள், திருவாசகத்தைப் பன்முறை யோதி புணர்ந்து பயின்றவர் என்பது அவர் அநுபவப் பாடல்

களால் அறியலாம். ஒரு சிறந்த கவியினுள்ளத்தை மற்றொரு கவிதான் உணர முடியும். அங்ஙிலேயில், திருவாசகப் பாடல்களில் உள்ளந் தோய்ந்து, பொருள் நயங்களில் ஈடுபட்ட இராமலிங்க அடிகள்,

> "வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
> நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
> ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று கூறினர். நான் கலந்து பாடுங்கால் என்றது நினைக்கத் தக்கது. ஒரு பெரியார் பாடலைப் படிப்பவர்கள் உள்ளமும், அப்பாடற் பொருளும் அத்துவித நிலையடைதல் வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுதலையே, 'நான் கலந்து பாடுங்கால்' என்றனர். திருவாசகச் சுவை 'ஊன் கலந்து உயிர்கலந்து இனிப்பது' என்றார் உயிரிற் கலந்து தன் வயமாக்குங் கனிவு திருவாசகத்துக்குச் சிறப்பியல்பாகும். இதற்குமேல் அவ்வநுபவச் சுவையை எடுத்துக் கூறுவதற்கு எங்ஙனம் இயலும்!

திருவாசகத் திருப்பாடல்களை ஔடவ ராகமாகிய மோகனத்திற் பொருளுணர்ந்து பாடுவராயின், கல்நெஞ்சமுங் கரையும். "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் மூதுரையும் இதுபற்றி எழுந்ததே. கவிஞர் பெருமானாகிய சிவப்பிரகாச அடிகள்.

> "வாதவூ ரன்பர் மலர்வாய்ப் பிறந்த
> திருவா சகமிங் கொருகா லோதில்
> கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
> தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
> அன்ப ராகுந ரன்றி
> மன்பதை யுலகில் மற்றைய ரிலரே"

என்று தம் ஆராமையை வெளிப்படுத்தினர். இன்பக் கலைகளுள் ஒன்று இசை யென்பர் அறிவுடையார். அவ்விசைக்குக் கொழுகொம்புபோல் ஆதாரமாக நிற்பது இசைப் பாடல்களாகும். சுவை கனிந்த பாடல்களிலன்றி இசையின் பெருமையை உணர்தல் இயலாது. இசை பாடு

பவன் சுவைகளை அநுபவித்துத் தன் உட்கோளைப் புலப்படுத்துவதற்குச் சிறந்த பாடல்களே பற்றுக்கோடாகும்.

"வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே"

என்னும் தமிழ் மறையில் யாழிசைக்கு வேதப் பாடல்கள் பற்றுக்கோடாக விளங்கின என்பது புலனும். தமிழ் நாட்டில் இசைக்கலை வளர்ச்சியடைந்த காலம் தேவார திருவாசக காலம் என்பது யாவர்க்கும் உடன்பாடாகும். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்றும், 'கானத்தின் எழுபிறப்பு' என்றும் திருஞான சம்பந்தர் பெருமை கூறப்படுகிறது. திருவாசகப் பாடல்களின் சொற்களையும் எழுத்துக்களையும் சுரநிலங்களில் அமைத்துப் பாடினல், சுரங்களுக்குப் பாடல் அமைந்ததோ, பாடல்களுக்குச் சுரம் அமைந்ததோ என்று இசைவல்லார் பெருவியப்பெய்துவர். பிறவிப்பிணிக்குச் சார்ந்த மருந்தாகவுள்ள அரும்பொருள்களைப் பாடல்களில் அமைத்து இசையாகிய அநுபானத்தோடு ஊட்டுதற்கு முற்பட்டவர் மணிவாசகப் பெருந்தகை யாவர்.

இவர்கள் பற்பல சிவஸ்தலங்களுக்குஞ் சென்று, ஆங்காங்குக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனை உள்ளத்தமைத்துப்பாடும் முகமாகத் தம் அநுபவ உணர்வை அன்பர்களுக்குத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில இடங்களில் மாத்திரம் உள்ளதாகக் கொண்டு பாடியது பொருந்துமோ எனின், ஒரு பசுவின் உடல் முழுதும் பால் பரவியிருப்பினும், அது தோன்றுதற்குரிய உறுப்பினன்றிப் பிறிதிடத்து வெளிப்படாதவாறு போல, மக்கள் வழிபாட்டிற்கிரங்கி அருள்புரிதற்கு அருட்குறிகளின் முகமாக ஆண்டவன் வெளிப்பட்டு அருளுவர். இவ்வுணர்ச்சி மேற்கொண்டே,

"பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
படர்ந்ததோர் படரொளிப் பரப்பே"

என்னும் திருப்பாட்டின் இம் முற்பகுதியில் இறைவனுடைய எங்குநிறை இயல்பைக் கூறிப் பிற்பகுதியில்,

"சிறுநு சிந்தை எழுந்ததோர் தேனே !
திருப்பெருந் துறையுறை சிவனே !"

என்று தம் அகத்தும் சிவ தலத்தும் வெளிப்படும் உண்மையைப் புலப்படுத்தி யுள்ளார். இங்கே எங்கு நிறை நிலையில் ஒளிப்பரப்பாகவும், உள்ளத்தில் இனிக்குந் தேனாகவும், திருக்கோயிலில் மங்கலகரமான மூர்த்தியாகவும் பெருமான் விளங்குவர் என்னும் பொருணயம் நினைந்து இன்புறத்தக்கது.

ஆண்டவன் அமைப்பாகிய அன்பு, அருள், அறிவு முதலிய அரிய குணங்களில் ஈடுபடுதலன்றி, மக்களமைப்புக்களாகிய சாதி, குலம், பிறப்பு, பொருள் முதலிய பற்றிய உயர்வு தாழ்வுகளைச் சிறிதும் நம் மணிவாசகனர் கருதியவரல்லர். இவ்வுண்மையைப் புலப்படுத்துதற்கே, 'சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்' என்று தம் முற்பட்ட இயல்பையும், 'குலங் களைந்தாய் களைந்தாய் என்னைக் குற்றம்' என்று இறைவனுக்குத் தாம் ஆளாய்ப் பிறப்பட்ட இயல்பையும் கூறுவராயினர். மக்களுக்குக் குலப் பெருமை பேசுதல் இயல்பென்பதும், அதனல் உண்டாகுஞ் செருக்கு ஒழியின், அது மூலமாக உண்டாகும் எல்லாக் குற்றங்களும் நீங்கிவிடும் என்பதும் அவர்கள் கண்ட உண்மைகளாம். உடல், பொருள் ஆவி மூன்றனையும் இறைவனுக்குரிய பொருள்களாகக் கொடுத்து, அவற்றில் ஒரு சிறிதும் பற்றின்றி ஒழுகுதலை மேற்கொண்டனராதலின், அவற்றல் ஏதும் இடர்ப்பாடு அடைந்திலர் என்பது விளங்கும்.

ஒருவன் எவ்வெப் பொருள்களிற் பற்றெழிந்திருக்கின்றனே, அவ்வப் பொருள்களால் வருந் துன்பத்திற்கு ஆளாகான் என்பது பெரியவர்கள் கண்ட உண்மை. அடிகள் விருப்பு, வெறுப்புற்ற நிலையில் நின்றார்களெனினும், மக்கள்பாலுள்ள சோதர உரிமையை விட்டவரல்லர். அதற்குக் காரணம் அன்னரெல்லாம் தாம் பெற்ற பேரின்பப் பெருவாழ்வில் தலைப்பட வேண்டுமென்னும் கருணையே யாகும். இவ் வருளறத்தை மேற்கொண்டே,

'காலமுண்டாகவே காதல்செய் துய்மின்' என்றும், 'மூலை பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்றும், உலகத்தவரை நோக்கி அருளமுதத்தை இடனுண்ண அழைப்பாராயினர். அவர் அன்புடன் விடுத்த அழைப்பிற் கிணங்கி வாராத மடவோரை, உலக நிலைமையை புணர்த்தி அஞ்சுவித்தாயினும் அழைத்து ஊட்டவேண்டுமென்னும் அருள் நிறைவால் 'நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோ மினி நாம் செல்வோமே' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இனி, அடிகள் உலகியலைக் கடந்த நிலையில் நின்று மாற்ற மனங்கழிய நின்ற மறையோனாகிய இறைவன் அருள் வெள்ளத்துள் மூழ்கிப் பேரின்ப நிலையில் தலைப்பட்டு அநுபவித்த உண்மைகளெல்லாம் மனம் வாக்குகளுக்கு அடங்காதனவாகவும், அவற்றைப் பதிகரணமாக மாறப்பெற்ற தம் உள்ளத்தால் அறுதியிட்டுத் தெள்ளமுத உரைகளால் அறிவிற் சிறியாரும் உணர்ந்து இன்புறும் வண்ணம் இசையினிமை மிக்க பாடல் வடிவில் வெளிப்படுத்திய முறை மிகவும் பாராட்டற்குரியது. அம்மானை, பொற்சுண்ண மிடித்தல், உந்தி, சாழல், தெள்ளேணம், ஊசல் முதலிய மகளிர் விளையாடல்களில், அவர் தம்முள் உரையாடு முகமாக, அரிய அனுபவ உண்மைகளை எளிய முறையில் தெளிவுபடுத்தியது, அடிகள் ஏனைய மக்கள் பால் வைத்த பெருங் கருணைக்குப் பெரிதும் சான்றாவதாகும். குயிலை முன்னிலைப்படுத்தி இறைவன் அருட்குணங்களை இங்ஙனம் கூவுக எனவும், வண்டுகளை நோக்கி இங்ஙனம் ஊதுக எனவும் அருளிச்செய்து திருப்பாடல்களை நோக்குங்கால், ஓசை யொலியெலாம் சிவமயமாகக் கண்டார் என்பது புலனாம்.

தாம் அநுபவித்த பொருள்களின் வரையறையும், தெளிவும், குழைந்த அன்பின் கனிவும் ததும்ப இடையறாது ஒழுகும் தேனருவி போன்ற ஒழுக்கமிக்க இவர்கள் பாடல்களின் இயல்பை நம்மனோர் எங்ஙனம் எடுத்துரைக்க இயலும்! ஆயினும், இவற்றிற்கெல்லாம் எடுத்

துக் காட்டாகச் சிறிய வடிவிலமைந்த ஒரு திருப்பாடலைக் குறிப்பிடலாம் என்று எண்ணுகின்றேன். அஃதாவது,

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து"

என்பதாம். சுவை மிக்க அமிர்தத்தைப் பெய்து வைத்தற்குரிய கலத்தில் அவ் வமிர்தத்திற்கு மாறுபட்ட பொருள் இருத்தலாகாது. இருக்குமாயின், முதலில் அதனை அறவே ஒழித்துவிடவேண்டும். பின்னர் அக் கலத்தை உரிய கருவிகொண்டு அழுக்கொழித்துத் தூய்மைப்படுத்த வேண்டும். அதன்பின் நல்லமிர்தத்தைப் பெய்து வைத்தல் முறையாம். இஃது உலகியலிற் கண்டது. இவ்வுண்மையை நினைவுகூர்ந்து அடிகள் இத் திருப்பாடலில் ஓர் அரிய அநுபவத்தை வெளியிடுவராயினர். இறைவனர் தம் அருளமிர்தத்தை அடிகள் உள்ளமாகிய கொள் கலத்தில் பெய்து வைக்கத் திருவுளங்கொண்டு, அதன்கண் நீண்ட காலமாக ஈட்டப்பட்டு நிறைத்துவைத்த மாயா காரியப் பொருள்களாகிய துன்பங்களை அறவே ஒழித்துப் பின் மயக்க உருவமாகப் படிந்து கிடந்த இருளைத் தன் அருட்பார்வை யொளியாற் போக்கிப் பேரின்பமயமாகிய அருளமிர்தத்தைப் பெய்து இன்புறுத்தினரென்பதும், அந் நிலையில் அடிகள் உள்ளம் முழுதும் அன்பு மயமான குளிர்ந்த இடமாக அதன்கட் பெருமான் வீற்றிருந்தருளினரென்பதும் இதன்கட் புலனும்படி, 'சோதியாய் நின்று இருளகற்றித் துன்பந் தொடர்வறுத்து இன்பம் பெருக்கி, அன்பமைத்து என்னுடைய சிந்தையே ஊராகக் கொண்டான்' என நிரனிறைப் பொருள்கோளாக அழகு பொருந்தத் திருவாய் மலர்ந்தருளினர்.

இங்ஙனம், மாணிக்கவாசக அடிகள் நம்மனோர் உய்யும் பொருட்டுத் தாம் அநுபவித்த சிவாநந்தத் தெள்ளமுதைச் சொல்லினிமை பொருளினிமைகளிற் சிறந்த பாடல் வடிவில் வெளிப்படுத்தருளிய பேருபகாரத்தை நினைவு

கூர்தற்கு அறிகுறியாக நாம் மேற்கொள்ளத்தக்கது, அப்பாடல்களை இசை நலம் பொருந்த மெய்யன்போடு ஓதியும், உண்மைப் பொருள்களை உணர்ந்தும் இன்புறு தலேயாம். அன்பே சிவம் என்னும் அரிய பொருளுரை மக்கள் உள்ளத்தில் நிலவுவதாக.

---

7. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனு?

[கா. நமச்சிவாய முதலியார்]

பாண்டி வளநாட்டில் பண்டைக் காலத்தே மணிமுடி தாங்கிய மன்னனொருவன் செங்கோல் செலுத்திச் சிறப் புற்று விளங்கியிருந்தான். அவன், கல்வி யறிவு பெரிதும் உடையவன்; எதனையும் ஆராய்ந்து பார்ப்பவன்; எதனை யும் உய்த்துணர்ந்து, அதன் உண்மையைத் தேர்பவன்; கற்றேரைத் தன் கண்ணேபோல் கருதிக் காக்கவல்ல நல்லியல்பு வாய்ந்தவன். அதனல் இன்னிசைப் புலவர் அனைவரும் அவன் அவைக்கண் குழுமி இன்புற்று வாழ்வா ராயினர். அரசன் தன் மனத்தில் தோன்றும் ஐயப் பாடுகளை அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுத் தீர்த்துக் கொள்ளும் அவாவுடையவன். அவர் பெயர் பாண்டியன் மாகீர்த்தி என்பது.

மாகீர்த்திக்கு மக்கள் இருவர் இருந்தனர். இவ்விரு வர்க்கும் மனப்பான்மை வேறுபட்டிருந்தது. ஒருவன், தன் தந்தை தனக்கு வழங்கும் பொருளனைத்தையும் செலவு செய்து மகிழ்ச்சியடைவான். மற்றவனே, தனக்குக் கிடைக்கும் பொருளனைத்தையும் சிதறவிடாமல் சேர்த்து வைத்து, அதனைக் கண்டு கண்டு மனம் பூரிப்பான். அவ் விருவர் செயல்களையும் கண்ணுரக் கண்ட காவலன், 'என்னே இவர்தம் இயல்பு! இவை ஒன்றுக்கொன்று மாறுன வழியை யுடையன. செலவாளி தன் நாட்டுக்கு நன்மை விளைப்பவனு? சிக்கனக்காரன் தன் நாட்டிற்கு நலம் பயப்பவனு? இவற்றின் உண்மை நன்கு புலப்பட

அறிதல் வேண்டும்' என்று ஆராய்வானானான். அவனுக்கு ஏதும் புலப்படவில்லை; அதனால், அவன் தன் அவைக் கண் சிறந்து விளங்கிய புலவர்களுள் இருவரை நோக்கி, ஒரு நாள் வினவுவானாயினன்:

"இன்னிசைப் புலவீர்! என் மனத்துள் ஓர் ஐயப்பாடு உளது; அதனை நீவிர் ஆராய்ந்து தீர்த்தல் வேண்டும். இவ் வுலகில் மானிடர்க்கு மனப்பான்மை மாறுபடுகின்றது: அதனை மனத்தின் இயல்பு என்கின்றனர். ஒருவன் பெருஞ் செலவாளியாக இருக்கின்றான்; மற்றொருவன் மிக்க சிக்கனக்காரனாக இருக்கின்றான். இவ்விரண்டு இயல்பும் ஏறுமாறானவை. இவற்றை அவனவனுக்கு உற்ற மனப்பான்மை என்னலாம். இவ்விருவரின் மனப் பான்மையும் மாற்ற இயலாது. ஆயினும், இவ்விருவருள் தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் யாவன் என்னுஞ் செய்தியே என் மனத்துக்குள் எழுந்த ஐயப்பாடாகும். அதனை நீவிர் இருவீரும் ஆராய்ந்து சொற்போரின் மூல மாக எனக்குத் தெரிவித்தல் வேண்டும்."

கீரன், நக்கீரன் என்னும் புலவர் இருவரும் அவ்வையப் பாட்டைத் தீர்த்தற்பொருட்டுச் சொற்போர் புரிவா ராயினர்.

கீரன்—'பாண்டி வேந்தே, மானிடன் ஒருவன் பெறத் தக்க பேறுகள் நான்காகும். அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள், அறமும் பொருளும் இன்பமும் இம்மையில் அடையக் கூடியவை. அம் மூன்ற னுள்ளும் முந்துறச் சிறந்து நிற்பது பொருளேயாம். ஒருவன் அறஞ் செய்தற்கும், இன்பம் துய்த்தற்கும் பொரு ளொன்றே ஆதாரமாகும்.

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு"

என்றார் வள்ளுவனார்.

"அஃதாவது, பொருளைப் பெரிதும் தேடினவர்க்கு மற்றைய அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் வந்தடை யும் என்பதாம். ஆகலின், அத்தகைய பொருளை வீணிற்

செலவு செய்யாது, எவ்வாற்றானும் அதனைக் காத்து வாழ்வதே பேரறமாம். 'பொருடனைப் போற்றி வாழ்' என்னும் மூதுரையும் உலகில் வழங்குகின்றதே. பெருஞ் செலவாளியைக் காட்டிலும் பெருஞ் சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நற்பயன் விளைப்பவன் என்பது என் கருத்து ஆதலின், அதற்கான நியாயங்களை எடுத்துக் காட்டுகின்றேன்.

முதலாவது—சிக்கனக்காரன், பொருள் பலவகையினுஞ் சிதறுண்டு போகாமல், ஓரிடத்திலேயே முதற் பொருளாகச் சேர்ந்திருக்கச் செய்து வருவதனால், அந் நாட்டின் செல்வம், அவன் நாட்டிலேயே நிலைத்திருக்கும். அதனால் பொருள் நூலின் கொள்கைப்படி, சிக்கனக்காரன் தன் நாட்டிற்குப் பெரும் பயன் விளைப்பவனாகின்றான். பிற நாடுகளுக்கு நம் நாட்டுப் பொருள்கள் பற்பல வகையிற் செல்லுமாயின், நம் நாடு நாளடைவில் நலங்குன்றி வறுமையடையும். ஆதலின் சிக்கனக்காரன் செய்கை, பொருள் நூலின் முறைக்குப் பொருந்தியிருக்கின்றது. பிறநாட்டு வேந்தர் நம் நாட்டின்மீது படையெடுத்து வருங்காலத்தும், பஞ்சம் முதலிய இடுக்கண்கள் நேருங்காலத்தும், பொருள் பெரிதும் வேண்டப்படுவதாகும். அதனால், சேமித்து வைக்கப்பெறும் பொருளே நாட்டிற்கு நலம் பயப்பதாகும்.

இரண்டாவது—பெருஞ் செலவாளியின் செய்கை அறநூல் முறைக்கு மாறானதாகும்.

> 'ஆன முதலில் அதிகஞ் செலவானால்
> மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
> எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
> நல்லார்க்கும் பொல்லனாம் நாடு'

என்பவாதலால், பெருஞ் செலவாளியின் செய்கை அறிவுடையோரால் வெறுத்து ஒதுக்கத்தக்கதேயாகும்.

மூன்றாவது—பொருளிடத்துப் பற்றில்லாத ஒருவன் அதனைப் பற்பல வகையிற் செலவழிக்கத் துணிவான். பொருள், தீச்செய்கைக்கே பெரும்பாலும் காரணமாயிருத்

தலின், செலவாளி அதனைத் தீச்செயலில் செலவிடப் பின்னிடான். நற்செயலுக்கும் பொருள் காரணமாகுமன்றே; பெருஞ் செலவாளி அப்பொருளை நற்செயலிற் செலவு செய்யானே எனின், செய்தலும் கூடும். ஆயினும், தீச்செயலில் தன் பொருளைச் செலவிடாமல் இருக்க அவனைத் தடுப்பது ஏதும் இல்லையே. சிக்கனக்காரன் நற்செயலில் தன் பொருளைச் செலவிட்டுப் புகழைத் தேடிக்கொள்ளா விடினும், தீச்செயலில் அதனைச் செலவுசெய்து இகழ்வைத் தேடிக்கொள்ள இடந்தர மாட்டான்.

நான்காவது—செலவாளி, சிக்கனக்காரன் ஆகிய இவரிருவரும் நேர்மாருக இருந்து, தம் நாட்டுக்குச் சில வழிகளில் நன்மையையும், சில வழிகளில் தீமையையும் புரிந்து வருகின்றனராயினும், மிக்க செலவாளியைவிட, மிக்க சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் ஆகின்ருன். அஃது எப்படியெனில், தேனீக்கள் காலமறிந்து மலர்தோறும் சென்று வருந்தி உழைத்து, தேனைத் திரட்டிக்கொண்டு போய்க் கூட்டில் சேர்த்து வைப்பது போல, சிக்கனக்காரன் ஒல்லும் வகையால் செல்வம் தேடித் தன் பேழையில் சேர்த்து வைக்கிருன். ஈக்கள் தேடிவைத்த தேன் பலருக்கும் பயன் படுவதுபோல, சிக்கனக்காரன் ஈட்டிவைத்த பொருள், அவனுக்குப் பின்னர், பலருக்கும் பயன்படுவதாகும். ஆகவே, சிக்கனக்காரன் தன் வாழ்நாள் வரையில் தான் தேடிய பொருளினுல் ஒரு பயனும் அடையாமற் போயினும், பின்னர் அதனுல் பலர் பயனடைகின்றனர். பெருஞ் செலவாளியோ எனின்—பொருளினுலாகிய பயனைத் தான் இருக்குமளவும் துய்க்கின்ருனில்லை; சிறிது காலமே அதன் இன்பத்தை அனுபவிக்கின்ருன்.

ஐந்தாவது—சிக்கனக்காரன் ஒருவகையில் இன்பமும் அடைகின்ருன்; தன் பொருளைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்ருன். செலவாளியோ இவ்வகையான இன்பம் எய்துதல் அரிது. ஏனென்ருல் பெருஞ் செலவினுல் தன் கைப்பொருள் அனைத்தையும் செலவிட்ட பிறகு, மேன்மேலும் வருவாயில்லாத காலத்தில் துன்புறுவான்.

பலருக்கும் வழங்கிய காரணத்தால் அவன் அடைந்த மகிழ்ச்சியினும், பொருளற்ற காலத்தில் அடையும் வருத்தமே மிகப் பெரிதாகக் காணும்; இம்மட்டோ! பொருள் மிக்கிருந்த காலத்துத் தான் மேற்கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும், வருவாய் குன்றியவிடத்துத் தான் விடக்கூடாமையின், மிக்க துன்பமே அடைவான்; தான் உலகத்தில் இருந்து என்ன பயன் என்றும் எண்ணுவான். எப்பொழுதும் வறுமை நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவனது நிலையைக் காட்டிலும், முதலில் செல்வனயிருந்து, பின்னர் வறுமை யடைந்தவனது நிலைமை, அம்மம்ம, கொடிது! கொடிது! சிக்கனக்காரன், செல்வம் இருந்தும் வறிய நிலையிலேயே வாழ்ந்து வந்தவனுதலால், அவனுக்கு எவ்விதத் துன்பமும் இல்லையாம். மேற்போந்த நியாயங்களால், சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் என்பது என் கொள்கை.''

கீரன் கூறிய கட்டுரையைக் கேட்ட நக்கீரன் எழுந்து தன் உட்கோளை எடுத்துரைப்பானுனன்:

“மன்னர் மன்ன! கீரர் கூறிய உரையின்படி இவ்வுலகில் ஒருவன் அடையத்தக்க பெரும் பேறுகளுள் பொருளே முதன்மையானது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவண தெய்த இருதலையும் எய்தும்' என்பது உண்மையுரையே. அத்தகைய பொருளை எவ்வகையிலும் இம்மியும் செலவு செய்யாமல் சேர்த்துவைக்கும் சிக்கனக்காரன், வரையாது வழங்கும் வள்ளலைக் காட்டிலும் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவன் எனக் கீரர் கூறியது எனக்குச் சிறிதும் உடன்பாடன்று.

முதாவது—பொருள் நூலின் கொள்கைப்படி ஒரு நாட்டின் பொருள் நாற்புறமும் பரவச்செய்வதே, அந் நாட்டின் நலத்திற்கு அடுத்ததென்பதைக் கீரர் மறந்தனர் போலும்! ஒரு நாட்டில் சிலர் பெருஞ் செல்வராய் இருக்கப் பலர் மிக்க வறியர்களா யிருப்பது அந்நாட்டிற்கு நலம் விளைவிப்பதன்று. எந்நாட்டில் மக்கள் அனைவரும் ஒரே நிலையில் இருக்கின்றார்களோ, அந்நாடே சிறந்து

தாகும். சிக்கனக்காரன் பொருளையெல்லாம் பிறரிடத்தும் பரவாதபடி தன்னிடத்திலேயே சேர்த்து வைத்துக் கொண்டிருப்பானாயின், அப்பொருளினாலாகிய பயனை அந் நாடு, முற்றும் இழந்துவிடும். இவ்வுண்மையை யுணர்ந்தே, நம் பெரியோர், தக்க ஏற்பாடுகள் பலவற் றைச் செய்திருக்கின்றனர்.

திருமணம் முதலிய சிறந்த செயல்களை நடத்துங்காலத் தில் செல்வர்கள்—இயம், இன்னிசை, நாட்டியம் முதலிய் வற்றில் தேர்ச்சி பெற்றவர்களை அழைத்துப் பொருள் தந்து, சிறப்புற நடாத்தும் செயலை மேற்கொண்டிருந் தனர் என்று தெரியவருகின்றது. பெருஞ் செல்வனை ஒருவன் தன் பொருளனைத்தையும் சேமித்து வைத்திருப் பானாயின், அது மற்றையோருக்குப் பயன்படாமற்போகும் அன்றே! அன்றியும், அரிது முயன்று கற்ற இன்னிசை யாளர் முதலியோர் பிழைப்பின்றிப் பெரிதும் வறுமை யுற்றுத் துன்பம் எய்துவர்.

இரண்டாவது—செலவாளியின் செய்கை அற நூலுக்கு முரண்பாடாகும் என்று கீரர் கூறியது வியப்பி னும் வியப்பாகும். அவர் தம் கொள்கையை நிலை நிறுத்த, 'ஆனமுதலில் அதிகம் செலவானால்' என்னுஞ் செய்யுளை எடுத்துக் கூறினர். அவ் வறநூலே எனக்கும் துணை செய்யாமற் போகவில்லை.

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயின பின்(பு) ஆரே அனுபவிப்பார்
பாவிகள் அந்தப் பணம்'

என்னும் செய்யுளைக் கீரர் கேட்பாராயின் யாது விடை கூறுவரோ அறியேம். அதனால் பொருளைச் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரன் செய்கை, அருவருக்கத் தக்க தென்பது இச்செய்யுளால் தெளிவாகு மன்றே.

மூன்றாவது—பெருஞ் செலவாளி, தீமைக்குக் காரண மான பற்பல கொடிய செயல்களைச் செய்யவும் பின்னி டான் என்று கீரர் கூறியது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைக்கும்; அவன் தீச் செயல்களுக்கே தன் பொருளைச்

செலவிடுவான் என்பது பொருந்ாதன்றே! குமணன் என்னும் அரசன் தன் நாட்டைத் துறந்து காட்டில் வதிந்த காலத்தும், வறுமையால் வாடித் தன்னைத் தேடி யடைந்த பெருந்தலைச் சாத்தனர் என்னும் புலவர்க்குத் தன் தலையையும் கொடுக்க உடன்பட்டானன்றே. அதனால், வள்ளலாவான் தன் உயிரையும் வழங்கப் பின்னிடான் என்பது வெளியாகும்.

நான்காவது—சிக்கனக்காரன் தேனீக்களைப்போல மெய் வருந்திப் பொருளைத் தேடி அதனைச் செலவு செய்யாமல் சேர்த்து வைப்பதனல், அப்பொருள் அவன் இறந்த பின்னர்ப் பலருக்கும் பயன்படுவதாகும் என்று கீரர் கூறியதும் ஒரு நியாயமாமோ? வள்ளலாகிய செலவாளி தான் வாழும்போதே பலருக்கும் வழங்கித் தானும் துய்த்து அப்பொருளைப் பயன் படுத்துவது சிறந்த செயலன்றோ?

'உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ!
இழந்தானென்(று) எண்ணப் படும்'

என்னும் செய்யுளுக்கு இசையச் சிக்கனக்காரன் சேர்த்து வைத்த பொருளையுடையவனயினும் அதனை இழந்தவனே யாவனன்றோ?

ஐந்தாவது—பொருட்பேய் பிடித்த பேராசையுள்ள ஒருவன், அப் பொருளைச் சேர்ப்பதற்கு எவ்வகைப்பட்ட தீச் செயலையும் செய்யப் பின்னிடான்; கொலை முதலிய குற்றங்களைச் செய்யவும் அஞ்சான். சிக்கனக்காரன், தான் இறக்குமளவும் தன் பொருளைப் பார்த்துக் கொண்டே இன்பமடைகின்றான் என்று கீரர் கூறினர். வள்ளலோ தன் வாழ்நாளில் தான் ஈட்டிய பொருள்களைப் பலர்க்கும் வழங்கி ஈத்துவக்கும் இன்பம் அடைகின்றான்.

ஆறாவது—அறத்திற்கும் இன்பத்திற்கும் பொருள் காரணமாகும்; அதுவே வீட்டிற்கும் ஒருவாறு காரணமாகும்; ஆதலின், பொருளை நல்வழியில் செல்வழிப்பவனே அறம் இன்பம் வீடு ஆகிய இவற்றை அடையப்பெறு

வான். சிக்கனக்காரன் இவற்றில் ஒன்றையேனும் பெறான். அதனால், செலவாளியின் செயல் இவ்வுலகத்திற்கு உபகாரமாகவும், அவனுக்கே பெரும் பயனை விளைவிப்பதாகவும் இருத்தலினால், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே சிறந்தவனாவான் என்பது என் சித்தாந்தம்.''

இவ்விருவரும் கூறிய பேருரைகளைக் கேட்டு முடிவு தேறானகி மன்னன் மனம் தடுமாறி நிற்கையில், கீரன் கொற்றனார் என்னும் புலவர் ஆராய்ந்து முடிவு கூறுவராயினர்:

"மன்னர் மன்ன! இன்னிசைப் புலவர்களாகிய இருவரும் நேர்மாறான கருத்தையே கூறினர். கீரர், பொருளைச் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரனே சிறந்தவன் என்று கருத்துக் கொண்டனர். நக்கீரர், வரையாது கொடுக்கும் வள்ளலே சிறந்தவன் என்று வாதித்தனர். அவரவர் தத்தம் கூற்றுக்கேற்ப மேற்கோளும் காட்டினர்.

செல்வம் உலக இன்பத்திற்கு முக்கிய காரணமாகும். அதனைச் செலவு செய்யாது வறிதே வைத்திருப்பதனால் பயனின்றாம். செலவாளி தன் வருவாய்க்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். வருவாய் சுருக்கமாகவும், செலவு பெருக்கமாகவும் இருப்பின், அச்செலவாளி இன்னல் உறுவான். அதனால், தன் வருவாயை நோக்கி ஒருவன் செலவு செய்தல் வேண்டும். தேடிய பொருள் அனைத்தையும் புதைத்து வைப்பவன் பூதம் போல்பவன் ஆவான்.''

இவ்வாறு கீரன் கொற்றனார் கூறிய முடிவுரையைக் கேட்ட முடிமன்னன் உண்மை தேர்ந்து உவப்புற்றான். அதனால் அரசன் 'செலவாளியே இவ்வுலகத்திற்கு மிகச் சிறந்த துணைவனாவான்' என்பதை அனைவர்க்கும் விளங்கக் கூறினான். 'செலவாளி தன் செயலினால் தான் ஒருவன் துன்புற்றாலும், பலருக்கும் பயன்பட்டு, அவர் அனைவரையும் இன்புறச் செய்வதனால் அவனே சிக்கனக்காரனைவிடத் தன் நாட்டிற்கு மிக்க நலம் புரிபவன் ஆகின்றான் என்பது தேற்றம்' என்றான்.

8. வேள் - பாரி

(வித்துவான் மு. இராகவையங்கார்)

பழைய வேளிருடைய வரலாறுகளுக்குள்ளே பாரி என்னும் பெருந்தகையின் சரித்திரம் இனிமையும் பெருமையும் இரக்கமும் உடையதாகும். மாரியன்ன வரையா ஈகையால் உலகமுள்ளளவும் ஓங்கு புகழ் நிறுவிய தமிழ் வள்ளல்களில் இவ்வேளிர் தலைவனையே முதல்வனாகச் சொல்லத்தகும். தமிழ் மூவேந்தரும் மற்றைச் சிற்றரசர்களும்போல, இப்பாரி, நாடும் பொருளும் நன்கு படைத்தவனில்லையாயினும், இவனது வள்ளன்மை அவரெல்லாரையும் பெரிதும் கீழ்ப்பட வைத்தமையால், இவனது பெருமை மலைமேல் இட்ட விளக்குப்போல் விளங்குவதாயிற்று. இவ்வேளிர் தலைவனது வள்ளன்மையையே, கொடைப்பெருமைக்கு ஓர் எல்லைக்கல்லாகப் பிற்காலத்துப் பெரியோர்களும் குறித்து வைப்பாராயினர். எத்தனையோ வள்ளல்கள் முன்னுளில் விளங்கியிருப்பினும், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" என்னும் அருமைத் திருவாக்காற் குறிக்கப் பட்டவன் இப்பெருந்தகையே யன்றே? முற்காலத்தே புலவரையும் இரவலரையும் இவன் எவ்வாறு போற்றி வந்தவனென்பதும், பண்டைச் செந்தமிழ்ப் புலவர் இவனது தடங்கருணையையும் பெருங் கொடையையும் எங்ஙனம் புகழ்ந்துள்ளாரென்பதும், பிற வரலாறுகளும் சங்க நூல்களில் இவ்வள்ளலைப் பற்றிய பாடல்களை நோக்குவோர்க்கு நன்கு விளங்கும். அந்நூல்களிலும் பிறவற்றிலும் இவனது வாழ்க்கை பற்றிக் கூறும் வரலாறுகளைச் செவ்வனம் ஆராய்ந்து ஸேது சம்ஸ்தான வித்துவான் ஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் 'செந்தமிழ்ப் பத்திரிகை' இரண்டாம் தொகுதியில், 'ஒளவையார்,' 'பாரி மகளிர்' என்ற வியாசங்களிலே நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கூற்றை இவ்வியாசத்துக்கேற்ப ஒழுங்குபடுத்திக் கூறிப் பின்பு இவ்வள்ளலைப்பற்றி யாமறிந்த சில விசேடங்களையும் எழுதுவோம்.

பாரி என்பான், தமிழ் நாட்டிற் பண்டைக்காலத்தே பெரும்புகழ்பெற்று விளங்கிய வள்ளல்கள் எழுவருள் தலைமை வாய்ந்தவன்; வேள் என்னும் பட்டம்பெற்ற உழுவித்துண்போர் வகையினன்; செல்வமிக்க முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டுக்குத் தலைவன். இவனது பறம்பு நாடு பறநாடு எனவும் வழங்கப்படும்; "பாரி பற நாட்டுப் பெண்டிரடி," "பறநாட்டுப் பெருங் கொற்றனார்" என வழங்குவது காண்க. இவன் பறம்பென்னும் பெயருடைய வளமலைக் கண்ணே வலியுடையதோர் பேரரண் அமைத்து, அதனைத் தன் அரசிருக்கையாக்கி, அதன்பாற் சிறக்க வீற்றிருந்தோன். இவனது மலையரண், பெரிய அழகும் அரிய காவலும் உடையது எனவும், பகைவர் முற்றியகாலத்தும், வறங்கூர்ந்த காலத்தும் தன்னகத்து வாழ்வார் இனிதுண்டு செருக்குதற்குரிய மூங்கில் நெல்லும் பலாப்பழமும் வள்ளிக்கிழங்கும் நறுந்தேனும் தன்பால் மிக்கதெனவும், என்றும் வற்றாததும் பேரினிமை பயப்பது மாகிய குளிர்ந்த நீரையுடைய பைஞ்சுனை யொன்று தன் கண் உடையதெனவும் சான்றோர் கூறுவர். இப்பறம்பு பாண்டி நாட்டதென்பது, "வரிசைத் தமிழ்ப்புனை பாரியும் பாண்டிய மண்டலமே" என்னும் பாண்டி மண்டல சதகச் செய்யுளாற் புலப்படுகின்றது. இப்பாரி, நல்லிசைப் புலவர்களால் மேம்படுத் துரைக்கப்பட்ட கபிலர் என்னும் புலவர் தலைவர்க்கு உயிர்த் தோழனைவன்; ஔவையாராலும் பேரன்பு பாராட்டப்பட்டவன். இவன் நிழலில்லாத நீண்ட வழியில் தனிமரம்போல் நின்று, தன்னையடைந்த அறிஞர், மடவார், வலியர், மெலியர் யாவர்க்கும் இன்னருள் சுரந்து, மூவேந்தரினும் மிகுதியாக நன்கு வழங்கிய வள்ளியோன். இவனது பெருங் கொடைக்குக் கபிலர் மாரியினையே பல்லிடத்தும் உவமை கூறுவர். இவன் ஒருநாள் பொற்றேரூர்ந்து ஒரு காட்டிற் செல்லும்போது, முல்லைக் கொடியொன்று படர்தற்குக் கொழுகொம்பின்றி வெற்றிடையிலெழுந்து காற்றால் தளர்ந்து நடுங்குவது கண்டு, அவ் வோரறிவுயிர் மாட்டும் உண்டாகிய பேரருளால், அஃது இனிது படருமாறு,

தனது பொற்றேரை அதன் பக்கத்திட்டுத் தன் இணையடி சிவப்ப நடந்து போயினன் என்பர். தன் அரசிருக்கையாகிய பறம்புமலை ஒழியத் தன்னாட்டு முந்நூறு ஊர்களையும் இவன் இரவலர்க்கே அளித்தனன் என்று கபிலர் கூறுவர். இவனது வரையா வண்மை, 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை' என்பதனால், சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனாராலும் எடுத்தாளப்பட்டது என்ப தொன்றே இவனது வள்ளற்றன்மையைத் தெள்ளிதிற் புலப்படுத்தும். இங்ஙனம் மாரிபோன்ற வரையா ஈகையால் இவன் யாரினுஞ் சிறக்க விளைத்த பெரும்புகழ்க்கு அழுக்காறு கொண்டும், தமக்கு மகட் கொடுக்க மறுத்தமை பற்றியும், தமிழ் மூவேந்தரும் ஒருங்கு கூடிப் படையெடுத்துப் போய், இவனது பறம்பாகிய மலையரணை நெடுங்காலம் முற்றுகை செய்ய, அதனால் அவ்வரண் அடைமதிற்பட்டது. அப்போது, வேள் பாரிக்கு உயிர்த் துணைவராய் அக்காலத்தும் அங்கிருந்த கபிலர் என்னும் புலவர் பெருமான் கிளிகளை வளர்த்து விடுத்து அரணுக்கு அப்புறத்தே விளைநிலங்களில் உள்ள நெற்கதிர்களை நாளுங் கொணரச் செய்து, அங்கிருந்த குடிபடைகளை அருத்திப் போரால் தளரா வண்ணம் பாதுகாத்து வந்தனர்.

பின் கபிலர், பறம்பை முற்றிய மூவேந்தரையும் நோக்கி, "நீவிர் முத்திறத்தீரும் ஒருங்குகூடித் தானை யானை, குதிரை முதலிய படைகொண்டு எத்துணைக் காலம் முற்றிப் பொருதீராயினும், இப் பாரியுடைய பறம்பு உம்மாற் கொள்ளுதல் அரிது. இவனது முந்நூறூரையும் இவன்பாற் பாடிப்பெற்ற பரிசிலர்போல நீவிரும் பாடினராய் வரின், கொள்ளுதல் எளிது" என்று இவனது புரவலர்க்கருமையும் இரவலர்க்கு எளிமையுமாகிய பெருநிலையைத் தம் இனிய பாடலான் அறிவிக்க, அதனால் அவ் வேந்தர், இவனை எதிர்த்து வெல்லுதல் அரிதென்பதோர்ந்து, இவனோடு பொருதற்கஞ்சி ஓடினர் என்பர். இதன் பின்னர், மூவேந்தரும் ஒருங்குகூடி வேறொரு சூழ்ச்சி செய்து பாரியை வஞ்சித்துக் கொன்றனர்.

இதனை, 112-ஆம் புறப்பாட்டுரையில், "ஒருவன் மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றமையின்" என வருதலால் அறிக. அவ்வேந்தர் மூவரும் இவனியல்புக்குத் தகப் பரிசிலர் வேடம் பூண்டோ, பிறரைப் பரிசிலராக விடுத்தோ இவனை இரந்து தம்மகப்படுத்திக் கொன்றனராதல் வேண்டும்.

இங்ஙனம், புரவலர்க்கு இன்னனாய், இரவலர்க்கு இனியனாய் விளங்கிய நல்லிசை வள்ளலான வேள்பாரி, மூவேந்தர் சூழ்ச்சியால் இறந்த பின்னர், அவனுக்கு இன்னுயிர்த் தோழராகிய புலவர் பெருமானான கபிலர், அவ்வள்ளலை நீத்துத் தமித்து உயிர்வாழ்வதற்கு மனமிலராயினும், அவனுடைய அறிவுடை மகளிரைக் காப்பதற்கு வேறொருவரும் இலராதல் பற்றி உயிர்கொண்டு நின்று, அம் மகளிர்க்குத் தக்க அறிவும் பெருமையுமுடைய கணவரைத் தேட நினைந்து, அவர்களுடன் அவர்கட்குந் தமக்கும் பேரன்புமிக்க பறம்பினை விடமுடியாமலே விடுத்து, அப்பாரியை நினையுந்தோறும், பறம்பினைத் திரும்பி நோக்குந்தோறும், உள்ளம் நெக்கு நெக்குருகி, கண்ணீர் வார நின்று, ஆற்றொனாத் துயராற் பொங்கியெழுந்த அன்புடைப் பாடல்களால் பாரியையும் பறம்பு மலையையும் புகழ்ந்துகொண்டே சென்று ஓரூரில் தங்கினர். அங்கு அன்றிரவு நிலாத் தோன்றிய போது, அவருடனிருந்த பாரியின் அருமை மகளிர் தாம் இதற்கு முந்திய நிலாக் காலத்தில் தமது அரசு நிலையிட்ட திருவுடை நகர்க்கண்ணே இனிது மகிழ்ந்து விளையாடியதும், அடுத்த நிலாக் காலத்துத் தாம் தந்தையிழந்து, தண்பறம்பிழந்து, தமியராய்த் துச்சிலொதுங்கித் துயர் கூர நின்றதும், தம்முள்ளத்தே தோன்ற, அப்போது மனமுருகி,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம்,எங் குன்றும் பிறர்கொளார் ;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றறி முரசின் வேந்தர்எங்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையுமிலமே"

என்னும் பாடலைப் பாடினர். இப்பாடலால் இச்செய்யுள் செய்ததற்கு ஒரு மாதத்துக்குமுன், பாரி தன் அர

சிருக்கையாகிய பறம்பின்கண் தன் மகளிர் முதலியோருடன் இருந்து வாழ்ந்து வந்தனனென்பது புலப்படும். இப்பாடல் சங்கத்தாரால்தொகுக்கப்பட்ட புறநானூற்றில் ஒன்றாகக் காணப்பட்டவாற்றால் இம்மகளிர் நல்லிசைப் புலவராதல் உணரப்படும். பாரி மகளிர் இருவர் என்பது மேலே புலப்படுதலின், ஈண்டும் 'பாரி மகளிர் பாடியது' எனப் பொதுப்படக் கூறப்பட்டமைபற்றி, அவ்விருவருமே செந்தமிழ்ப் புலமையிற் சிறந்தவரென்பது தெளிவாகும். புலவரிருவர் சேர்ந்து ஒரு பாடல் பாடுவது முன்னை வழக்கே. இம் மகளிரது செந்தமிழ்ப் புலமை, தம் அரும்பெறல் தந்தையாகிய வள்ளல் பாரிக்கு உயிர்த் தோழரான கபிலர் என்னும் புலவர் தலைவர்பாற் பெற்றதாகும். இதன்மேற் கபிலர் அவ்வூரை விடுத்து இளவிச்சிக்கோ என்பவனிடஞ் சென்று, இம் மகளிரது உயர் குடிப்பிறப்பு முதலியவற்றை எடுத்துரைத்து இவர்களை மணஞ்செய்து கொள்ளும்படி அவனைப் பாடி வேண்ட, அவனும் அங்ஙனமே உடம்படானாய் மறுக்க, இதற்காக அவனை முனிந்து பாடிப் பாரி குடிக்கும் மூவேந்தர்க்கும் உண்டாகிய பகைமை பற்றி அரசரொருவரும் இவர்களை மணஞ்செய்து கொள்ள இயையாமையால் மனம் நொந்து, கபிலர் அம்மகளிரைத் தமக்கினிய பார்ப்பார் சிலர்பாற் படுத்து, பாரியின் பிரிவாற்றாது வடக்கிருப்பாராயினர். இதற்கிடையில், கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேரமான்பாற் சென்று, அவனைப் பத்துப் பாடல்களால் புகழ்ந்துபாடி நூறாயிரங் காணமும், அவன் மலைமேலேறிக் கண்டுகொடுத்த நாடும் அவன்பாற் பெற்றனர் எனத் தெரிகின்றது. இதுவே பதிற்றுப்பத்திலுள்ள ஏழாம் பத்தாவது. இவர் பாரியிறந்த பின்னேதான், அவனது நற்குண நற்செய்கைகள் செல்வக் கடுங்கோ வாழியாதனிடமும் இருப்பனவாகக் கேட்டு அவனைக் காணச் சென்றனராவர். இதனை, "மலர்ந்த மார்பின் மாவண் பாரி, முழவுமண் புலர இரவலர் இனைய, வாராச் சேட்புலம் படர்ந்தோன்" என்னும் பதிற்றுப்பத்தான்

அறிக. இச் சேரன்பால் இவர் சென்றகாலத்து இப் பாரி மகளிரும் உடனிருந்தனர் போலும்.

மேற் கூறியவாறு பாரி மகளிரை அரசரெவரும் மணம்புரிந்து கொள்ளாமையால் அவர்களைத் தமக்கு வேண்டிய பார்ப்பார் சிலரது பாதுகாவலில் வைத்துத் தம்முயிர்க் குயிராயிருந்த வள்ளல் இறந்ததன்பின் உலகத்தே தாம் உயிர் வாழ ஒருப்படாது - "பாரி, நீயும் யானுங் கலந்த நட்பிற்குப் பொருந்த யானும் நின்னுடன் கூடப் போவதற்கு மனமியையாமல், 'நீ ஈண்டுத் தவிர்க' என்று சொல்லி, இவ்வாறு மாறுபட்டனை யாதலின், நினக்கு நான் பொருந்தினவனல்லேன். அதனால், நீ எனக்கு உதவி செய்த காலங்களிலும் என்னை வெறுத்திருந்தனை போலும்; இங்ஙனமாயினும் இப்பிறப்பின்கண் நீயும் நானுங்கூடி இன்புற்றிருந்தவாறு போல, மறு பிறப்பிலும் நின்னோடு கூடிவாழ்தலை விதி கூட்டுவதாக" என்ற கருத்துப்பட ஒரு செய்யுளைப் பாடி உள்ள முருகிப் பிராயோபவேசஞ் செய்தற்கு வடக்கிருந்து உயிர் நீத்தனர். 'நீ ஈண்டுத் தவிர்க' என்று பாரி கூறியிருந்ததால், அவனுடன் தாமும் இறக்கத் துணிந்திருந்த கபிலரை அவன் தடுத்தது, பாரி, தன் மகளிரை இப் புலவரைக் கொண்டு வாழ்க்கைப்படுத்தற்குப் போலும்.

9. இந்தியக் கிராமப் பொருளாதாரம்

[J. S. பென்னையா, M.A.]

ஆடுமாடுகள்: நிலத்திற்குப் பின் விவசாயிகளுக்கு மிக அவசியமாக வேண்டுவன ஆடு மாடுகளாம். நிலத்தை 'அசையா முதல்' (fixed capital) எனவும், ஆடு மாடுகளை 'அசையும் முதல்' (movable capital) எனவும் பொருள் நூல் ஆசிரியர் வகுத்துக் கூறுவர்; மாடுகளும் நிலமுமின்றிப் பயிர்த் தொழிலை நடத்த முடியாதென்பது யாவருமறிந்த பொது உண்மை.

ஆடுமாடுகளினால் விளையும் பயன்: நூற்றுக்கு எழுபத்தொன்பது பேர் வீதம் பயிர்த் தொழிலாளராக உள்ள இப்பெருந் தேசத்தில் ஆடு மாடுகளின் உபயோகத்தையும்

அவசியத்தையும் விவரித்துக் கூறவேண்டியதில்லை. பெரும்பாலும் விவசாயிகளான நமது ஏழை மக்கள் எல்லா வித வேலைகளுக்கும் மாடுகளையே உபயோகிக்கின்றனர். ஏர் உழுதல், தண்ணீர் இறைத்தல், போரடித்தல், விளை பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு போதல் ஆகிய பல வேலைகளுக்கும் எருதுகளே உபயோகப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னரெல்லாம் நெடுந்தூரப் பயணங்களுக்கும் வண்டிகளும் மாடுகளுமே உபயோகிக்கப்பட்டு வந்தன. வேறெந்தத் தேசத்திலும் மாடுகள் இவ்வளவு மிகுதியான வேலைகளைச் செய்வதில்லை. மேல் நாடுகளில் ஆடு மாடுகளை வளர்ப்பது பாலுக்காகவும் இறைச்சிக்காகவுமே யன்றி விவசாய வேலைக்கன்று. நமது நாட்டில் எருமைகளும் பசுக்களும் பாலுக்காக வளர்க்கப்படுகின்றன. ஆயினும் ஆஸ்திரேலியா, கானடா, அயர்லாந்து முதலிய தேச மக்களைப்போல நமது தேசத்தினர் பால், பாற்கட்டி, இறைச்சி முதலானவைகளை மிகுந்த அளவில் உற்பத்தி செய்வதும் உண்பதும் ஏற்றுமதி செய்வதும் இல்லை; எனவே, நமது தேசத்தில் மாடுகளை வளர்ப்பதன் முக்கிய நோக்கமும் பயனும் விவசாய வேலையேயாம்.

ஆடுமாடுகளின் தொகை: அப்படியானால் நமது தேசத்தில் மாடுகளின் தொகை போதிய அளவில் உள்ளதா என்னும் கேள்வி யெழுகின்றது. 1925-ல் எடுத்த ஐந்து வருஷ மிருக சங்கியைப்படி (Quinquennial Census of Livestock) இந்தியாவின் எருமைகள், பசுக்கள், எருதுகளின் தொகை 18 கோடியே 70 லக்ஷம். இத்தொகை அதற்கு ஐந்து வருடங்கட்கு முன்னர் இருந்ததைவிட 50 லக்ஷம் அதிகம். மக்களின் தொகைக்கும் மாடுகளின் தொகைக்குமுள்ள வீதாசாரம் நூற்றுக்கு 61 ஆகும். பண்படும் நிலத்துக்கும் மாடுகளுக்கும் உள்ள வீதாசாரம், நூறு ஏக்கர் நிலத்திற்கு 53 எருதுகளும், பசுக்களும், 14 எருமைகளும் ஆம் எனவே நமது தேசத்தில் மாடுகள் போதிய அளவில் உள்ளன.

* * *

கீழ்நாட்டு விவசாய தேசங்களாகிய சைனா, கொரியா, மஞ்சூரியா இவைகளுடன் ஒப்பிடும்போது நமது தேசத்

திலுள்ள மாடுகளின் தொகை அளவுக்கு மிஞ்சினதாகக் காணப்படுகின்றது. மேல்நாட்டு விவசாய நாடுகளான அமெரிக்கா, டென்மார்க், கானடா இவைகளுடன் ஒப்பிடும்போதுதான் அத்தொகை சற்றுக் குறைவாகத் தோன்றுகிறது. ஆனல் நாம் முற்கூறியவாறு, மேனடுகளில் ஆடுமாடுகளைப் பெரும்பாலும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவுமே வளர்க்கின்றார்களாகையால் நமது தேசத்தில் உள்ள ஆடு மாடுகளின் தொகையில் குறைவில்லை.

நமது மாடுகளின் கேவல நிலை: ஆனல், நமது மாடுகள் வேறெவ்விதத்திலும் பிறநாட்டு மாடுகளின் நிலையோடு ஒப்பிடத்தக்கனவல்ல. நம் மாடுகளின் வலிவுகுன்றிக் கிழப் பருவமுற்று வேலை செய்ய வியலாது கிடப்பன பல; தக்கவாறு மேய்ச்சல் வசதிகள் இன்மையால் அரை வயிறுண்டு துன்புறுவன பல. எருமைகளும் பசுக்களும் கொடுக்கும் பாலின் அளவும் மிக்க குறைவு. நமது தேசத்தில் மிக அதிக அளவிற் பால் கொடுக்கும் மாடுகளைவிடப் பத்து மடங்கு அதிகமாய்ப் பிறதேச மாடுகள் பால் கொடுக்கின்றன. கீழ்க்கண்ட அட்டவணையில் ஒவ்வொரு தேசத்திலும் ஒரு பசு கொடுக்கும் வருட சராசரிப் பாலின் அளவு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஹாலந்து	128500	பவுண்டுகள் (lbs.)
சுவிட்ஸர்லாந்து	69800	,,
டென்மார்க்கு	65600	,,
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	40880	,,
சென்னை மாகாணத்து உயர்தர ஜாதியாகிய 'ஓங்கோல்' மாடுகள்	8030	

இத்துணை வித்தியாசத்திற்கு நமது விவசாயிகளின் நிலையே காரணமாகும். தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களை விளைவிக்கவே போதிய நிலமில்லாத ஏழைக் குடியானவர்கள் எங்ஙனம் மாடுகளின் உணவுக்குரிய நாற்று, புல் முதலியனவற்றை விளைவிப்பர்? கைத்தீனியாய் (Stall-feeding) ஊட்ட வேண்டுமென்று கூறுவர் சிலர்; குடும்ப வாழ்க்கைக்கு வேண்டும் வருவாயற்றவர்கள்

பருத்திக் கொட்டை, புண்ணாக்கு முதலிய சிறந்த தீனிகளை எங்ஙனம் தங்கள் மாடுகளுக்கு அளிக்கக்கூடும்? தாங்களும் பெண்டு பிள்ளைகளும் குச்சிலிற் குடியிருக்கும் போது ஆடுமாடுகள் தங்கி நிற்கத்தக்க நல்ல ஸ்தல வசதிகளை அவர்கள் எங்ஙனம் அமைத்துக் கொடுப்பர்? அன்றி, உயர்ந்த விலையுள்ள (ஆனால் மிகுந்த அளவான பால் தரக்கூடிய) பசுக்களையும் எருமைகளையும் எவ்வாறு வாங்கிப் பரிபாலித்து வருவர்? எனவே, நமது தேசக் குடியானவர்களுடைய வறுமையே ஆடுமாடுகளின் கேவல நிலைக்குக் காரணம் என்பது பெறப்படுகின்றது.

உயர்ந்த ஜாதி மாடுகள்: நமது தேசத்தின் சில பாகங்களில் உழவுக்கும் வண்டிக்கும் ஏற்ற சிறந்த ஜாதி எருதுகளும், பாலுக்கேற்ற எருமைகளும், பசுக்களும் வளர்க்கப் படுகின்றன. மைசூர் இராஜ்யத்திலுள்ள 'அமிர்த மஹால்,' ஜாதி எருதுகள் குதிரைகளைப் போன்ற வேகமுடையன. பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஹரியானா (Hariana), சஹிவால் (Sahiwal), மான்ட்கமரி (Montgomery) முதலான ஜாதி மாடுகள் வேலை செய்வதிலும் பால் கொடுப்பதிலும் மிகச் சிறந்தவை. சென்னை மாகாணத்திலுள்ள 'ஒங்கோல்' 'காங்கேயம்' ஜாதி மாடுகளும் அவ்வாறனவையாம். இவற்றை மற்றெந்த தேசத்திலுள்ள உயர்ந்த ஜாதி மாடுகளோடும் ஒப்பிடலாம். ஆயினும் இத்தகைய உயர்ந்த ஜாதி மாடுகள் மிகச் சிலவே உள்ளன. உள்நாட்டில் உயர்ந்த விலை கொடுத்து அவற்றை வாங்குவார் இல்லாமையால் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுமதியாக்கப்படுவதைத் தடுத்தலும் இப் பிரபலமான ஜாதி எருதுகளையும் பசுக்களையும் எருமைகளையும் பரிபாலித்து அபிவிருத்தி செய்தலும் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். ஏனெனில், அயல்நாட்டிலிருந்து கொண்டுவரப் பட்டு இப்பொழுது பெரிதும் காணப்படுகிற சில ஜாதிப் பசுக்கள் அதிகமான பாலைக்கொடுப்பினும், அவைகளின் கன்றுகள் ஒரு வேலைக்கும் உதவாது போய்விடுகின்றன.

பாலுக்கு வந்த கேடு: இனி, நகரங்களிலும் கிராமங்களிலும் ஜனங்களுக்கு வேண்டிய உயர்ந்த உணவாகிய பாலைப்பற்றிச் சிறிது கூறுவோம்: நமது தேசத்தில் குறைந்த விலையில் நல்ல பால் கிடைப்பது அரிது. நமது நகர வாசிகள் நீர் கலந்த பாலுக்குக் கொடுக்கும் விலை அமெரிக்காவின் பெரிய நகரங்களில் மிகச் சுத்தமானதும் சத்துள்ளதுமான பாலுக்குக் கொடுக்கப்படும் விலையைக் காட்டிலும் அதிகமென்கிறார்கள். மேலும், மாடுகளைப் போஷிப்பதிலும் பாலைக் கறப்பதிலும், வியாதிகளைப் பரவச் செய்யும் பல குறைகளும் பல்கியிருக்கின்றன. மாடுகள் நிற்கத்தக்க வசதியான தொழுக்கள் கிடையா; உண்ணத்தக்க கொழுமையான உணவுகள் இல்லை; சுத்தமான பாத்திரங்களிற் பால் கறக்கப்படுவதில்லை; கன்றுகளுக்குச் சரியானபடி பாலை ஊட்டாததினால் அவை சிறிது நாட்களில் இறந்துவிடுகின்றன. நகரங்களில் இவ்வாறான குறைகளும் அதர்மங்களும் அதிகம். ஆயினும் இவற்றைக் களைவதில் பொதுஜன உணர்ச்சியும் முயற்சியும் சிறிதும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது.

என்ன செய்யவேண்டும்: கூட்டுறவு முறையிலோ அல்லது பெருத்த மூலதனமிட்டோ உயர்ந்த ஜாதிப் பசுக்களையும் எருமைகளையும் வாங்கி, அவற்றிற்குக் கொழுத்த உணவுகளை ஊட்டவேண்டும். மேலும் சுகாதார முறைப்படி பாலைக் கறந்து விற்கும்படியான ஏற்பாடுகளும் செய்ய வேண்டும். இத்தகைய முயற்சிகளை நகரபரிபாலன சபையாரும் அரசாங்கத்தாரும் விரைவிற் செய்ய முன்வருதல் அவசியம். பெருநகரங்களின் மத்தியில் தொழுவங்களும் பிற வசதிகளும் அமைப்பது அரிதாயினும் அவற்றிற்கருகிலுள்ள கிராமங்களில் அவைகளை அமைத்துக் கொள்ளுதல் எளிதாக இருக்கலாம்.

சில பசுப் பண்ணைகள்: அலிகார், பம்பாய், நாகபுரி, டார்ஜிலிங், காசி முதலான இடங்களில் மிகச்சிறந்த பசுப் பண்ணைகள் (dairy farms) அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை யெல்லாவற்றுள்ளும் மத்திய மாகாணத்து விவசாய

இலாகாவின் ஆதரவில் நாகபுரியில் நடைபெற்று வருவது மிகச் சிறந்தது. அப்பசுப் பண்ணைக்கு ரூ. 30,000 மூலதனமாகச் சர்க்கார் கொடுத்துதவினர். அத்தொகையிலிருந்து ரூ. 20,000 பெறும் நிலத்தை வாங்கி, அதில் ரூ. 10,000 செலவிட்டுத் தொழுவங்களை நிறுவினார்கள். கூட்டுறவு முறைப்படி நடக்க விரும்பிய இடையர்கள் அதில் அங்கத்தினர்கள் ஆயினர். அவர்கள் பால் கறக்கும் பசுவொன்றிற்கு ரூபாய் ஆறும், கறக்காததற்கு ரூபாய் மூன்றுமாகக் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். அத்தொகையிலிருந்து உணவுப் பொருள்கள் மொத்தமாக வாங்கப்படுகின்றன. பசுக்கள் சாஸ்திரமுறையில் போஷிக்கப்படுகின்றன. விவசாய இலாகா உத்தியோகஸ்தர் முன் பசுவுக்குச் சொந்தக்காரர் பாலைக்கறந்து ரூபாய்க்கு எட்டுச் சேர் வீதம் விற்கிறார்கள். விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் குத்தகைதார்கள் மூலமாக அப்பாலை மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

சட்டம் வேண்டும்: இவ்வித முறைகள் நமது தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவவேண்டுமானால் அதற்குரிய சட்ட திட்டங்கள் வேண்டும். பாலில் நீரைக் கலப்பவர்களையும், சுகாதாரமற்ற முறையில் தொழுவங்களை அமைத்திருப்பவர்களையும் தண்டித்தாலொழியப் புதிய முறைகள் பலிதப்படா.

வறுமை போகவேண்டும்: ஆயினும் பால் மிகுதியாக வாங்கப்படாவிட்டால் நாம் முற்கூறிய முறைகளால் யாது பயன் விளையும்? நமது தேசத்தில் பெரும் பணக்காரர்களும், மத்திய ஸ்திதியிலுள்ளவர்களுமே (middle classes) பாலுணவை அருந்துகின்றனரே யன்றிச் சாதாரண ஜனங்கள் எவ்வளவு குறைந்த விலைக்குப் பால் விற்றாலும் அதை வாங்கி யுண்ணப் பொருள் வருவாய் அற்றிருக்கின்றனர். பொது ஜனங்களின் பொருளாதார நிலைமை உயர்ந்தாலன்றிப் பசுப் பண்ணைகள் இலாபத்துடன் நடத்தப்பட முடியா.

10. வெண்ணெய் அண்ணல்

(வித்துவான் மா. இராசமாணிக்கம், M O. L. L. T.)

பெறலருங் குணங்களில் செய்ந்நன்றி அறிதலும் ஒன்றென ஆன்றோர் கூறி உள்ளனர். செய்ந்நன்றி அறிதலில் தலை சிறந்தவர் கன்னனும் கும்பகர்ணனுமே ஆவரென்பது ஆன்றோர் கருத்தாகும். ஆனால், இராம காதையைத் தமிழிற் பாடியருளிய உம்பரும் போற்றும் கம்பர் பெருமானும் மேற்கூறப்பெற்ற கன்னன் கும்ப கர்ணன் இவரோடு வைத்துக் கூறத் தக்கவ ராவர்.

சடையப்ப வள்ளல் என்பவர் வெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த தாளாண்மையிற் சிறந்த வேளாண் மரபினர். அப்பெருந்தகையார் எந்நாட்டு வறிஞராயினும் தம்மை நாடி வரும் அவர்கட்கு ஈதலில் தவறார். அப்பெரியாரே நம் புலவர் பெருமானாகிய கம்பரைச் சிறுபருவ முதற்கொண்டே பேரன்புடன் பாதுகாத்தவர்; கம்பரைச் சோழ வேந்தனிடம் அறிமுகப்படுத்தி, அவரது அளப்பரும் புலமையைத் தமிழ் நாட்டில் நிலவச் செய்தவரும் அவரேயாவர். அவ்வள்ளலே கம்பர் இராமாயணம் பாடி முடித்ததற்கும் பெருங்காரணராய் இருந்தனர் எனின் அவர் கம்பர்பால் வைத்த அன்பின் திறத்தினை யாதென்று அறைவது!

அண்ணல் தமக்குச் செய்த நன்றியை மறவாது உளங்கொண்ட கம்பர், ஒருவராலும் பெறற்கரிய பேற்றைத் தாம் செய்யும் பிரதி நன்றியாக அண்ணலுக் களித்துள்ளார்; உலகம் உள்ளளவும் கம்பர் பெயரும் அவர் பாடியருளிய இராம காதையும் நிலை நிற்பதே போல, வள்ளல் அறச் செயலும் அருங்குணமும் இராம காதையில் ஒளிருமாறு செய்துள்ளார். அண்ணல் செய்த உதவியைவிடப் பன்னூறுயிர மடங்கு பெரிதெனக் கருதுமாறு கம்பர், தம் பிரதி நன்றியை அண்ணலுக்கு எவ்வாறு அளித்துளர் என்பதை ஈண்டுக் காண்போம்:

கம்ப ராமாயணம் வேள்விப் படலத்தில், கோசிகன் இராமருக்குப் படைக்கலம் அளித்தமை இன்னபடி

இருந்ததெனக் கூறுகின்ற கம்பர், 'ஊழி பெயரினும் தாம் சொன்ன சொற்களைச் சோர விடாத பெருமை வேளாளர்க்குரியது; எம் அண்ணல் சடையப்பருக்கும் அஃதே,' என உவமை முகத்தால் விளக்குகின்றனர்:

'விண்ணவர் போய பின்றை
விரித்தபூ மழையி னாலே
தண்ணெனும் கானம்நீங்கித்
தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன
படைக்கலம் அருளி னானே.'

—வேள்விப் படலம்

'மண்ணுலகத்தாரது வறுமையென்னும் நோய்க்கு மருந்து போன்ற வெண்ணெய் அண்ணலது சொல்லுக்கு நிகரான அத்திரங்களைக் கோசிகன் சீராமனுக்கு அளித்தான்' என்று கூறிக் கம்பர் மகிழ்கின்றார். 'சடையப்பர் வழங்கும் சொற்கள் வாய்மையுடையன; அவை சிறிதும் கெடாமல் கருதிய பயனைத் தருவன; அவை போன்றே கோசிகனளித்த படைக்கலங்கள் எய்குறி தவறாது வெற்றியைத் தருவன; இத்தகைய வள்ளல் சொற்களுக்கு நிகரான அத்திரங்களை முனிவன், கோசலக் குரிசிலுக்கு நல்கினன்' என்னும் கூற்றில் கம்பர், 'சடையப்பரது சொல் தவறாதது' என்பதை வலியுறுத்தல் காண்க.

அடுத்தபடியாக, 'அண்ணல் வறுமைப் பிணியைப் போக்கும் திறத்தால் உண்டான புகழ் உலகெங்கணும் பரவியதாம். அங்ஙனமே வெண்ணிலா உலகெலாம் பரவியது' எனக் கம்பர் வெண்ணிலா, தன் விரி கதிர்களை விரித்த மாண்பினுக்கு வள்ளல் புகழை உவமையாகக் கூறுதல் எத்துணைப் பொருத்தமுடையது! ஏற்ற இடங்களில் வள்ளல் பெருமையை அமைத்துப் பாடும் பேராற்றல் பெற்றவர் கம்பரல்லரோ? தம்மைக் காத்த வேந்தரைப் புகழேந்தியாரும் வில்லிபுத்தூராரும் தாம் பாடிய நூல்களிற் பாடியுள்ளாரேனும், உயர்வு நவிற்சி

யணி தோன்ற வைத்தே பாடியுள்ளனர். கம்பரோ, அங்ஙனமன்றி வள்ளலது ஏற்றத்தை உள்ளவாறே உரிய இடங்களிற் பாடியுள்ளார். வள்ளலைச் சிறப்பிக்க, இல்லாத ஒன்றைப் புதிதாய்ப் புகுத்தக் கம்பர் விழைந்தாரில்லை; விழைய இடமில்லை. பூணுக்குப் பூண் எற்றுக்கு?

'வண்ண மாலை கைபரப்பி
உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்(து)
உதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால்.'

—உண்டாட்டுப் படலம்

"விண்ணையும் மண்ணையும் எல்லாத் திசைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்ட விரிந்த நன்னீரையுடைய பண்ணைகள் வாய்ந்த வெண்ணெய் நல்லூரில் வாழும் சடையன் தன் புகழ்போலத் தண் மதியின் கிரணங்கள் எங்கும் பரவின' எனக் கம்பர் கூறும் உவமையும் பொருளும் எண்ணி எண்ணிக் களிக்கத் தக்கவை அல்லவோ? இதனால், வள்ளலது புகழின் விரிவு அங்கைக் கனியெனத் தெள்ளிதின் விளங்குகின்றமை காண்க. நிலாத் தோன்றுவதற்கு முன்னர் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அது போல, வள்ளலுக்கு முன்னர் வறுமை நோய் உலகெங்கணும் பரவி இருந்தது; நிலாத் தோன்றிய பின்னர் இருள் இருந்த இடம் தெரியாதவாறு மறைந்தொழிந்தது. அதுபோல, வள்ளல் தோன்றிய பின் வறுமைப் பிணி ஒழிந்தது. நிலா வெளிச்சம் உலகெலாம் பரவி மக்களை இன்புறுத்துவது போல, வள்ளலது வள்ளற்றன்மை உலகெங்கும் பரவி மக்களை இன்புறச் செய்கின்றது என, இத்துணை ஆழ்ந்த கருத்துக்களைக் கம்பர் ஒரு சிறு கவியில் செறிய வைத்துள்ள திறத்தினைப் புகழ்வோமோ! அன்றி, அவர் அண்ணலை அழகுறப் புகழ்தலைப் புகழ்வோமோ; யாதோ யாம் செயவல்லோம்!

வானரர் வீரர்கள் கடலில் அணையைக் கட்டுகையில் உயர் வெற்புக்களைத் தூக்கி வானரத் தச்சனாகிய நளன் என்பானிடம் வீச, அலைப்புண்டுவந்த அப்பருப்பதங்களை நளன், 'அஞ்சேல்!' எனச் சொல்லி, அவற்றைத் தாங்கி முறையாகவும் அமைதியாகவும் அடுக்கினன். அங்ஙனம் நளன் செய்தமை, 'தஞ்சமென்றடைந்தோரைத் தாங்கித் தக்கவாறு பாதுகாக்கும் அண்ணலது அருட் செயலை ஒத்திருந்தது' எனக் கம்பர் கூறுவது சால அழகியதன்றோ?

> 'மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்(கு)
> எஞ்சுறக் கடிதெடுத் தெறிய வேநளன்
> விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
> தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்.

—சேது பந்தனப் படலம்

'மேகநாதன் வானர சேனையை நாக பாசத்தாற் பிணித்து விட்டனன். அந்நாக பாசம் கருடனைக் கண்டதும் இற்று ஒழிந்தது. அது, வடமொழி அறிஞரையும் தென்மொழி அறிஞரையும் பிடித்திருந்த வறுமைப் பிணி வெண்ணெய்வாழ் அண்ணலைக் கண்டதும், இற்றொழிந்ததை ஒத்திருந்தது,' என்று கம்பர் கூறும் உவமையையும் பொருளையும் எண்ணிப் பாருங்கள்! இதனால், வள்ளலின் வள்ளற்றன்மை குன்றின் மீதிட்ட விளக்குப் போலாம்! 'கம்பர் வீணாகச் சடையப்பரை ஏன் இக்காதையில் இழுக்கின்றார்?' என்று நாம் எண்ணிச் சலிப்படையாவாறு உவமை வாயிலாகச் சடையப்பரின் அரிய செயலையும் குணத்தையும் கூறித் தமது செய்ந்நன்றி அறிதலையும் விளக்குவது கம்பர்மாட்டு அமைந்த தனிப்பேராற்றலே அன்றோ?

> "வாசங் கலந்த மறைநாள நூலின்
> வகையென்ப தென்னை? மழையென்(று)
> ஆசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல்
> சரராமன் வெண்ணெய் அணுகும்
> தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொல்
> அறிவாளர் என்றிம் முதலோர்

பாசங் கலந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்.''

—நாகபாசப் படலம்

இக்கவியால், அண்ணலது ஈத்துவக்கும் செவ்வியும், வடமொழி தென்மொழிப் புலவர் என்ற வேறுபாடின்றி வழங்கும் ஈகைக் குணமும், தாளாண்மையிற் சிறந்த வேளாண் மக்களின் மாண்பும் இனிது விளங்கும்.

இறுதியாகக் கம்பர் தம்மை வளர்த்து உயர்நிலைக்குக் கொணர்ந்த வள்ளலாரை உலகறிய உயர்ந்த நிலையில்-எவர்க்கும் எட்டாத உயர் நிலையில் - அழகுற வைத்துப் பெருமைப் படுத்தியுள்ளார். 'இராமனுக்குக் கோசலத்தில் மௌலி சூட்டிய மாண்புறு விழாவில் இராமனைத் தாங்கும் அரியணையை அநுமன் தாங்கினன்; அங்கதன் உடைவாளேந்தி நின்றான்; பரதன் கொற்றக் குடையைக் கவித்து நின்றான்; இலக்குவனும் சத்துருக்கனனும் கவரி வீசி நின்றனர்; வாசனை கமழும் கூந்தலையுடைய சானகி உவகையோடு அருகிருந்தனள். இந்நிலையில் வெண்ணெய் அண்ணலின் மரபில் வந்த வேளாண் குடிப் பெருமக்கள் கிரீடத்தை எடுத்துத் தம் அநுமதியோடு தர, அதனை வசிட்டன் வாங்கிச் சிராமனுக்குச் சூட்டினன்,' என்று கம்பர் அழகிலும் அழகுபடக் கூறியுள்ளார். இவர் கூற்றில் விழுமிய வேளாளர் தத்துவம் என்னும் தரு, வேருடன் விளங்கக் காணலாம்.

'அரியனை அநுமன் தாங்க
அங்கதன் உடைவா ளேந்த,
பரதன் வெண்குடைக விக்க,
இருவரும் கவரி வீச,
விரைசெறி குழலி யோங்க,
வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.'

—திருமுடிசூட்டுப் படலம்

இங்ஙனம் ஈடும் எடுப்பும் இல்லாத ஒரு வகையில் தம் வள்ளலைக் கம்பர் புகழ்வதைக் காண, அவர் வெண்ணெய்

அண்ணலிடம் கொண்டிருந்த பெருமதிப்பு இற்றென விளங்குகிறதன்றோ! 'இனி நீர் சீராமனுக்கு முடிசூட்டலாம்,' என்று வசிட்டனுக்கு அனுமதி கொடுத்தற்கேற்ற பெருமை பெற்றவர் சடையப்ப அண்ணலின் முன்னோர் என்று கூறுமுகத்தான், 'வேளாளரே அரசனுக்கு உயிர் போன்றவர்,' என்னும் உண்மையைக் கம்பர் விளக்குகின்றார். இக்கருத்தைக் கொண்டே ஔவையாரும், 'குடி உயரக் கோன் உயரும்,' என மொழிந்தார். 'மேழி பிடிக்குங் கையே ஆறி வேந்தரை யாக்குங் கை' என்பது அரசியலின் அடிப்படையான தத்துவம் அன்றோ?

---

11. டாடாவும் பட்டுத் தொழிலும்

(வித்துவான் இ. கே. நடேச சர்மா, B.O.L.)

பரோடா சமஸ்தானத்துச் சூரத் நகருக்கு அணித்தாயுள்ள நவ்சாரி கிராமத்திலே உயர்ந்த குடும்பத்தில் பிறந்த நஸ்ஸர் வான்ஜி டாடா அவர்கள் தம் வாழ்க்கையின் இடைப் பகுதியில் பருத்தித் தொழிலில் இடைவிடாது உழைத்து வந்ததோடு அல்லாமல் பட்டுத் தொழிலைப்பற்றி நினைத்தது பெரிதும் வியக்கத்தக்கது. அவர் பல்லாண்டுகளாய்ச் செய்த ஆராய்ச்சியின் பயனாய், இந்தியாவில் பட்டுத் தொழில் நடத்துவதற்கு வேண்டிய வாய்ப்புக்கள் இருப்பதை அறிந்தார். பட்டுத் தொழிலால் நம் நாட்டிற்கு அதிக நன்மை உண்டாகுமென்றும், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், சீனா முதலிய நாடுகளைப்போல் இந்தியாவிலும் அத்தொழில் வளர்ச்சி யடையுமென்றும் அவர் நம்பியிருந்தார்.

டாடா மேல்நாடுகளிற் பிரயாணம் செய்த நாட்களில், பிரான்ஸ் இத்தாலி என்னு மிவ்விரு நாடுகளிலும் பட்டுப் பூச்சியை எவ்வாறு போற்றி வளர்த்து வந்தனர் என்பதை நன்றாய்க் கவனித்திருந்தார். இந்தியக் குடியானவர் ஓர் ஆண்டில் பல மாதங்கள் வேலையற்றிருக்கின்றனர். வேலையில்லா அக்காலத்தில் ஏதேனும் ஓர் உதவித் தொழில் அவர்களுக்கு இன்றியமையாதது. ஊதியமளிக்கும்

குடிசைத் தொழிலொன்றை அவர்களுக்குக் கற்பித்தால் அவர்கள் கூலியும் பெறுவர்; நாட்டிற் செல்வமும் பெருகும்; வறுமையும் ஓரளவு ஒழியும். தாம் கண்ட நாடுகளில் பட்டுத் தொழில் இலாபகரமான ஒரு குடிசைத் தொழிலாய் நடத்தப்பட்டு வந்தது. அங்ஙனமே இந்தியாவிலும் நடத்திப் பார்க்கலாமென்று டாடா நினைத்தார்.

1893-ம் ஆண்டில் டாடா ஜப்பானுக்குப் போயிருந்த பொழுது அந்நாட்டினர் பட்டுத் தொழிலைப் புதிய முறையில் மிக்க திறமையுடன் நடத்தி வந்ததைக் கண்டார். பட்டுப் பூச்சியை வளர்ப்பதிலும், அதற்கு உணவான 'மல்பெரி' மரங்களைப் பயிரிடுவதிலும், ஜப்பானியர் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். ஜப்பானில், பட்டுத் தொழில் ஒரு குடிசைத் தொழிலே. பெரும்பாலும் குடியானவர்களுடைய மனைவிமாரும் மக்களுமே அத்தொழிலில் ஈடுபட்டிருந்ததனல், அந்நாட்டின் சராசரி வருமானம் அதிகரித்தது. நாளடைவில், ஜப்பான் உலகில் விற்பனையாகும் பட்டில் முக்காற் பங்கினுக்கு மேல் உற்பத்தி செய்யுந் திறமையைப் பெற்றது. டாடா ஜப்பானியரிடம் எப்பொழுதும் மிக்க மதிப்பு வைத்திருந்தார். அவர்கள் கீழ் நாட்டினராயினும் மேல் நாட்டுத் தொழில்முறைகளுட் சிறந்தவற்றைக் கற்று, அவற்றில் மிக்க தேர்ச்சியும் பெற்றிருந்தமை அவருக்கு அளவற்ற வியப்பினை விளைத்தது. நிலங்களைப் பண்படுத்தி, நன்கு பயிரிட்டு, மிக்க விளைவைப் பெறுவதில் ஜப்பானியர் கைதேர்ந்தவர். ஆகையால் டாடா அவர்களுடைய முறையை நுட்பமாய்க் கவனித்தார். அவர்கள் பட்டுப்பூச்சிகளை வளர்த்துப் பாதுகாக்கும் முறைகளைத் தம் நாட்டினரும் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் ஜாம்ஸெட்ஜி இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

டாடா, தாய்நாட்டினை அடைந்தவுடன், நம்நாட்டிலும் அப் பட்டுத் தொழிலை நடத்த இயலுமா என்பதைச் சோதித் தறியும்பொருட்டு, மைசூரில் ஒரு பண்ணையை நிறுவ எண்ணங்கொண்டார். அப்பொழுது மைசூர் ஸமஸ்தானத்திற்குத் திவானகத் திகழ்ந்தவர் ஸர். சேஷாத்திரி ஐயர் என்னும் அறிஞர். நாட்டின் முன்னேற்றத்திற்கான

எத்திட்டத்தையும் அவர் ஆதரிப்பவர். ஆதலின், அவர் டாடாவுக்கு வேண்டிய உதவிபுரியப் பின்வாங்கவில்லை. அதனால் டாடாவின் எண்ணம் எளிதில் நிறைவேறிற்று. பட்டுப்பூச்சியின் வளர்ச்சிக்குத் தட்பமும் வெப்பமும் மிதமாகவே இருத்தல்வேண்டும். பங்களூரைச் சுற்றிலுமுள்ள சிலப்பகுதிகள், ஜப்பானைப் போல் நடுத்தரமான தட்ப வெட்ப நிலையைப் பெற்றவை. அதனால், அவ்விடங்கள் பட்டுப்பூச்சியின் வளர்ச்சிக்கு ஏற்றவையே. திப்பு சுல்தான் காலத்துக்கு முன்பே அந்நாட்டுப் பட்டுப் புகழ் பெற்றது. அவ்விடங்களில் ஒருவிதப் பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்பட்டு வந்தன. ஆதலால், அங்கே அவற்றைச் சரியாய்ப் போற்றி வளர்த்துப் பெருக்குவது மிக எளிது.

டாடா அமைத்த சிறு பண்ணையில் இந்தியர் பலர் பட்டுத் தொழிலைக் கற்றுக்கொண்டனர். 'மல்பெரி' மரத்தைப் பயிர் செய்யும் விதமும், பட்டுப்பூச்சிகளை வளர்க்கும் வகையும், அவற்றினுக்குண்டாகும் நோய்களைத் தீர்க்கும் வழியும், மற்றும் இன்றியமையாதனவான முறைகள் பலவும் கற்பிக்கப்பெற்றனர்; பட்டினைத் தொகுப்பது, பிரிப்பது, சுற்றுவது, அதனை விற்பனைக்குச் சித்தஞ் செய்வது முதலிய வேலைகளிற் பழகிவந்தனர். அப் பண்ணையை மேற்பார்வையிட்டு நன்கு நடத்துமாறு ஜப்பானிய அறிஞர் இருவர் அமர்த்தப்பட்டனர். அவர்களிருவரும் முன்னர்ச் சீனவில் ஆர். டி. டாடாவிடம் வேலை பார்த்தவர்கள். மைசூர்ப் பண்ணைக்கு வந்த பின்னும் முன்போலவே தங்கள் வேலையில் ஊக்கத்துடன் உழைத்து வந்தனர். பட்டு நூலைச் சுற்றும் யந்திரங்களும் பாவோட்டும் யந்திரங்களும் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவையெல்லாம் உறுதியாகவும் மலிவாகவும் இருந்தன. அந்த நிபுணர்களில் ஒருவரான ஆட்சு (Odzu) என்பவரின் மேற்பார்வையில் கூலியாட்களெல்லாரும் சரியாய் வேலைசெய்ததனால், மைசூர்ப் பண்ணையில் சில வாரங்களுக்குள் அத்தொழில் நல்ல முன்னேற்றம் பெற்றது.

எல்லா வேலைகளும் ஜப்பானிய முறையில் நடைபெற்றன. இந்தியத் தொழிலாளிகள் திறமையோடு வேலை

செய்தனர். அதனால் பழங் கைத்தொழிலொன்று புத்துயிர் பெற்றது. வேலை கற்றுக்கொள்ள வந்தவர்களிடம் சம்பளம் பெறாமல் மூன்று மாதங்களில் வேலை கற்பிக்கப் பட்டது. இம் மூன்று மாதங்களுக்குள் 'மல்பெரி' பயிரிடுதல், பட்டுப்பூச்சி வளர்த்தல், நோயினை அறிதல், பூச்சியின் கூடுகளிலிருந்து, பட்டுப்பெறுதல், நூல் சுற்றல், கட்டுதல் எல்லாம் மனத்திற் பதியும்படி கற்பிக்கப்பட்டன.

டாடாவின் பண்ணை தொடக்கத்திலேயே பலனளித்தது. அதனால், அவர் அடைந்த மகிழ்ச்சிக்களவேயில்லை. 1899-ம் ஆண்டில் அவர் மைசூருக்கு வந்தபோது, தம் பண்ணைக்கு இன்னும் அதிகமான நிலம் வாங்கி 'மல்பெரி' மரங்களைப் பயிர் செய்யவேண்டுமென்று எண்ணினர். ஆனால், அச்சமயம் மைசூர் அரசாங்கத்தார் அதற்கிசையவில்லை. டாடாவின் பண்ணையிலுற்பத்தி செய்த பட்டு ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டது. அங்கு, அத்தொழிலறிஞர் அதனை ஆராய்ச்சி செய்து அப்பட்டின் குணத்தைப் பாராட்டி, இந்தியாவில் அதுவரை உற்பத்தியான பட்டு அனைத்தினும் அதுவே உயர்ந்ததென்று தெரிவித்தனர். இதனையறிந்த இந்திய அரசாங்கத்தாரும் டாடாவினுடன் கலந்தாராய்ந்து, அம்முறையைப் பின்பற்றிச் சில பண்ணைகளை அமைத்தனர்.

"இந்தியர்களைப் பல்வேறு தொழிற் கலைகளிலும் பயிர்த் தொழிலிலும் புதுமுறையில் நன்கு பயிற்றுவிக்க வேண்டும். அதுவே அரசாங்கத்தின் முதற்கடமை. ஏதோ என்னாலியன்றவரை இத்தொழிலுக்கு என்றென்றும் யான் உதவி செய்யக் காத்திருக்கின்றேன்" என்று அரசாங்கத்தாருக்கு டாடா கடிதம் எழுதினர்.

இந்தியத் தாயின் தவப்புதல்வரான ஜாம்ஷெட்ஜி நம் நாடு செய்த தவக்குறையின் பயனாய், 1940-ம் ஆண்டில் மண்ணுலகினை நீத்தார். அவர் புத்திரர் முக்கியமான வேறு சில வேலைகளில் ஈடுபட்டிருந்தமையால், மைசூர்ப் பண்ணையை எவருக்கேனும் விற்றுவிட உறுதி கொண்டனர். மைசூர் அரசாங்கத்தின் உதவியில்லாமையால், அப் பண்ணை மிக்க பயனை அளிக்கவில்லை. அந்நாட்டின் நன்

மையைக் கருதியே அப்பண்ணை அமைக்கப்பட்டதெனினும், அவ்வரசியலார் அதை எடுத்துக்கொள்ள மறுத்தனர். பிறகு டோராப்ஜி அப்பண்ணையை வாங்கிக்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார். இந்திய அரசாங்கத்தாரும் தாம் அம்முறையைப் பின்பற்றிப் பல பண்ணைகளை நடத்தி வருவதனால், தமக்கு அது வேண்டா என்று கூறி வாங்க மறுத்து விட்டனர். எனினும், அவர்கள் டாடாவினுடைய முயற்சியை மெச்சி, அப்பண்ணையைப் பற்றிய விவரங்களனைத்தையும் அச்சிட்டு வெளியிட்டனர்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், அப்பண்ணையைப் 'மோட்சப் படை' (Salvation Army) என்ற கிறிஸ்தவ சங்கத்தினர் எடுத்துக்கொண்டனர். அவர்களுக்கு முன்னமேயே பட்டுத் தொழிலில் பயிற்சி அதிகம் உண்டு. நம் இந்திய சமூகத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோரையும் நாகரிகமற்ற முரட்டு ஜாதியினரையும் அவர்கள் கிறிஸ்தவர்களாக்கி வந்தனர்; அவ்வாறு புதியதாய்த் தம் மதத்தைச் சார்ந்த அவ்வெளியவர்களுக்கெனப் பல பள்ளிகளை நிறுவி, அங்குப் பட்டுத் தொழிலையும் கற்பித்து வந்தனர். அவர்கள் தம் முயற்சியினால் இப் பண்ணையை ஒழுங்குபடுத்தினர்.

பின்னர், மோரடாபாத் (Morodabad), அலிகார் (Aligarh), பரெய்லி (Bareilly) முதலிய பல நகரங்களிலும் அதைப் போன்ற பல பண்ணைகள் நிறுவப்பட்டன. ஆனால், அவ்வனைத்தினும் சிறந்து விளங்கியது மைசூர்ப் பண்ணையே.

டாடாவின் முயற்சியால் இந்தியப் பட்டுத் தொழில் பெற்ற மேன்மை எடுத்துக்கூறும் தன்மையதன்று. முதலில் பயனற்றதென்று கைவிடப்பட்ட ஒரு கைத்தொழிலைத் துரைத்தனத்தாரே ஏற்றுக்கொண்டு நடத்தினவரெனின், அதன் உயர்வினுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? எங்கும் 'மல்பெரி' மரங்கள் பயரிடப்பெற்றன. பட்டுப் பூச்சிகளை வளர்க்கும் முறைகளைப்பற்றிய வெளியீடுகள் தோன்றிய வண்ணமிருந்தன. கண்காட்சிச்

சாலைகளில் பட்டுத் தொழில் முறைகள் காண்பிக்கப்பட்டன. வருங் காலத்தில் பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் சீனம் முதலிய நாடுகளைப்போல், நம் நாட்டுப் பட்டுத் தொழிலும் முதலிடம் பெறுமாயின், அத்தொழில் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஜாம்ஸெட்ஜி டாடாவை நம் நாட்டு மக்கள் அனைவரும் வாயார வாழ்த்துவர் என்பது உறுதி.

---

12. திருக்குறளும் பொது நோக்கமும்

[வித்துவான் S. ஆறுமுக முதலியார், B. A. (Hons.), L. T.]

தமிழ்நாடு செய்த தவப்பயனாய் அவதரித்த திருவள்ளுவர் உலகத்தோருக்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்தாரொருவராக வைத்தெண்ணப்படுகின்றாரென்பது அனைவரும் அறிந்த தொன்றாம். உலகம் போற்றும் தம் பெருநூலில் ஆசிரியர் வகுத்துப் போந்த ஒழுக்கமுறை, இன்னார் என்ற வரையறை யின்றி, யாவரும் கையாளுவதற்கு உரியதா யிருக்கின்றது. ஒழுக்கமுடைமையிற் கூறியபடி ஒழுக்கத்தை ஓம்புவோர் விழுப்பமடைவர் என்பதனைத் தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டிக் கூடாவொழுக்கத்தில் கண்டிக்கப்பட்ட போலித் துறவொழுக்கம் உலகத்தாரை ஏமாற்றுவதற்கே உரியது என்பதனையும் உலகத்தவருக்குப் போதித்து, மனத்துக்கண் மாசிலராகிக் குணமென்னுங் குன்றேறி நின்ற திருவள்ளுவர், அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுவதற்குரிய ஒழுக்க முறையினை வகுத்தது ஒரு வியப்பன்று. திருவள்ளுவர் தம் வாழ்க்கை யனுபவத்தையே 'யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்று சுரந்தெழும் அருள் மிகுதியினால் அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்க நெறியாகத் திருக்குறளால் நமக்கு அருளிச் செய்தார் என்னலாம். சிறந்த ஒழுக்க முறையினை வகுத்த காரணத்தால் இவரை தமிழ்நாட்டுச் சாக்ரடிஸ் என்று கொள்வாரும் உண்டு.

தெய்வப் புலவர் அருளிய பொது மறை உலகத்தெழுந்த ஒழுக்கநூல்கள் பலவற்றினும் தலைசிறந்து

விளங்குகின்றது. உயரிய கொள்கைகளையும், இவர் தாம் கையாளுவதென்ற வரையறையின்றி மக்கள் எல்லோரும் ஒருங்கே ஏற்றுக்கொண்டு ஒழுகத்தக்க ஒழுக்க முறையையும் கொண்டுள்ள ஒரு நூல் உயர்தனிச் செம்மொழிகளுள் யாதாவதொன்றில் எழுதப்படினும், அஃது அனைவராலும் போற்றிப் படிக்கப்பட்டுப் பல்வேறு மொழிகளிற் பெயர்த்தெழுதவும் படும். சாதி, மத, கால, தேசப் பிரிவுகளைப் பொருட்படுத்தாது சிறந்த ஒழுக்க முறையை எல்லோருக்கும் பொதுவாக எடுத்துக்கூறிச் செல்வதே அதற்குரிய காரணமாகும். இத்திறத்தில் திருக்குறளும் ஒப்புயர்வற்று விளங்குகின்றது.

* * *

இல்லறம் நடத்தும் இயல்பும், தூய துறவற நெறியும் சமுதாய ஒழுக்க முறையும், அரசனும் அவன் அங்கங்களும் மேற்கொள்ளவேண்டிய அரசியல் முறைகளும், இன்னோரன்ன பிறவும், சுருங்கக்கூறின் மனித வாழ்க்கையின் ஒப்பற்ற முழு இலட்சியமும் ஆசிரியர் தம் நூலிற் பொது நோக்கங்கொண்டே புகன்றுள்ளார். இவர் வகுத்த ஒழுக்கமுறை தமிழ் நாட்டோடு மட்டும் தன் செல்வாக்கை நிறுத்திக் கொள்ளாமல் உலக முழுவதும் ஒரு தனிச் செங்கோல் ஓச்சி வருவது நம் மொழிக்கு ஒரு பெருஞ் சிறப்பாகும்.

உலக முழுவதும் ஒரே கண்கொண்டு பார்த்து, அனைவர்க்கும் ஒத்த நீதியையே கூறிச் சாதி, மத, கால, இட, மொழி, நிற வேற்றுமைகளைக் கடந்து நிற்கும் இத்தமிழ் மறையின் பொதுத் தன்மையைப் பண்டுதொட்டு இன்றுகாறும் புலவர்களும் பிறரும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்.

* * *

அதனால் இச்சீரிய நூல் எச்சாதியினருக்கும், எந்நாட்டினருக்கும், எச்சமயத்தினருக்கும், எக்காலத்தினருக்கும் பொதுவாகிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாயிருத்தல் அறியப்படும். சில நூல்கள் தாம் எழுந்த காலத்தில் வாழும் மக்களின்

கருத்தைக் கவரும் பொருள் பற்றிக் கூறிச் செல்லும் அத் தலைமுறையில் வாழும் மக்கள் மறையவே, அந்நூல்களும் படிப்பாரின்றி மறையும். ஏனெனில் பிற்காலத்தில் தோன்றுவோரின் கருத்துக்களும் இலட்சியங்களும் மாறி விடுகின்றன. ஆனால், எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய உறுதிப்பாடுகளைத் தெரிவிக்கும் நூல் முக்காலத்தும் நின்று நிலவும். பிறவிப் பேறுகளாகிய அறம் பொருள் இன்பங்களையும், அவற்றின் மூலமாக வீட்டின் திறத்தையும் தெரிந்து திருவள்ளுவர் செய்த நூல் "எக்காலத்திலும் மாறாப் பயன் தரும் மாண்புடைய நூலாய் விளங்குகின்றது." இதைக் "காலங் கடந்த நூல்" என்றே கூறலாம்.

திருக்குறள் சாதிப்பொது நூலாகவும் விளங்குகின்றது. திருவள்ளுவர் நான்கு வருணங்களைப் பற்றியாதல், அவை தமிழ்நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவையென்றாதல் தம் நூலில் யாண்டும் கூறினாரில்லை; சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலவே நீதிகளை வகுத்து, அனைவரையும் சமரசப் பார்வையால் பார்க்கின்றார். இந்நூலுக்கு எல்லாரும் உரியர். இவ்வுண்மையைக் கீழ்க்கண்ட திருவள்ளுவமாலை வெண்பாக்கள் விளக்குகின்றன.

" செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியார் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரிய ரல்லாதார் இல்." —வெள்ளி வீதியார்

" ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் - எட்டெழுதி
வல்லாரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று." —கோதமனார்

* * *

உரையாசிரியராகிய பரிமேலழகரும், "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க் கியல்பு" என்கின்றார்.

இதன் சமயப் பொதுத்தன்மைக்கு ஒன்றிரண்டு புறச்சான்று கூறுவோம். அக்காலத்துத் தமிழ்நாட்டுப் பல சமயங்களும் திருவள்ளுவரைத் தத்தம் சமயத்தவர் என்று உரிமை கொண்டாடின. இன்றும் அச்சமயப் போர் உண்டு. இது, திருக்குறள் எல்லாச் சமயத்தினருக்கும் உரியது என்பதையே காட்டுகின்றதன்றோ? கல்லாடமுடையார்,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு........"

என்றும், திருவள்ளுவ மாலையில் கல்லாடர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப; வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்றும் இதன் சமயப் பொது நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றனர்.

* * *

கிறிஸ்தவரும் மெல்ல இதன் பெருமையை அறிய ஆரம்பித்தனர். தமிழ்க்கடலில் எல்லை கண்டவரும், திருக்குறளை ஆங்கிலச் செய்யுணடையில் மொழி பெயர்த்தவருமாகிய 'போப்' பாதிரியார், "எங்கள் ஏசுநாதர் மலைமேல் செய்த ஹிதோபதேசத்தின் பிரதிசப்தமாகும் இத்திருக்குறள்" என்பர்.

இஃது எவ்வளவுதூரம் உண்மையைக் கூறுகின்றது என்ற ஆராய்ச்சிக்குட் புகாமல், இதினின்றும் நாம் அறியக்கூடியதுதா னென்ன என்று பார்ப்பின், திருக்குறளின் நோக்கம் புலப்படும். இவ்வாறு பலவகைச் சமயத்தினரும் திருக்குறளைத் தம்நூல் என்று போற்றிப் புகழ்கின்ற தன்மையினால், அவ் விழுமிய நூல் உலகிலுள்ள உயரிய சமயக் கொள்கைகளையெல்லாம் தன்னகத்தே அடக்கித் தனக்கு அங்கங்களாய் அமைத்துக்கொண்டு, அவையனைத்திற்கும் தலைமையில் நிற்குந் தகுதி வாய்ந்த

ஒரு தனிநூல் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

இவ்வாறு சமரச ஞானச் செல்வமாகிய இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் மனமாற்றமடைந்து தமக்கென வாழுஞ் சுயநலத்தினின்றும் மாறி, ஒழுக்கமுடையவர்களாய்ப் பிறர்க்கென வாழவேண்டுமென்ற எண்ணத்தோடு சமரசப் பார்வையைப் பெறுவரேல், நம்நாடு எவ்வளவு பயன்பெறும்! ஆனால், இதைப் படிப்போர் எத்துணையோர்? திருக்குறள் என்பது என்ன என்றும், திருவள்ளுவர் யார் என்றும் அறியாத தமிழ் மக்கள் பல்லாயிரவர் இந்நாளில் உளர் என்பது யாருமறிந்ததே. நம்மொழியில் பெறலரும் மணிபோன்ற நூல்களிருப்பதையும் அறியாராய், அறியாமை இருளிற் கிடந்துழலும் நம்நாட்டு மக்களிடைக் கல்வியைப் பரப்பி ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு உரிய நூல்களுட் சிறப்பாகத் திருக்குறளின் போதனையை எடுத்துக்கூறப் பல அபிமானிகள் முன்வருவரேல், அவர்கள் செயல் மஹோபகார மாகுமன்றோ?

---

13. முகம்மது நபி

(அல்ஹாஜ் பா. தாவூத்ஷா, B.A.)

இம்மகான் அரபி நாட்டின் தலைநகரமாகிய மக்காவின்கண் கி. பி. 571-ல் ஒரு திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் அத்தேயத்தின்கண் விளங்கி வந்த மகா சிரேஷ்டம் வாய்ந்த கோத்திரமாம் குறைஷிக் குலத்திலே அப்துல்லாவுக்கு, அவரது பாரியாள் அமீனு என்பவரின் உதரத்தினின்று உதயமானார். இவர் ஜனன மாதத்திற்குச் சிலமாதம் முன்னரே, இவரது தந்தை காலகதியால் தேக வியோகமாய்விட்டார். பிறந்து ஆறு வயதாகும் முன்னரே, அன்னை அமீனுவும் ஆண்டவனடி சேர்ந்துவிட்டார்.

பாலிய முதலே இந்த யுவர் வாய்மையுடைமை, தீமையின்மை, யோக்கியப் பொறுப்பு, ஒழுக்கப்பெருமை, நம்பிக்கைக்குரிய தன்மை முதலிய நற்குணங்களில்

தலை சிறந்து விளங்கியமையான், 'அல் அமீன்' (சரியான நம்பிக்கைக்குரியவர்) என்னும் அழகிய பட்டம் அத் தேய மக்களால் வழங்கப்பெற்று, அம் மக்கா நகரின் கண்ணே அதற்குமுன் 40 பிராயத்தை அடைந்து விதவை யாய்ப் போயிருந்த கதீஜா வென்னும் பெரிய பணக்காரச் சீமாட்டியின் வர்த்தகத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். அம் மாதுசிரோமணியின் ஷாம்தேய வியாபா ரத்தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல லாபத்தையும் காண்பித்துத் தந்ததனால் இன்னவரது யோக்கியப் பொறுப்பிலும், வர்த்தக வாய்மையிலும், களங்கமற்ற ஒழுக்கத்திலும் பெரு மதிப்புக்கொண்டுவிட்ட கதீஜாப் பிராட்டியார் இவரையே திருமணம் செய்துகொள்ளத் துணிவு கொண்டுவிட்டார். அந்த விவாகத்துக்குப் பின் முகம்மதென்பார் வர்த்தகத்திலே ஈடுபடாது, தனித் திருந்து தியானம் புரிவதிலும், தான தருமம் செய்வதிலும், சமூக சேவை புரிவதிலும், இம்சிக்கப்பட்ட ஏழை எளி யோர்களுக்கு உதவிசெய்வதிலுமே காலங்கடத்திவந்தார். இவ்வாறாகப் பதினைந்து ஆண்டுகள் வரையில் கழிந்தன.

அப்பெரியார் இரகசியத்திலேயே முதல் மூன்றாண்டு கள் மட்டும் இஸ்லாமியப் பிரசாரம் செய்து வந்தார். எனி னும், மக்காவிலுள்ள குறைஷிகள் இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டு இஸ்லாத்தில் சேர்ந்து வந்தவர்களை யெல்லாம் ஏளனம் செய்து இம்சிக்கத் தொடங்கினார்கள். மற்றமுகமாக முகம்மது நபி பிரசாரம் செய்து வந்ததனா லும், எதிரிகளின் இன்னல்களும் இடையூறுகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்ததனாலும், முதல் மூன்றாண்டுகளில் சுமார் 40 மனிதர்களே இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

நபிப் பட்டம் வந்த 10-வது ஆண்டில் கதீஜாப் பிராட்டி காலகதி அடைந்துவிட்டார். இதனால் நபி பெரு மானுக்குப் பக்க பலமென்பது ஒரு சிறிது அம்மக்காவின் கண் தளர்வுறத் தலைப்பட்டது கண்டு, எதிரிகளும் அதிகம் துள்ளத் தொடங்கிவிட்டார்கள். எனவே, முகம்மது நபி, தாயிபு என்னும் மற்றொரு நகருக்குப் போந்து, இங்கேனும்

பிரசாரம் செய்யலாமென் றெண்ணிச் சென்றார். ஆங்கிருந்தும் காவாலிகளால் கல்லால் எறியப்பட்டுக் காலில் உதிரம் சொரியத் துரத்தப்பட்டார். பிறகும் மக்காவுக்கே திரும்பி வந்து, யாத்திரா காலங்களில் வெளியூர்களிலிருந்து அங்கு விஜயம் செய்யும் மனிதர்களை நோக்கி இஸ்லாத்தின் உபதேசம் புரிந்து வந்தார். அவர்களுள் ஒரு சிலர் செவி தாழ்த்துவதும், மற்றும் பலர் உதாசினம் செய்வதுமாகவே சில காலம் கடந்து வந்தது. ஒருமுறை மதீனாவிலிருந்து மக்கத்திற்கு விஜயம் செய்திருந்த அறுவர் முகம்மது நபியின் உபதேசத்தைக் கேட்டு இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டார்கள். எனவே, அடுத்த ஆண்டில் அவ்வறுவரும் மற்றுமோர் அறுவருடனே வந்து இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். இது நபிப் பட்டம் வந்த 11-வது ஆண்டிலாகும்.

பிறகு, நபிப் பட்டம் வந்த 13-வது வருட ஆரம்பத்திலே நபி பெருமானும் மதீனாவிற்குப் புறப்படச் சித்தமாகிவிட்டார். இதற்கிடையில் எல்லா முஸ்லீம்களும் மதீனாவிற்குத் தப்பி ஓடிவிட்டார்களென்னும் ஆத்திரங்கொண்டு, முகம்மது நபியையும் அவ்வாறு ஓடிவிடக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு அக் குறைஷியர் ஒரு நாள் இரவிலே அந்த முகம்மது நபியைக் குத்திக்கொன்று விடுவதென்றே ஏற்பாடு செய்து முடித்துவிட்டார்கள். இது தெரிந்த முகம்மது நபி நள்ளிரவிலே அவ்வீட்டை விட்டுப் புறப்பட்டு அபூபக்கர் என்னும் தம்முடைய பிரதம சிஷ்யரை மட்டும் அழைத்துக்கொண்டு தௌர் என்னும் ஒரு குகைக்குள்ளே மறைவாகத் தங்கிவிட்டார். நபிகள் நாயகம் மூன்று நாள்வரை அக் குகையினுள்ளே தங்கியிருந்து நான்காவது நாள் புறப்பட்டு மதீனாவிற்குச் சென்றார். இதுதான் நபி நாயகத்தின் சரித்திரத்தில் ஹிஜ்ரத் என்று பிரபலமாகச் சொல்லப்படுகிறது. இதிலிருந்துதான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி வருடம் கணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மக்காவைவிட்டு வடக்கே 300 மைல்களுக்கப்பாலுள்ள மதீனாவுக்குச் சென்று ஆங்கிருந்த யூதர்களையும் ஏனையோரையும் சீர்திருத்தி வந்தபொழுது, குறைஷி

கள் மட்டும் முஸ்லீம்கள்மீது வைத்த வன்மத்தைச் சிறிதும் மறந்துவிடவில்லை. எனவே, இஸ்லாத்தை ஒழித்து விடுவான் வேண்டி 1000-க்கு மேற்பட்ட குறைஷிகள் அம்மதீனாவின்மீது ஹிஜ்ரி 2ல் படையெடுத்துச் சென்றார்கள். ஸிரியாவுக்குச் சென்று திரும்பிவரும் மக்கத்தவரின் வர்த்தகக் கூட்டத்தை அம்மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப் போகிறார்கள் என்னும் ஒரு பொய் வதந்தியைச் சாக்காக வைத்துக்கொண்டே அம்முஸ்லீம்களைத் தாக்கச் சென்றார்கள். நபி பெருமான் இவ்விஷயம் தெரிந்து தம் வயமிருந்த சிறுவர்களும் வயோதிகர்களும் பலாட்டியர்களும் சேர்ந்த 313 ஆயுதபாணிகளல்லாத முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு, மக்காவிலிருந்து வரும் குறைஷிப் படைகளை நடுவழியிலேயே தடுக்கச் சென்றார். ஆகவே, பத்ர் என்னுமிடத்தில் அந்தக் கடும்போர் நிகழலாயிற்று.

முழுத் தோல்வியுற்றுப் புறமுதுகுகாட்டி மக்காவிற்கு ஓடிய குறைஷிகள் தங்கள் இனத்தவர்களையும், சுற்றுப் புறங்களிலுள்ள மற்றெல்லா வர்க்கத்தினரையும் திரட்டிக் கொண்டு 3000 வீரர்கள் வரை மதீனாவிற்கருகே வந்து பாடிவீடு செய்துகொண்டார்கள். அதுபோது முகம்மது நபி தம்முடைய 700 சிஷ்யர்களுடனே சென்று மிக்க தீரத்துடனே உஹுத் என்னும் மலையடிவாரத்தில் யுத்தம் புரிந்தார்.

இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் ஜயித்தார்களென்று கூறுவதற்கில்லை. எனினும் குறைஷிகளும் வெற்றிமாலை சூடி முஸ்லிம்களை தொலைத்துவிட முடியவில்லை. ஆதலின் ஆங்குச் சம்பூரண வெற்றிபெற முடியாது திரும்பிய குறைஷியர் மக்காவிற்குச் சென்ற பின்னரும் தங்கள் குரோத புத்தியை விட்டனரில்லை. ஆகவே, அவர் தம் அரபுநாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, எல்லா அரபிக் கூட்டத்தினரையும் முஸ்லிம்களுக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டார்கள்.

நபி பெருமான் தமக்குக் கிடைத்த 3000 வீரர்களுடனே சென்று மதீனாவைச் சூழ ஓர் அகழ் வெட்டிக் கொண்டு யுத்தத்திற்குச் சன்னத்தராய் நின்றார். இறை

வன் சோதனையாலேற்பட்ட கடும் புயலாலும், மழையாலும், குளிராலும் எதிரிகள் தங்கள் ஆயுதங்களையும் பிற தட்டுமுட்டுச் சாமான்களையும் எறிந்துவிட்டு மக்காவை நோக்கி ஓட்டம்பிடித்தார்கள்.

ஹிஜ்ரி 8-ல் நபிபெருமான் 10,000 முஸ்லிம் வீரர்களுடனே புறப்பட்டுச் சென்று அம்மக்கா நகரைக் கைப்பற்றிக்கொண்டார். குறைஷிகள் எதிர்த்து நிற்கவில்லை; எல்லோரும் சிரங்குனிந்து வாளா இருந்துவிட்டார்கள். ஆதலின் முகம்மது நபி ஒரு துளி இரத்தமும் சிந்தாது அந்நகரைக் கைப்பற்றிக்கொண்டதோடு அந்த ஜன்மப் பகைவர்களனைவரையும் அடியோடு மன்னித்துவிட்டார். இதற்கிடையில் அரப் தேயத்தின் பற்பல பகுதிகளும் சுயமே இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்தன. ஒரு சில முரடர்கள் மட்டும் சிறிது எதிர்ப்புக்குப் பின்னே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். ஹிஜ்ரி 9-ல் ஹஜ்ஜுக்குச் சென்ற முஸ்லிம்களால் நபி பெருமானின் அரசவிளம்பரம் ஒன்று அந்நகரின்கண் வாசிக்கப்பட்டது.

பின்னர் ஹிஜ்ரி 9, 10-ல் அரப் தேயத்தின் பற்பல பகுதிகளிலிருந்தெல்லாம் தூதுக் கூட்டங்கள் அடுக்கடுக்காக வந்து தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்தன. பிறகு ஹிஜ்ரி 10-ல் நபி பெருமான் 1,50,000 சிஷ்யர்களுடனே புறப்பட்டு மக்காவிற்குச் சென்று தம்முடைய இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக்கொண்டார். அது சமயம் அருகிலுள்ள பாத் அரமைதானத்தில் நின்று ஓர் இனிய இறுதிப் பிரசங்கமும் செய்துமுடித்தார். அதில் ஏக தெய்வக் கொள்கையும், ஸ்திரீகளின் உயர்வும், அடிமைகளின் மேன்மையும், அண்டை அயலாருடனும் பந்து மித்திரர்களுடனும் நடந்துகொள்ள வேண்டிய முறையும் அதிகம் வற்புறுத்திக் கூறப்பட்டன. கொலை, களவு, காமம், கள், சூது, அநாதைக் குழந்தைகளின் பொருளை அபகரித்தல் ஆகியவற்றின் கேடு பற்றியும் அழகாக வற்புறுத்தப்பட்டது. இறுதியாக ஹிஜ்ரி 11-ல் (கி. பி. 632) ஆண்டவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார்.

14. அன்பின் அருஞ்செயல்

(வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை)

உலகில் மக்கள் ஒருவர்பாலொருவர் அன்புகொள்ளுகின்றனர். அதற்குக் காரணம் ஒருவர் பண்பை மற்றையோர் உணர்தல் ஆகும். பண்புணர்ந்து கொள்ளப்படும் அன்பே உள்ளன்பாம். பண்பு பற்றிய உள்ள உணர்ச்சியின்றி, ஓரிடத்தாராதல் பற்றியேனும், பல்காலும் கூடிப் பழகுதல் பற்றியேனும், யாதானும் ஓர் ஊதியம் பெறுதல் பற்றியேனும் கொள்ளப்படும் அன்பு உள்ளன்பாகாது; போலியன்பாம். இஃது அன்புபோலத் தோன்றுவது. இதற்குக் காரணமாக உள்ளவை நீங்கிய வழி காரியமாகிய இப் போலியன்பும் நீங்கிவிடும். உள்ளன்பு, பண்பு பற்றிக் கொள்ளப்படுவதாகலின், எஞ்ஞான்றும் நிலைத்து நிற்கும். உள்ளன்பே உண்மை நட்பிற்குக் காரணம் ஆகும். உள்ளன்பு நிகழுதற்கு அன்பு கொள்ளப்படுவோரை அன்பு கொள்ளுவோர் நேரிற் கண்டு பழகுதல் வேண்டுமென்பதின்று. பண்புடையாரைப் பற்றிக் கேள்விப்படுதலினாலேயே அன்பு நிகழும். இவ்வன்பு மிக முதிர்ந்தோரிடைக் காணப்படுஞ் செயல்கள் செயற்கருஞ் செயல்களாம். அவை உலகியல் நெறியில் நின்று நோக்குவோர்க்கெல்லாம் பெரு வியப்பைத் தரும். இதனை விளக்குதற்குரிய வரலாறொன்றினை ஈண்டுத் தருகின்றோம்.

பன்னூறாண்டுகட்கு முன்னர், சோழநாட்டில் உள்ள திங்களூரில் அந்தணர் மரபிலுதித்தவரும், அப்பூதியடிகள் என்னும் பெயரினருமாகிய பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தனர். அவர் பெருநிலக் கிழவர்; நற்குணங்கள் யாவும் ஒருங்கமையப் பெற்றவர்; தீக்குணங்களை அறவே காய்ந்தவர்; நல்லொழுக்கத் தெல்லையாக உள்ளவர்; அருள் நிரம்பிய உள்ளமுடையவராய் மக்களுக்கு நேரும் பரிவு அகற்றும் பொருட்டுத் தண்ணீர்ப்பந்தர் வைத்தல், குளம் வெட்டுதல், கா வளர்த்தல், அறச்சாலை காணல் முதலிய பேரறங்களைச் செய்து வருபவர்! சிவபெருமானிடத்துப் பேரன்புடையவர்.

இத்தகைய அப்பூதியடிகள், சமண சமயச் சார்புடைய மன்னன் மகேந்திர பல்லவன் என்பான் சமண குருமார் சிலர் சூழ்ச்சியால் விதித்த கொடுந் தண்டனைகளினின்று சிவபிரான் திருவருளால் உய்தி பெற்றவரும், அப்பிரான் திருவடிகட்குத் தொண்டுபூண் டொழுகுபவரும், வேளாண் மரபினரும் ஆகிய திருநாவுக்கரசரைப் பற்றிக் கேள்வியுற்றனர். சிவபிரான்பால் திருநாவுக்கரசருக்குள்ள எல்லையற்ற அன்பும் அப்பெருமான் நாவரசருக்குப் புரிந்த பேரருளும் நமது அடிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அடிகள் அரசரை நேரிற் கண்டிலரேனும் அவர்பால் அளவில் அன்பு கொண்டு மனங்கலந்த பெருங் கேண்மையுடையராயினர். அடிகளின் மனத்தினில் 'திருநாவுக்கரசர்' எனும் பெயரே நின்று நிலவியது; ஆகலின், தாம் செய்யும் அறங்கள் யாவற்றையும் திருநாவுக்கரசர் பெயராலே செய்துவந்தனர்; தம்முடைய புதல்வருக்கும் 'மூத்த திருநாவுக்கரசு, 'இரண்டாம் திருநாவுக்கரசு' என்றிவ்வாறு பெயர் இட்டனர்; இம்மட்டோ! தம் இல்லத்திலுள்ள எருமை, ஆன், நிறைகோல், நாழி முதலிய அளவுக் கருவிகள் முதலாய யாவற்றுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே வழங்கி வந்தனர். என்னே அன்பின் பெற்றி!

இங்ஙன், அப்பூதியடிகள் வாழ்ந்து வருங்கால், வேனிற்காலத்தில், திருநாவுக்கரசர் சிவபிரான் கோயில் கொண்டருளியுள்ள திருப்பதிகள் பலவற்றைத் தரிசித்துத் திருப்பழனம் சார்ந்து, உற்றிடத்துதவுவாரையும் பெரிய நாயகியம்மையாரையும் வணங்கித் துதித்துத் திங்களூருக்கு அணித்தே வந்தனர். வந்தவர் மக்கள் மிகுதியாக நடமாடும் வழியில் வேனில் வெப்பத்தின் கடுமையைத் தணிக்க வல்ல பெரிய தண்ணீர்ப் பந்தரொன்றினைக் கண்டார். கண்டதும் உள்நுழைந்து, குளிர்ந்த இளங் காற்று வீசுகின்ற நிழற் பரப்பினையும், தண்ணிய இனிய நீர் நிரம்பியுள்ள சால்புகளையுங் கண்டு மகிழ்வும் வியப்புமெய்திச் சுற்றுமுற்றும் நோக்க, எம்மருங்கும் 'திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தர்' எனச் சந்தமுற வரைந்திருத்தலைக்

கண்ணுற்றார். உடன், அருகிலுள்ளாரை, "இப்பந்தரை இப்பெயரிட்டு இங்கமைத்தார் யார்?" என உசாவினர். அதுபற்றி அறிந்தவர்கள், "செப்பருஞ்சீர் அப்பூதியடிகள் என்னும் மறையோர் இப்பந்தரையேயன்றி இவ்வூரில் எங்கும் உள்ள சாலை, குளம், கா ஆகிய யாவற்றையும் 'திருநாவுக்கரசு' எனும் பெயரானே செய்தமைத்தார்" என்றனர். அதுகேட்ட நாவரசர், "இதற்கென்னே கருத்து?" என ஆராய்பவராய், "அவர் எவ்விடத்தார்?" என வினவ, அவர்கள், "அவர் இத்தொல்பதியார்; மனையின்கண் சென்றனர் இப்பொழுது; அதுவும் சேய்த்தன்று; அணித்து" என்றார்.

உடன், அரசர் அவணின்றும் போந்து அடிகளின் மனைவாயிலை நண்ண, சிவனடியார் வந்துள்ளார் என அறிந்து, அடிகள் விரைவின் எய்தி அரசரை வணங்க, அவரும் எதிர் வணங்க, அடிகள் 'நங்கள் பிரான் அடியவராய் அருள் பொழியும் திருமேனியுடைய நீவிர் இவண் எழுந்தருளுதற்கு அடியேன் என்ன தவஞ் செய்தேனே!' எனப் பாராட்ட, அரசர் "யாம் திருப்பழனத்துள்ள மேருவில்லாரை இறைஞ்சி வருகின்றோம்; வழியில் நீர் வைத்த தண்ணீர்ப் பந்தரைக் கண்டும், நீர் செய்யும் பிற அறங்கள் பற்றிக் கேட்டும் உம்மைக் காணவேண்டும் என வந்தோம்; இது நிற்க, நீர் வைத்த தண்ணீர்ப் பந்தரில் நும்முடைய பேர் எழுதாது வேறொரு பேர் எழுத வேண்டிய காரணம் என்னை?" என்றனர்.

மறையவர் அதனைக் கேட்டதும் உளம் பதைத்து "நீர் கூறியது அழகிதன்று; சமணர்களுடன் ஒன்றிய மன்னவன் இழைத்த பெருந் தீமைகளையெல்லாம் திருத்தொண்டின் வலிமையினால் வென்றவர்தம் திருப்பெயரோ வேறொரு பேர்? திருநாவுக்கரசரின் அளப்பரும் பெருமையை அறியாதார் இவ்வுலகில் யாவர் உளர்! நீவிர் சிவவேடத்துடனின்று இவ்வகை மொழிந்தீர்! எங்குறைவீர்? நீர் தாம் யார்? இயம்பும்" என இயம்பினர். அதுகேட்ட வாகீசர் அடிகளின் அன்பின் திறத்தையறிந்து, "சிவபிரானார் சூலை நோயால் ஆட்கொள்ளும் பேறுபெற்ற

சிறுமையேன் யான்': என விளம்பினர். கேள்வி மாத்திரையான் தம் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சிவனடியாராய திருநாவுக்கரசர் தம் கண்ணெதிரே தோன்றி இங்ஙனம் கூறியதைக் கேட்ட அடிகளின் உவகைக் கிளர்ச்சியும் அன்பின் பெருக்கமும் இத்தகையவெனக் கூறுதல் ஒண்ணுமோ? அவர், தம் கண்களினின்று இன்பவாரி ஒழுக, உரோமம் சிலிர்க்க, கைகள் சிரமேற் குவிய, உரை குழற, நாவரசரது திருவடித் தாமரைகளில் வீழ்ந்து நெடுவணக்கஞ் செய்தார். அப்பர் அடிகளை எதிர்வணங்கித் தமதருமைத் திருக்கரத்தால் எடுத்தருள, அவர் மிக்க வறுமையுடையானொருவன் பெருநிதியம் பெற்று மகிழ்வது போல அளவிலா மகிழ்ச்சிகொண்டு, இன்பக் கடலில் திளைத்தனர். பின்னர் மனையகத் தெய்தி மனைவி மக்கள் முதலாய அனைவர்க்கும் திருநாவுக்கரசர் எழுந்தருளியுள்ள நற்செய்தியைப் பேருவகையுடன் உரைத்து, அவர்களை உடன்கொண்டு நாவரசர்பக்கல் நண்ணி, அன்னாரோடும் மீண்டும் வணங்கி, அரசரை உள்ளெழுந்தருளுவித்து, அவர் திருவடிகளைத் தூயநீர்கொண்டு விளக்கி, அந்நீரைச் சிரமேற்றெளித்து உள்ளும் பருகினர். அதன் பின்னர்ச் செயற்பாலவாய வழிபாடனைத்தும் செய்து தமதில்லத்தில் அமுது கொள்ளுமாறு வேண்ட, அவரும் அவ்வேண்டுகோட் கிசைந்தனர்.

அரசரின் இசைவு குறித்து மிக்க மகிழ்ச்சி கொண்ட அடிகள், தமது மனைவியாருக்குச் செய்தியறிவிக்க, அவரும் களிகூர்ந்து அறுசுவையுடன் நால்வகை உணவையும் விரைவிற் சமைத்திட்டார். பின், அவர்கள் தமது புதல்வருள் மூத்த திருநாவுக்கரசை யழைத்து, 'அடியார்க்கமுது செய்விக்கும் பொருட்டு வாழைக் குருத்தினை அரிந்து கொணர்க' எனக் கூறிக் கடிதின் விடுத்தனர். புதல்வனும் இப்பணி செய்யும் பேறு வாய்த்தமை குறித்து மகிழ்வுற்று, 'நல்ல தாய் தந்தை ஏவ நானிது செயப் பெற்றேன்' என்று கூறி, ஒல்லையில் விரைந்து சென்று தோட்டத்துள் புக்கு, அழகிய பெரிய வாழைக் குருத்தை அரியும்பொழுதினில், கொடிய நாகம் ஒன்று அவன்

கையில் தீண்டி அதனைச் சுற்றிக்கொண்டது. அருமைப் புதல்வனாகிய அவன் அரவு கடித்தமையான் உண்டாய கொடுந் துன்பத்தையும் பொருட்படுத்தாது, கையினைக் கவர்ந்துகொண்ட நாகத்தை உதறி வீழ்த்து, 'இப் பாந் தளின் விடம் ஏறுமுன் கடிதிற் சென்று நாவரசர் அமுது செய்தற்குதவும் இக்குருத்தினைக் கொடுப்பேன்; இன்னும் அப்பெரியார் அமுது கொள்ளக் காலம் தாழ்க்குமாறு இச்செய்தியை யார்க்கும் அறையேன்' என்னும் திருந்திய கருத்தினோடு ஓடி வந்து, மனைபுகுந்து, தாயார்பால் குருத்தைத் வைத்து, ஆவி சோர்ந்து, உடல் தளர்ந்து படியி னில் வீழ்ந்தான். இப்புதல்வனதன்பு அடிகள் அன்பி னும் பெரியதெனில் மிகையாமோ?

தளர்ந்து வீழ்ந்த மகனைக் கண்ட தாய் தந்தையர் உடல் பதைத்து உற்று நோக்கி, உதிரக் குறியையும் கண்ணும் எயிறும் உடலும் கருகியிருத்தலையுங் கண்டு 'விடத்தினால் வீந்தான்' என உணர்ந்தனர் எனினும், தமக்குண்டாய மனக்கலக்கத்தினை ஒருவாறடக்கித் தொண்டனார்க் கமுதளிக்க முற்பட்டனர். முற்பட்டவர் தமது பெறலரும் புதல்வனைப் பாயினுள் பெய்து மூடிப் புறமனையில் ஓரிடத்தே வைத்து, 'இச்செய்தி தெரியா முன்னம் திருநாவுக்கரசரை அமுது செய்விப்போம்' என்று அரசர்பால் விருப்போடு விரைந்து வந்து, 'அர சரே, அமுது செய்யக் காலம் தாழ்க்கின்றது; எழுந்தருளி அமுது செய்து எங்குடி முழுதும் உய்யக்கொள்ளல் வேண் டும்' என வேண்டினர். பேரன்பின் பெற்றியை என் னென்றுரைப்பது! புதல்வன் ஆருயிரைச் சிறிதும் பொருட்படுத்தாது, அடியவரை உண்பிக்கப் புகுஞ்செயல் செயற்கருஞ் செயலன்றோ? உலகியல் நெறியில் நின்று நோக்குவோர்க் கெல்லாம் இஃது பெரு வியப்பையே விளைக்கும்.

அடிகள் தமது வேண்டுகோள் கேட்டெழுந்து வந்த அரசரின் திருவடிகளை விளக்கி ஆசனத்தமர்த்த, அவரும் அதிலமர்ந்து வெண்ணீறு சாத்தி, அடிகளுக்கும் அவர் மனைவியார்க்கும் திருநீறளித்துப் புதல்வர்க்கும் அளிக்கும்

போழ்தில், 'விபூதியளித்தற்கு இவர்கட்கு மூத்த சேயை யும் காட்டும்' என்ன, அடிகள், நிகழ்ந்த செய்தி யாதும் கூறாது, 'இப்போது இங்கவன் உதவான்' என்றனர் அது கேட்ட அரசரின் திருவுள்ளத்தில் இறைவன் திருவருளால் ஒரு தடுமாற்றம் தோன்ற; அவர், 'இவ்வுரை பொறாதென் னுள்ளம்; அவன் செய்தி என்னை? மெய்விரித் துரையும்' என்றார். எனினும், அடிகள் மெய்யடியாராகிய திருநாவுக் கரசர் அமுது செய்யும் பேறு பிழைக்குமே என்று கருதி முன்னர் மெய்ம் முழுதும் உரைத்திலரேனும், அவர் 'மெய் விரித் துரையும்' எனப் பணித்தமையான், மைந்தர்க் குற்றதைப் பகர்ந்தனர். பகர்ந்ததும் அரசர் திகைப்பும் வியப்புமுற்று, 'நன்று நீர் செய்த வண்ணம்! யாவர் இத் தன்மை செய்வார், எனப்பகர்ந்து புதல்வன் சவத்தையும் கொணர்வித்துச் சிவபிரான் திருவருள் புரியுமாறு 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார். புதல்வனும் துயில் நீத்தெழுபவன்போல உயிர்பெற்றெழுந்தான். முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ? எழுந்த புதல்வனும் அருளுரு வாய திருநாவுக்கரசரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க அவர் ஆசி கூறித் திருநீறளித்தார். பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்போர் யாவரும் இறும்பூதும் பெருமகிழ்ச்சியும் எய்த, அவண், நின்ற அவன் பெற்றோர் 'அறிவரும் பெருமையன்பர் அமுது செய்தருளுதற்குச் சிறிது இடையூறு செய்தான் இவன்' எனச் சிந்தை நொந்தார். அடியாரிடத்துக்கொண்ட அன்பினாலாய அருஞ் செயலுக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகுமன்றோ?

நாவரசர் அவர்கள் முகவாட்டம் கண்டு, அன்னார் மனக்குறையை நீங்குவான் கருதி மனையகத்தெய்த, விதிப் படி பரிகலம் திருத்தியபின் அடிகள் அரசரை அமுது கொள்ளுமாறு வேண்ட, அவர் அடிகளையும் அவர் தம் புதல்வர்களையும் உடனிருந்துண்ணுமாறு கூற, அப்பணி யைத்தலைமேற்கொண்டு "மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந்தமுது செய்யச் சிந்தைமிக்கில்லமாதர் திருவமு தெடுத்து நல்க'த் திருநாவுக்கரசர் திருவமுது செய்தருளி னர். இன்னணம் அடிகளின் வேட்கையை முடித்த திரு

நாவுக்கரசர் அவர் விழைந்தவண்ணம் பன்னாள் உடனிருந்து அளவளாவியபின், தலயாத்திரை கருதிப் புறப்பட்டு மீண்டும் திருப்பழனம் சென்று செம்மேனியம்மானைத் தரிசித்துப் பாடிய 'சொன்மாலை' என்று தொடங்கும் பதிகத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்தருளினர். இத்தகைய பேறுபெற்ற அடிகள் தாம் மேற்கொண்ட திருத்தொண்டை முட்டின்றி முடித்து, உமையொரு பாகன் திருவடி நிழலை யடைந்து பேரின்ப வாழ்வெய்தினர்.

அப்பூதியடிகள் என்னும் இப்பெருந்தகையார் காய் இலை புசித்தும், ஊண் புனல் தவிர்த்தும், மழையில் நனைந்தும், வெயிலிற் காய்ந்தும், பஞ்சாக்கினியினிடை நின்றும் இங்ஙன் உடலை வருத்திச் செய்யும் தவத்தினை மேற்கொள்ளாது, சிவபிரானல் ஆட்கொள்ளப்பெற்ற பேரன் பராய திருநாவுக்கரசரது திருநாமத்தையே இடையறாது உள்ளன்போடு நினைந்தும் கூறியும் எழுதியும் பெறற்கரிய பேரின்பப் பேறுபெற்றார் என்பதும் ஈண்டுக் கருதற்பாலதாம்.

---

15. முதற் குலோத்துங்கன் அரசியல்

[T. V. சதாசிவப் பண்டாரத்தார்]

கிராம சபை: நம் முதற் குலோத்துங்கன் காலத்தில் ஊர்கள்தோறும் சபைகள் இருந்தன. அச்சபையினரே அங்கு நடைபெற வேண்டிய எல்லாவற்றையும் நிறைவேற்றிவந்தனர். சுருங்கச் சொல்லுமிடத்து அந்நாளில் கிராம ஆட்சி முழுமையும் இச்சபையாரால் தான் நடத்தப்பெற்று வந்தது எனலாம். இச்சபையின் உறுப்பினர் எல்லோரும் கிராமத்திலுள்ள பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆவர். அக்காலத்தில் தனியூர்களும் பல சிற்றூர்களடங்கிய சதுர்வேதி மங்கலங்களும் பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியையும் குடும்பு (வார்டு) என்று வழங்கினர். ஒவ்வொரு குடும்பிற்கும் பிரதிநிதியாக ஒவ்

வோர் உறுப்பினரே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உத்திரமேரூர் முப்பது குடும்புகளையுடையதாகவும், தஞ்சாவூர் ஜில்லாவில் செந்தலை என்று தற்காலத்து வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் சற்றேறக்குறைய அறுபது குடும்புகளையுடையதாகவும் இருந்தன. எனவே, உத்திரமேரூரிலிருந்த சபை முப்பது உறுப்பினரை யுடையதாயிருந்தது என்பதும், சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திருந்த சபை அறுபது உறுப்பினர்களை யுடையதாயிருந்தது என்பதும் நன்கு விளங்குகின்றன. ஆகவே சபையின் உறுப்பினரது எண் அவ்வவ்வூரின் பெருமை சிறுமைக்கு ஏற்றவாறு குறிக்கப்பெறும் போலும்.

இனிச் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் உரிமை யுடையோர் காணிக்கடன் செலுத்தற் கேற்ற கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையராகவும், சிறந்த நூல்களைக் கற்ற அறிஞராகவும், காரியங்களை நிறைவேற்றுவதில் வன்மையுடையவராகவும், அறநெறியில் ஈட்டிய பொருளைக்கொண்டு தூயவாழ்க்கை நடத்துவோராகவும், முப்பத்தைந்துக்குமேல் எழுபத்தைந்துக் குட்பட்ட வயதினராகவும், மூன்று ஆண்டுகட்கு உள்பட்டு எந்த நிறைவேற்றுக் கழகத்திலும் உறுப்பினராக இருந்திராதவராகவும் இருத்தல்வேண்டும் என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது.

இனி, எந்தச் சபையிலாவது உறுப்பினராகவிருந்து கணக்குக் காட்டாதிருந்தவரும், ஐவகைப் பெரும்பாதகங்கள் புரிந்தோரும், கிராமக் குற்றப்பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், பிறர்பொருளைக் கவர்ந்தோரும், கள்ளக் கையெழுத்திடலாகிய கூடலேகை (Forgery) செய்தோரும், குற்றங் காரணமாகக் கழுதைமீது ஏற்றப்பட்டவரும், எத்தகைய கையூட்டுக் (Bribe) கொண்டோரும், கிராமத் துரோகி என்று கருதப்பட்டோரும், இங்குக் குறிக்கப் பெற்றோர்க்கு உறவினரும் தம் வாழ்நாள் முழுமையும் கிராம சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதற்குத் தகுதியற்றவராவர்.

பொது மக்கள், கிராம சபையின் உறுப்பினரை ஆண்டுதோறும் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுப்பது வழக்கமாகும். தேர்ந்தெடுத்தற்குக் குறிக்கப்பெற்ற நாளில் அரசாங்க அதிகாரி ஒருவர், சபை கூடுதற்கு அமைக்கப்பட்டுள்ள மாளிகையில் அவ்வூரிலுள்ள இளைஞர் முதல் முதியோர் ஈறாகவுள்ள எல்லோரையும் கூட்டுவர். அக்கூட்டத்தின் நடுவில் ஒரு குடம் வைக்கப்பெறும். அங்குள்ள நம்பிமாருள் வயது முதிர்ந்தோர் ஒருவர் அக்குடத்தை எடுத்து அதனுள் ஒன்றும் இல்லை என்பதை எல்லோரும் அறியக் காட்டிக் கீழே வைப்பர். உடனே, அவ்வூரில் ஒவ்வொரு குடும்பிலுள்ளாரும் தமக்குத் தகுதியுடையார் என்று தோன்றுவோர் பெயரைத் தனித்தனி ஓலையில் எழுதி, அவ்வோலைகளை ஒருங்கு சேர்த்து, அவை எக்குடும்புக்குரியவை என்பது நன்கு புலப்படுமாறு அக்குடும்பின் பெயர் வரையப்பெற்ற வாயோலை யொன்றைச் சேர்த்துக் கட்டி அக்குடத்தில் இடுவர். இங்ஙனமே எல்லாக் குடும்பினரும் குடவோலை இடுவர். பின்னர், அம்முதியோர் அங்கு நடைபெறுவதை யுணராத ஓர் இளைஞனைக் கொண்டு இக்குடத்தினின்று ஓர் ஓலைக்கட்டை எடுப்பித்து, அதனை அவிழ்த்து வேறு ஒரு குடத்திலிட்டுக் குலுக்கி, அவற்றுள் ஓர் ஓலையை அச்சிறுவனைக்கொண்டு எடுக்கச்செய்து, அதனைத் தாம் பெற்று, அங்குள்ள கரணத்தான் (கணக்கன்) கையிற் கொடுப்பார். அவன் தன் ஐந்து விரல்களையும் விரித்து உள்ளங்கையில் அதனை வாங்கி, அவ்வோலையில் எழுதப்பெற்றுள்ள பெயரை அங்குள்ளோர் யாவரும் உணருமாறு படிப்பான். பின்னர், அங்குள்ள நம்பிமார் எல்லோரும் அதனை வாசிப்பர். அதன்பிறகு, அப்பெயர் ஓர் ஓலையின் கண் வரைந்துகொள்ளப்படும். அவ்வோலையிற் குறிக்கப்பெற்ற பெயருடையவரே அக்குடும்பிற்குரிய கிராம சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் ஆவர்.

இங்ஙனமே மற்றைக் குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப் பெறுவர். ஊரிலுள்ள எல்லாக் குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த பின்னர், அவர்களுள் வயதிலும் கல்வியிலும் அறிவிலும்

முதிர்ந்தோர் பன்னிருவரைச் சம்வத்சர வாரியராகத் தேர்ந்தெடுப்பர். மற்றையோருள் சிலர் தோட்டவாரிய ராகவும், சிலர் ஏரி வாரியராகவும், சிலர் பொன் வாரிய ராகவும், சிலர் பஞ்சவாரியராகவும் ஏற்படுத்தப்படுவர். எனவே, கிராமசபை, சம்வத்சரவாரியம், தோட்டவாரியம் ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவாரியம் என்ற ஐந்து உட்கழகங்களைத் தன்னகத்துக்கொண்டு விளங்கிற்று. சபையின் உறுப்பினர் ஏதேனும் குற்றம்பற்றி இடையில் விலக்கப்பட்டாலன்றி ஓராண்டு முடிய எவ்வகை ஊதிய மும் பெறாது தம் வேலைகளை நடத்துவதற்கு உரிமை பூண்டவராவர். இவர்களை ஆளுங்கணத்தார் எனவும் பெரு மக்கள் எனவும் கூறுவர். இவர்கள் கூடுதற்கு ஊர் தோறும் மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவர்க ளுள் நியாயவிசாரணை செய்வதும் அறநிலையங்கள் நன்கு நடைபெறுகின்றனவா என்று பார்த்துக் கொள்வதும் சம்வத்சரவாரியரது கடமையாகும். ஏரி குளம் ஊருணி முதலிய நீர்நிலைகளைப் பாதுகாத்தலும் விளைவிற்கு வேண் டும் நீரைப் பாய்ச்சுவித்தலும் ஏரி வாரியரது கடமை யாகும். நிலத்தைப் பற்றிய எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுதல் தோட்டவாரியரது கடமையாகும். பல்வகை யாலும் வாங்கப்பட்ட பொற்காசு செப்புக்காசுகளை ஆராய்வது பொன்வாரியரது கடமையாகும். பஞ்சவாரிய ரது கடமை யாது என்பது இப்போது புலப்படவில்லை. இச்சபையார் பணித்தவற்றைச் செய்பவன் கரணத்தான் எனப்படுவான். இவனை மத்தியஸ்தன் எனவும் கூறுவ துண்டு. நல்வழியில் ஈட்டிய பொருளும் நல்லொழுக்கமும் உடையவனையே கரணத்தானாக அமைப்பர். இவன் கணக்கு எழுதுதல்வேண்டும். எழுதிய கணக்கைச் சபை யார் விரும்பியபோது, தானே நேரில் காட்டவேண்டும். இவன் சபையாரது நன் மதிப்பைப் பெறுவிடின், அடுத்த ஆண்டில் இவனுக்கு அவ்வேலை கொடுக்கப்படமாட்டாது. ஒரு நாளைக்கு ஒரு நாழி நெல்லும் ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும் இரண்டு கூறையும் கணக்கனுக்குச் சம்பளமாகக்கொடுக்கப்படுவதுவழக்கம். கணக்கன் தான் எழுதிய கணக்கைச் சபையாரிடம் ஆராய்ந்து பார்த்த

தற்குக் கொடுக்கும்போது கையில் காய்ச்சிய மழுவை (Red Hot Iron) ஏந்தி உறுதிமொழி கூறிக்கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின் கணக்கனுக்கு எழு கழஞ்சிற்குமேல் காற்பங்கு பொன் சேர்த்துக் கொடுக்கப்படும். ஊறுபாடு நேருமாயின் பத்துக்கழஞ்சு பொன் தண்டமும் வேறு தண்டமும் சபையாரால் விதிக்கப்படும்.

இனி, நியாய விசாரணை நடத்தும் சம்வத்சரவாரியர் கொலை செய்தவனுக்குக் கொலைத்தண்டம் விதித்தலும், பிறவற்றிற்குச் சிறையிடுதலும், தலையிடுதலும், பொன் தண்டம் விதித்தலும் வழக்கம். அறியாமையால் தற்செயலாக நேர்ந்த சாவிற்கெலாம் அவ்வவற்றிற்கு ஏற்றவாறு திருக்கோயில்களில் விளக்கிடுவதற்குக் குற்றவாளிகள் பொன் கொடுக்குமாறு சபையார் தீர்ப்புக்கூறுவர். வேட்டைக்குச் சென்றோன் ஒருவன் எய்த அம்பு, குறி தவறி ஓர் உழுவன்மேற் பட்டு அவன் இறந்ததற்கும், ஒருவன் தன் மனைவியைத் தள்ள, அவள் விழுந்து இறந்தமைக்கும், ஒருத்தி தன் மகள்மீது எறிந்த கோல் பட்டு அண்டையில் நின்ற வேறொரு பெண் மாண்டதற்கும் திருக்கோயில்களில் விளக்கிடுமாறு தீர்ப்புக்கூறினரேயன்றி அன்னோர்க்குக் கொலைத்தண்டம் விதித்திலர். ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்று தொழிந்தவர்களுக்குப் பொன் தண்டம் விதித்தல் வழக்கம் என்பதும், அவர்கள் அதனைக் கொடாது ஓடிவிட்டால் அன்னாரின் வீடு, காணி முதலியவற்றை அரசனது ஆணையின்படி விற்று ஊர்ச் சபையார் ஒழுங்குசெய்தல் வழக்கம் என்பதும் பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

—

16 படக்காட்சி

[வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார்]

நாகரிகம் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வரும் இவ்வுலகில் பல புதுமைகள் தோன்றிக்கொண்டேவருகின்றன. இப்புதுமைகளுக்குக் காரணமாக இருப்பது இயற்கை மின்சார சக்தியேயாகும். இதன் துணைகொண்டு எண்ணிப் பார்க்கவும் இயலாத புதுமைகளை எல்லாம் மனிதன் செய்து முடிக்கின்றனன். இப்படிப் பல புதுமைகளைக் கண்டுபிடிப்பதற்கு மனிதனது ஆற்றலும் அறிவும் துணை செய்கின்றன.

இங்ஙனம் நவநவமான முறைகளைக் கண்டுபிடித்து உலகுக்குதவும் பெருமை மேனாட்டறிஞர்க்கே உரியது. அவர்கள் எப்பொழுதும் இயற்கைப் பொருள்களின் துணையால் என்னென்ன செய்து முடிக்க இயலுமோ அவற்றையெல்லாம் செய்துமுடிக்க ஊக்கமும் உணர்ச்சியும் மிக்கவர்களாய் முன் நிற்கின்றார்கள். கீழ்நாட்டினரோ எனில், மேனாட்டறிஞர்களைப்போல உலக விஷயத்தில் புக மனம் இன்றி, ஆன்ம விசாரணையில் தலையிட்டவராய் வைதிக விஷயத்தினும் பரலோக ஈடுபாட்டிலும் தம் அறிவைச் செலுத்திவருகின்றனர். மேனாட்டார் வைதிக முறையில் தம் அறிவை முற்றிலும் செலுத்தாது இலௌகிக நாட்டமே மிக்கவராகப் பல புதுமைகளைக் காண்பதிலேயே தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். அப்புதுமைகள் பலவற்றுள் படக் காட்சியும் ஒன்று.

இப் படக்காட்சி, இயங்கு படக்காட்சி, இயங்காப் படக்காட்சி, பேசும் படக்காட்சி. பேசாப் படக்காட்சி எனப் பலவகைப்படும். இயங்காப் படக்காட்சி என்பது உருவங்களைக் கண்ணாடியால் எழுதியோ அன்றிப் புகைப் படம் பிடித்தோ விளக்கின் துணைகொண்டு திரையில் காட்டப்படும் காட்சி. இப்படிப் படங்களைக் காட்டும் கருவியைத்தான் மாஜிக்கு லேண்டர்ன் (Magic Lantern) என்று கூறுவர். இக்கருவி 17-ம் நூற்றாண்டில் கிர்ச்சர் (Kircher) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இயங்கு படக்காட்சி: இயங்கு படக்காட்சியைக் கண்டுபிடித்த பெருமை வாய்ந்த தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alva Edison) என்னும் பெரியாரின் உதவி பெரிதும் பாராட்டத்தக்கது. மாஜிக்கு லேண்டர்ன் மூல

மாகக் காட்டப்பட்ட படங்கள் அசைவற்று எழுத்தோவியமாகத் திகழ்ந்தன. இயங்கு படக்காட்சியில் இயற்கை உருவம் உள்ளது உள்ளவாறே இயங்கும் பான்மையில் படம் எடுக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

பேசும் படக்காட்சி : இது பேசாப் படக்காட்சியின் சம்பந்தமும் உடையது. இதற்கு இயக்க விளக்கப் படங் காட்டும் (Cinematograph) கருவியும் ஒலிப் பதிவுக் (Gramophone) கருவியும் வேண்டும். இவ்விரண்டின் துணைகொண்டே பேசும் படக்காட்சிகள் தோன்றியுள்ளன. முதல் முதலில் இயங்கும் படம் காட்டப்பட்டபோது இடையில் பாடல்களோ பேச்சோ வர நேரிட்டால், அவற்றிற்கேற்றவாறு பாடும் கருவியை இணைத்துப் பாடியும் பேசியும்காட்டி வந்தனர். இதனால் இயங்கு படக்காட்சியின் வேகமும் பாடும் கருவியின் வேகமும் ஒத்து வராததினால் பல அசௌகரியங்கள் நேர்ந்தமையின், இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒத்து நடக்க வேண்டுமென்று ஒலிப்படக் கருவி (Synchronization of Films) முறையைக் கண்டுபிடித்து வெற்றிபெற்று, அம்முறைப்படியே இப்பொழுது பேசும் படங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்ஙனம் மின்சாரத் துணைகொண்டு எத்தகைய படங்களையும் எடுத்துவிடலாம். எரிமலை, கடல், நீர் வீழ்ச்சி போன்ற இயற்கைக் காட்சிகளையும், சரித்திர சம்பந்தமான கதைகளையும், பெரியோர்களின் வரலாறுகளையும் நடிகர்களின் துணைகொண்டு படமாகத் தயாரித்து விடலாம். ஒரு படம் தயாரிக்கப்பட வேண்டுமானால், அதற்கு ஏராளமான பொருள் வேண்டும். குதிரைப் பந்தயம், கிரிக்கட்டுப் பந்தயம், போர், அரசர் முடிசூட்டு விழா முதலியவற்றைப் படம்பிடிக்க வேண்டுமானால், அவ்வச் சம்பவங்கள் நடக்கும் இடங்களுக்குச் சென்று பிடிக்கவேண்டும். சரித்திர சம்பந்தமான நாடகப் படம் பிடிக்கப்படவேண்டின், நடிகர்களும், கதைப் பகுதியும், கதைக்கேற்ற ஆடை அணிகளும், இயற்கைக் காட்சிகளும் தயாரிக்கப்படவேண்டும். நடிகர்கள் ஒன்று சேர்ந்து நடிப்பதற்கு ஒரு பெரிய தனியிடம் (Studio) வேண்டும். அத் தனியிடம் சாதாரண நாடகக் கொட்டகையைப் போன்றிராமல், சாஸ்திர (Scientific) முறைப்படி கட்டப்படவேண்டும். பேசும் படம் பிடிக்கப்பட வேண்டுமானால், நடிகர் நடிக்கும் இடத்தில் வெளிச் சத்தம் உள்ளே வரவொட்

டாதபடி, செய்து கொள்ள வேண்டும். ஏனெனில், சிறு சத்தம் வெளியிலிருந்து கேட்கப்படுமானாலும் அவ்வொலி யும் அப்படத்தில் பதிந்து, இடையிடையே அனாவசியமான சத்தங்கள் படம் காண்பிக்கப்படும்போது கேட்கும். ஆகவே, நடிகர்களும் படம் எடுக்கும் இடத்தில் இருக்கும் போது தும்முதல், இருமுதல், கனைத்தல் முதலிய சத்தங் களைச் செய்யாமல் இருக்கவேண்டும். அப்படிச் சத்தம் செய்யின், அச் சத்தமும் அப் படத்தில் பதிந்துவிடும். இந்த முறைகளை எல்லாம் கவனித்துப் படம் பிடித்த பிறகு அவை தொடர்ச்சி கெடாது இணைக்கப்பட்டு, 'பிலிம்' என்னும் பெயர் பெறும். ஒரு பிலிம் எடுக்கப்பட்டால் அதினின்று பல பிரதிகளை எடுத்துக்கொள்ளலாம். அவ்வனுகூலம் இருப்பதனாலேதான் ஒரே கதை பல இடங்களில் ஒரே சந்தர்ப்பத்தில் காண்பிக்கப்படுகின்றது.

இங்ஙனம் பிலிமாக எடுக்கப்பட்ட படம் புரொஜெக்டர் (Projector) என்னும் கருவியின் மூலம் மிகுதியும் வெளிச்சமுடைய மின்சார விளக்கின் உதவியால் வெண் திரையில் காண்பிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் மேற்சொன்ன முறைகளை எல்லாம் அனுசரித்து அதிக மாகப் படங்கள் பிடிக்கப்படுகின்றன. அம்முறைகளை நன்கு அறிந்து நம் இந்தியாவிலும் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் படம் பிடிக்கும் நிலையங்களை (Studios) அமைத்துப் பல பிலிம்களைத் தயாரிக்கின்றனர்.

படக்காட்சிகளைப் பார்ப்பதனால் பல நன்மைகள் உண்டாகின்றன. காணமுடியாத பல இடங்களை நேரில் காண்பதுபோலக் காண்கின்றோம். இலண்டன் நகரில் ஓர் அபூர்வ சம்பவம் நிகழ்ந்தால் அதனை நேரில் கண்டுகளிக் கும் பாக்கியம் தனவந்தர்களுக்கே வாய்க்கும். ஆனால், ஏழை எளியவர்களும் அந்தச் சம்பவங்களை நேரில் காண் பதைப்போலப் படத்தில் காணலாம். இப்படக்காட்சி கல்வி அபிவிருத்தி செய்வதற்குப் பல வழிகளிலும் பயன் படுகிறது. மாணவர்கள் தாங்கள் படிக்கும் பூகோள பாடம், சரித்திர பாடம் முதலிய பாட சம்பந்தமான இயற்கைக் காட்சிகளையும் அழகிய கட்டடங்களையும் படத்தில் கண்டு களிக்கலாம். முன்னே நடந்த வாழ்க்கை வரலாறுகளும் படமாகப் பிடிக்கப்பட்டுக் காண்பிக்கப்படு வதனால் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை களையும், படியாதவர்களும் படக் காட்சியின்மூலம் நன்கு

அறிந்துகொள்வார்கள். நற்காலத்தில் மூலை முடுக்குகளில் எல்லாம் படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டு வருவதால் ஆண்களும் பெண்களும் எத்தனையோ விஷயங்களை அறிந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வளவு நன்மைகள் இருப்பினும், படக் காட்சியினால் சில தீமைகளும் ஏற்படுகின்றன. பார்க்கத் தகாத சில சினிமாக் காட்சியினால் மாந்தர் ஒழுக்கம் கெடுகிறது. இளைஞர்கள் இளமையிலேயே கெட்டு ஒழிகின்றார்கள். படக்காட்சிகளைக் காண மக்கள் பெருங்கூட்டமாக வந்து எல்லோரும் ஒரே கட்டிடத்திற்குள் இருந்து பார்க்க நேரிடுகின்றமையின், சுகாதாரத்திற்குப் பிரதிகூலமாகிறது. அடிக்கடி படக்காட்சி காண்பதனால் வெகு சீக்கிரத்தில் கண் பார்வை மங்குகிறது. ஆயினும், படக் காட்சியில் பின்னுஞ் சில அரிய சீர்திருத்தங்கள் செய்யப்படுமானால் இக்குறைகள் ஒருவாறு நீங்குதலும் கூடும்.

OFFICE OF THE REGISTRAR
2 1 OCT 19
MADRAS

குறிப்புரை

செய்யுள்

I. கடவுள் வாழ்த்து

1. தேவாரம்

தெய்வ விஷயமான இசைப்பாட்டு, தேவாரம். தே-தெய்வம். வாரம்-இசைப்பாட்டு. இதனை இயற்றியவர் சுந்தரர். இவர் காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டு என்பர்.

1. மெய்ப்பொருள்-உண்மைப் பொருள். ஆரூர்-திருவாரூர்.

2. திருவிசைப்பா

அழகிய இசைப்பாட்டுக்களால் ஆகிய நூல், திருவிசைப்பா. இதனை இயற்றியவர் திருமாளிகைத் தேவர்.

2. உலப்பிலா - அழிவில்லாத. அம்பலம்-சிதம்பரம். அளி-அன்பு.

3. பெருமாள் திருமொழி

குலசேகரப் பெருமாளுடைய திருமொழி, பெருமாள் திருமொழி. பெருமாள்-குலசேகர ஆழ்வார். திருமொழி-

சிறந்த வார்த்தை. இதனை இயற்றியவர், குலசேகர ஆழ்வார். இவர் காலம் கி. பி. 8-ம் நூற்றாண்டு என்பர்.

3. தருதுயரம்-வினைப்பயனால் வந்த துன்பம். விரைமணம். வித்துவக்கோடு-மலைநாட்டில் உள்ள ஒரு விட்டுணு தலம். 4. சுடினும்-காய்ச்சிய ஊசியினால் சுட்டாலும். மருத்துவன்-வைத்தியன். 5. அழல்-வெப்பம். அந்தரம்-வானம். அலரா-மலரா. சீர்-சிறப்பு. அகம்குழையமாட்டேன்-மனம்கரையேன். 6. வான்-மேகம். பைங்கூழ்-பசிய பயிர்கள். மெய்த்துயர்-உண்மையாகிய துன்பம்.

4. தாயுமானவர் பாடல்

தாயுமான சுவாமிகளுடைய பாடல், தாயுமானவர் பாடல். இதனை இயற்றியவர், தாயுமானவர். இவர் காலம் 17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

7. ஆரமுதம் - தேவாமிர்தம். புனிதம் - பரிசுத்தம். விழுப்பொருள்-சிறந்த பொருள் : கடவுள்.

5. கலைமகள்

8. தா அறு-குற்றம் அற்ற. தேவு-கடவுள், துணைவி-மனைவி. வாணி-சரசுவதி. 9. ஆடகன்-பிரமன். பாடகம்-ஓர் அணி. அணங்கு-தெய்வப்பெண். கற்பகம்-வரையாது கொடுக்கும் விருட்சம். 10. சபவடம்-சபமாலை. ஞானமாமுத்திரை-சின்முத்திரை. முத்தமிழ்-இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ். கிழத்தி-உரியவள்.

6. தமிழ்த் தெய்வம்

11. பொருப்பு - பொதியமலை. தென்னன் - பாண்டியன். சங்கம்-தமிழ்ச்சங்கம். பேதை-குழந்தை. ஏனம்-பன்றி. பாவை-பூமாதேவி.

II. அறவுரை

1. திருக்குறள்

சிறந்த குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல், திருக்குறள். திரு - அடைமொழி. குறள் - கருவியாகுபெயராய் நூலை உணர்த்திற்று. இதனை இயற்றியவர், திருவள்ளுவர். இவர் காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டுக்கு முன் என்பர்.

1. சமன் - சமம் : போலி. சீர்தூக்கும் கோல்-தராசு. கோடாமை-சாயாமை. 2. கற்பவை-கற்கப்படும் நூல்கள். கசடற-குற்றமற 3. எல்லாம் உடையார்-எல்லாச் செல்

வங்களையும் உடையவர். 4. எண்ணுவம்-நினைக்கக் கடவோம். எண்ணி-முடிக்கும் உபாயத்தைக் கருதி. 5. திருவினை-செல்வம். முயற்று இன்மை-முயற்சி இல்லாமை. இன்மை-வறுமை. 6. எளிய-எளிமையுடையன. அரிய-அருமையுடையன. 7. கடைமுறை-முடிவு. சாம்-சாதற்கு ஏதுவாகிய. 8. பெருக்கத்து-செல்வம் உள்ள காலத்து. சிறிய சுருக்கத்து - வறுமையான காலத்து. 9. நாண் - நாணுதல். ஒப்புரவு-உபகாரம். கண்ணோட்டம் - தாட்சணியம். சால்பு-சால்பு என்னும் பாரம்.

2. ஏலாதி

ஏலம் முதலிய கடைச்சரக்குகளால் செய்யப்பட்ட சூரணம் உடலுக்கு உறுதி பயப்பதுபோல, இந்நூலில் பயின்றுள்ள நீதிகள் அறியாமை என்னும் நோயை ஒழிப்பது பற்றி ஏலாதி எனப்பெயர் பெற்றது. இது பதினெண் கீழ்க்கணக்குகளில் ஒன்று. இதனை இயற்றியவர், கணி மேதாவியார். இவர் காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டு என்பர்.

1. கொலைபுரியான்-கொலை புரிவதற்கு விரும்பாதவன். தீச்சொல்-தீயவார்த்தை. மூங்கை-ஊமை. இறை-தலைமை. 2. இயையும்-பொருந்தும். வாடும்-அழியும். பாடு-தொழில். வீடு-மோட்சம். பால்போலும் சொல்லினாய்: மகடூஉ முன்னிலை. 3. கொவ்வை-கோவைப்பழம். சீறு-கோபம். ஈனம்-குற்றம். நசையவர்-விரும்பி வந்தவர். சிதை-கீழ்மை. செற்றம்-பகைமை. 4. நோதல்-வருந்துதல் கவறல்-கலங்குதல். 5. தலையிழந்த பெண்டாட்டி-கணவனையிழந்த மனைவி; கைம்பெண். கைத்து + ஊண் கைத்தூண்-கையின்கண் உள்ள உணவு.

3. பழமொழி

பழமையாகிய மொழி, பழமொழி. இது ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டுள்ள 400 வெண்பாக்களையுடைய நூல். இது பதினெண் கீழ்க்கணக்குகளில் ஒன்று. இதனை இயற்றியவர், முன்றுறை யரையனர். இவர் காலம் கடைச்சங்க காலம்.

1. பொறியின்-பொலிவினையுடைய, சாந்தம்-சந்தனம். அணி-ஆபரணம். பிறிது-வேறு. 2. நீர்மை-தகுதி. தகவு-தகுதி. திங்கள்-சந்திரன். ஆல்: அசை. 3. நுணல்-தவளை. பேதை-அறிவற்றவன். நல்லாய்: மகடூஉ முன்னிலை. 4. நடக்கை-நல்லொழுக்கம். கொள்ளி-கொள்ளிக்

கட்டை. ஒள்ளியன் அல்லான்-ஒழுக்கத்தின் மேன்மை யற்றவன். 5. கலாம்-சண்டை. புனலூர: ஆடூஉ முன் னிலை. உளைய-மனம் வருந்த. ஏ: அசை.

4. அறநெறிச் சாரம்

தரும வழிகளுள் சாரமான விஷயத்தைக்கூறும் நூல்; அறநெறிச் சாரம். இதனை இயற்றியவர், முனைப்பாடியார். இவர் காலம் சுமார் 700 வருடங்களுக்கு முன் என்பர்.

1. காய்தல் - கோபித்தல். ஆய்தல் - ஆராய்தல். 2. ஈதல்-கொடுத்தல். களைகட்டு-களைபிடுங்கி. வன்சொல்-தீய சொல். வாய்மை-உண்மை. ஈன்ற-பெற்ற. 3. எள்ளி-இகழ்ந்து. இன்னுச்சொல் - தீயசொல். பிறிது - வேறு. அறிவு என்னும் நீர்: உருவகம். 4. கதிர்-கிரணம். ஞாயிறு - சூரியன். அச்சாணி - கடையாணி. இழித்து - இகழ்ந்து. 5. கல்+நின்று=கன்னின்று. சான்றோர் என்றது இங்கு அற்பரை.

5. மணிமேகலை

மணிமேகலை என்பாளின் வரலாற்றைக் கூறும் நூல், மணிமேகலை. மணிமேகலை-கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள். இஃது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று. இதனை இயற்றியவர், சீத்தலைச் சாத்தனர். இவர் காலம் கடைச் சங்க காலம்.

1. யாக்கை - உடல். புத்தேள் - தேவர்கள். விழுத் துணை - சிறந்த துணை. 2. வினை - நல்வினை, தீவினை. புனைவன - அலங்கரிப்பன. விளிவு - சாதல். பற்று - ஆசை. அரவு - பாம்பு. செற்றம் - கோபம். அவலம் - துன்பம். 3. குடிப்பிறப்பு அழிக்கும் - (பசி) உயர்குடிப் பிறப்பைக் கெடுக்கும். புணை - தெப்பம். விடூஉம் - நீக்கும். நாண் - நாணம். பசிப்பிணி: உருவகம். பசியின் கொடுமைபற்றிப் பாவி எனப்பட்டது. 4. ஆற்றுநர் - பொறுக்கும் வன்மை உடையவர். ஆற்ருமாக்கள் - தரித்திரர். மண்திணி - மண்நிறைந்த.

6. புறநானூறு

புறப்பொருளைப்பற்றிய நானூறு செய்யுளை யுடைய நூல், புறநானூறு. புறம்- புறத்தே நிகழ்வது. அஃது அறமும் பொருளுமாம். இந்நூல் எட்டுத் தொகை நூல் களுள் ஒன்று; கடைச்சங்கப் புலவர்கள் பலரால் செய்யப் பட்டது.

1. யாண்டு - வருடம். யாங்கு ஆகியர்-எப்படி ஆனீர். இளையர்-ஏவலாளர். அல்லவை-முறையல்லாதன. ஆன்று அவிந்து அடங்கிய-நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டியவரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கிய. 2. வளாகம்-இடம். யாமம்-இரவு. கடுமா-கொடியவிலங்கு. நாழி-ஓர் அளவு. துய்ப்போம்-அனுபவிப்போம். 3. உற்றுழி - உற்றவிடத்து. முனியாது - வெறுக்காது. திரியும் - வேறுபடும். கீழ்ப்பால்-கீழ்க்குடியில்.

III. தொடர்நிலைச் செய்யுள்

1. கம்பராமாயணம்

கம்பரது ராமாயணம், கம்பராமாயணம்: ஆறும் வேற்றுமைத்தொகை. கம்பர் + ராமாயணம். ராம + அயனம். கம்பர் செய்த ராமாயணம் என்பது கருத்து. குகப்படலம்-குகனைப் பற்றிய படலம். இதனை இயற்றியவர், கம்பர் இவர் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதி.

1. பொருவுஇல்-ஒப்பில்லாத. தானை-சேனை. தாவர சங்கமம்-அசையும்பொருள், அசையாப்பொருள். 2. கான் தலை-காட்டில். காளை-பரதன். அக்குரோணி-ஓர் பேரெண். 3. ஆயிடை-அச்சமயத்தில்: ஆ + இடை. துப்பு-வலிமை. 4. முரண்-வலிமை. துகள்-புழுதி. குனிப்பு-வளைவு. நகை-கோபச்சிரிப்பு. 5. சுரிகை-உடைவாள். வெட்டிய-கடிந்து பேசும். கிளர்ந்த-பூரித்த. 6. வள் உகிர்-கூரியநகம். கூவினன்-கூப்பிட்டான். 7. மருங்கடை-பக்கத்தே உள்ள. ஓல்-ஒலிக்குறிப்பு. அசனி-இடி. 8. புளிஞர்-வேடர். உம்பர்-தேவலோகம். 9. துடிஎறி-பறைகளை அடி. 10. அஞ்சனவண்ணன்-இராமன். சரம்-அம்பு. உஞ்சு-தப்பிப் பிழைத்து. 11. திரை-அலை. வேழம்-யானை. 12. மொய் புலி - வலிமையுடைய புலி. 13. ஏவம் - துன்பம். ஆவது போக-ஆகக்கடவது ஆகட்டும். 14. உகந்தவர்-விருப்பியவர். துணை-நண்பன்; தமயன். 15. தும்பி-யானை. மா-குதிரை. வம்பு-வாசனை. வெம்பிய-கோபமிக்க. நம்பி-இராமன். 16. கிடக்கிடு-கிடக்கட்டும். குறைபட-அலைபட. 17. சீரை-மரஉரி. நிணம்-கொழுப்பு. குவை-குவியல். 18. சாடி - மோதி. வேடு - வேடுவர் கூட்டம். 19. மா - பெருமை. கோ-தலைவன்; இராமன். ஏ-அம்பு. ஆ-பசு. சிறுகூழ்-இளம்பயிர். 20. நாவாய்-படகு. விற்பிடித்த வேலை-வில்லை ஏந்திய சேனையாகிய கடல். கொங்கு-தேன்.

குறி-பெயர். 21. கரை-எல்லை. அல்-இருள். மழைகாணும்-மேகத்தைஒத்த. 22. தந்தைதுணை-தசரதன் நண்பன்; சுமந்திரன். 23. தம்பி-சத்ருக்கனன். குஞ்சி-தலைமயிர். 24. வற்கலை-மரஉரி. மாசு-அழுக்கு. 25. நம்பி-பரதன். 26. தொழுதானை-தொழுதவனாகிய குகனை. மலர் இருந்த அந்தணன்-பிரமன். அந்தணனும் தலைவணங்கும் அவன்-பரதன். 27. புளினர் - வேடர். எழு - இருப்புத்தூண். 28. கிராதர்-வேடர். பொய்யில் உள்ளத்தன்-குகன். விம்மினன்-உடல்பூரித்தான். 29. சிந்தனை-வருத்தம். தரணி-பூமி. 30. எயினன் - வேடன். இரவி - சூரியன். உரவு - வலிமை. 31. பருவரல் பரவை-துன்பக்கடல். சிலை-வில். 32. அயின்றனை-புசித்தாய். குயின்று-பதித்து. 33. தூண்தர-தூணை ஒத்த. சூழல்-இடம்- 34. கங்குல்எல்லை-இரவின் முடிவுஎல்லை. அல்லை ஆண்டு-இருளை ஒத்து. 35. அன்பத்துக்கு-அன்புக்கு. அத்து-சாரியை. 36. அரும்பொடி-படுக்கமுடியாத புழுதி. தெவ்-பகைவர். இடர்க்கடல்-துன்பக்கடல்: உருவகம்.

2. நைடதம்

நிடத நாட்டு அரசனாகிய நளனது வரலாற்றைக்கூறும் நூல், நைடதம். இதனை இயற்றியவர், அதிவீரராம பாண்டியர். இவரது காலம் 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதி.

1. திறை - கப்பம். நிழல்-பிரகாசம். 2. சுடர்-சூரியன். செய்கடன்-நித்திய கருமம். தான்றி-ஓர்மரம். கலி-கலி புருடன். 3. மல்லல்-வளமை. 4. கிழமை-உரிமை. இரு - பெரிய. 5. தாமம் - பூமாலை. மடந்தை - தமயந்தி. 6. மல்-மற்போர். மகிழ்தூங்கி-மகிழ்ச்சிமிக்கு. 7. எண்ணலை-ஆலோசிக்க வேண்டாம். 8. முழை-குகை. மழவிடை-இளம் எருது. 9. மைம்முகில்-கருமேகம். உரவு-வலிமை. குரை-ஒலி. 10. கொல் + நவில்-கொன்னவில். 11. களைகண்-ஆதரவு. இளவல்-புட்கரன். அளவளாய்-கலந்துபேசி. 12. வாகை-வெற்றி. மல்லல்-வலிமை. எல்-பிரகாசம். வல்-சூதாடுகருவி. 13. விடலை: ஆண்பால் சிறப்புப் பெயர். 14. சீலம்-ஒழுக்கம். கவறூடல்-சூதாடல். 15. கழகம்-சூதாடுமிடம். ஒன்னலர்-பகைவர். ஞாட்பு-போர். 16. நல்குரவு-வறுமை. துணை-சகோதரன். 17. எள்ளுக-இகழக்கடவாய். இகலி-சண்டை செய்து. 18. செம்மல்-நளன். 19. சூழ்வினைப் புணர்வு-விதிவசம். காழ்-வயிரம். கவறு-சூதாடுகருவி.

3. திருவிளையாடற் புராணம்

சிவபெருமானது திருவிளையாடலைப்பற்றிக் கூறும் புராணம், திருவிளையாடற் புராணம். இதன் ஆசிரியர், பரஞ்சோதி முனிவர். இவர் காலம் 300 வருடங்களுக்குமுன் என்பர்.

1. வந்தி-மலடி. இவள் பெயர் செம்மனச் செல்வி. 2. வேத சிரப் பொருள் - உபநிடதப் பொருள். உண் தொழில்-சீவனம். 3. கூடல்-மதுரை. நாயகன்-சோம சுந்தரக் கடவுள். 4. குறட்கு - குண்டோதரனுக்கு. குடினை-ஆறு. போதமூர்த்தி-ஞானமூர்த்தி. இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி. 5. விழு-சிறந்த. இண்டை-தலைக்கு அணியும் ஒரு வகை மாலை. சுமை அடை-சும்மாடு. மண் தொடுபடை-மண்வெட்டி. 6. ஓலம்-ஒளி. ஆலும்-ஒலிக் கும். 7. இசைந்தனன் - கூறினன். 8. கரையில்லார்-எல்லையற்றவர்; சிவபெருமான். 9. புள்ளியுடைத் துகில்-புலித்தோலாடை. சிக்கு-உறி: சிக்கு நாற்றம் உள்ள. 10. களிப்பு-மகிழ்ச்சி. வேலை-தொழில். 11. கட்டு-சும் மாடு. தொடுவர்-தோண்டுவார். அகன்-அகன்ற. 12. தத் துவம்-உண்மை வேதாந்தம். 13. இறைமகன்-பாண்டி யன். ஓகை-மகிழ்ச்சி. நோன்-வலிமை. 14. கள்வன் இங்குச் சிவபெருமான். இச்செய்யுள் தன்மையணி. 15. ஆகம்-உடல். 16. செழியன் - பாண்டியன். பன்னி - மனைவி. இவுளி-குதிரை. 17. வழுதி-பாண்டியன். அறத்து ஆற் றின்-தருமவழியில். தா + இல்-தீமையற்ற. வாதவூரன்-மாணிக்கவாசகர். 18. மறுக்கம்-துன்பம். புலவு-புலால். வாம்-தாவுகின்ற. 19. இடும்பை-பிறவித் துன்பம். 20. வாரி-கடல். நிறையுடை இவன்-வாதவூரன். 21. சிலை-வில். தழும்பு - அடையாளம். தொண்டன் - சாக்கிய நாயனார். 22. களைவான்-போக்கும்பொருட்டு. 23. பிள்ளை-சீராளன். வேடன்-கண்ணப்ப நாயனார். 24. நகை தார்-விளக்கம் பொருந்திய வேப்பமாலை. வெள்ளிமன்று - மதுரைக் கோயில். 25. பெருந்துறையார் - திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமான். உவா-பௌர்ணமி.

4. கலிங்கத்துப் பரணி

கலிங்கத்தில் நடந்த யுத்த வரலாற்றைக் கூறும் நூல், கலிங்கத்துப் பரணி. பரணி என்பது 96 வகை நூல்களில் ஒன்று. கலிங்கம்-ஒரு தேசம். அதனை இயற்றியவர், சயங்கொண்டார். இவர் காலம் கி. பி. 11-ம் நூற்றாண்டின் இறுதி.

1. பொறி-புள்ளி. பணபணி-படத்தையுடைய பாம்பு; ஆதிசேடன். 2. வளை-சங்கு. கலி-ஒலித்தல். மரம்-ஊது. கொம்பு இபம் - யானை. 3. தழை - பீலிக்குடை. கரப்ப-ஒளிக்க. 4. வட்டிகை-கேடகம். பணிக்கலன்-வேலைப்பாட மர்ந்த ஆபரணம். 5. மாருதம்-காற்று. மூரி-வலிமை.6. பார்-பூமி. விசும்பு-ஆகாயம். 7. மாதிரம்-திசை. சதுரங்கம்-நால்வகைச் சேனை. 8. கடதடம்-கன்னம். மருப்பு-கொம்பு. வடஅனல்-வடவாமுகாக்கினி. கடம்-மதம். 9. முனை-யுத்தகளம். கதழ்-சினம். நிரை-வரிசை. கவனம்-விரைவு. 10. உருள்-சக்கரம். இவுளி-குதிரை. பரிபவம்-அவமானம். 11. அமரர்-தேவர். வடு-குற்றம். முனிபவர்-கோபிப்பவர். 12. விருதர்-போர்வீரர். 13. விழும்பொழுது - மாலைப் பொழுது. எழுதூளி: வினைத்தொகை. 14. ஆர்-ஆத்தி· அபயன் - முதற் குலோத்துங்கசோழன். சக்கிரம் - சக்கராயுதம் கருணாகரன் - குலோத்துங்கன் சேனாபதி. 15. தொண்டையர்-தொண்டை நாட்டவர். 16. வாசி-குதிரை. சூழி-முகபடாம். தூசு-சேனை.

5. குசேலோபாக்கியானம்

குசேலரது வாழ்க்கையினைப்பற்றிக் கூறும் நூல் குசேலோ பாக்கியானம். குசேலர்+உபாக்கியானம். குசேலர்-கிழிந்த ஆடையை உடையவர். உபாக்கியானம்-கிளைக்கதை. இதனை இயற்றியவர், வல்லூர் தேவராசப் பிள்ளை. இவர் காலம் கி. பி. 19-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

1. கொண்கன்-கணவன். தேசு-புகழ். 2. பருவரல்-துன்பம். மல்-வலிமை. மானம்-பெருமை. 3. மட்குழிசி-மட்பானை. கோரிகை-அகப்பை. 4. மகவு-குழந்தை. பொருமுதல்-தேம்புதல். 5. சேய்-குழந்தை. செப்பும்-சொல்லும். நந்தா-பின்வாங்காத. 6. கலாம்-சிறுசண்டை. மைவண்ணம்-கருநிறம். தைவந்து-தடவி. 7. அலர்மொழி-பழிச் சொல். துவ்வாமை-உண்ணாமை. சுகுணம்-நற்குணம். நீந்துவம்-தாண்டுவோம். 8. மூன்று+தழல்=முத்தழல். சிறார்-சிறு குழந்தைகள். அனம் - அன்னம். மூரல் - உணவு. 9. உலோபம் - உலோபித்தனம். 10. வடவை - வடவாமுகாக்கினி. ஆகரம்-இருப்பிடம். 11. மாதவன்-கண்ணன். பீதாம்பரன்-கண்ணன். செல்லல் - வறுமை, 12. எழிலி - மேகம். பொதி - மூட்டை. 13. மாளிகை - மாலை கமலை - இலக்குமி நங்கை-குசேலர் மனைவி; சுசீலை. 14 முற்பவம்-முன் பிறப்பு, 15. சேமம் - பாது காவல்; வைப்பு - பணம். 16 தேரை - தவளையின் ஓர்வகை. கண்ணி - மாலை;

17. செருக்கு - கர்வம். மூகர் - ஊமையர் 28, அல்லல்-துன்பம், 19. வல்லோர்-இலக்கண நூல் வல்லோர்-20, நாற்கதி-தேவகதி, மக்கட்கதி, நரககதி என்ற நால்வகைக்கதி சேல் - கெண்டைமீன்.

6. அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரனது வரலாற்றைக் கூறும் புராணம், அரிச்சந்திர புராணம் அரிச்சந்திரன் -திரிசங்கு மன்னரின் புதல்வன். இந் நூலை இயற்றியவர்,வீர கவிராயர். இவர் காலம் 16-ம் நூற்றூண்டு என்பர்.

1. வரால்-ஓர்மீன். கலாபம்-தோகை. வனிதை - சந்திரமதி. 2. தவளம்-வெண்மை. நகை-பற்கள். தனு-வில் கவளம்-வாய் அளவினதாகிய உணவு. அரசன்-காசி மன்னன் 3. நமர்-நம்மவர். அசடி-அறிவில்லாதவன். முசியாள்-தளர மாட்டாள். 4, விசும்பு-ஆகாயம், மன்மகள் - காசி தேசத்து அரசன் பிள்ளை. தறுகண்.அஞ்சாமை. பாகம்-கயிறு, கறுவி கோபித்து. 5. புரவலன் - காசி அரசன். அவமே-வீணுக 6. பதி - ஊர். சதி - கேடு 7. அலைக்கும் - வருத்தும். பங்கேருகம்-தாமரை. 8. புரிசை-மதில். இறை அரிச்சந்திரன். 9. கௌசிகன் - விசுவாமித்திரன். நோதகவு-துன்பம்-நொய்மை-துன்பம். சேய்மை-தூரம். அண்மை சமீபம் வாய்மை. சத்தியம். 11. புலையனும் - தாழ்ந்த மகனும். மருண்டு-மயங்கி கலை-சாத்திரங்கள். கழறுவது கூறுவது 12. அம்மை - வரும்பிறப்பு மும்மை - மூன்று, வயிறு-நடுவிடம் 13 கதி - மோட்சம். கட்டுரை - உண்மை. வாய்-சொல்வன்மை. பாலன்-பிள்ளை; தேவதாசன். 14. வாசவன்-இந்திரன். முனிவன்-விசுவாமித்திரன். 15. வழக்கின்-முறைப்படி. பரவி - துதித்து. வழுவேல் - தவறுதே. 16, புற்புதம் - குமிழி. வாட்படை - வாளாயுதம். 17. பசுபதி - சிவபெருமான். அலகு-அளவு. ஈடு-ஒப்பு. வாய்மை - சத்தியம்- நிறை-கற்பு. இறுதி இன்மை - இறத்தல் இல்லாமை. பேதை-சந்திரமதி. வடி-வடித்த.

IV. சிறு நூல்கள்

1. மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்

மீனுட்சியம்மையின்மீது பாடப்பெற்ற நூல் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ். பிள்ளைத்தமிழ் - 96 வகை நூல்களுள் ஒன்று. இதனை இயற்றியவர், குமரகுருபர சுவாமிகள். இவர் காலம் 17-ம் நூற்றூண்டின் இடைப்பகுதி.

கடவுட் பழம்பாடல் - தெய்வத்தன்மை பொருந்திய தோத்திரப்பாடல். நறை-தேன். அகந்தை-அகங்காரம்-சிமயம்-சிகரம். தரங்கம்-அலை. மதுகரம்-வண்டு. குழல் - கூந்தல். மலயத்துவசன்-ஓர் பாண்டியன்.

2. திருவரங்கக் கலம்பகம்

திருவரங்கத்தைப்பற்றிக் கூறும் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம் கலம்பகம்-ஓர் பிரபந்தம். இதனை இயற்றியவர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். இவர் காலம் சுமார் 700-வருடங்கட்கு முன் என்பர்.

2. திருமுகம்-கடிதம் குறைஉடல்-குறைந்தஉடல் மறவர்கொம்பு-மறப்பெண். 3 செல்-கறையான். பின்னை - நப்பின்னைப்பிராட்டி. பட்ட-அழிந்த. கவிகை-குடை.

3. கோயில் நான்மணிமாலை

கோயிலைப்பற்றிய நான்மணிமாலை, கோயில் நான்மணிமாலை. கோயில்-சிதம்பரம் நான்மணிமாலை-ஓர் பிரபந்தம் இதனை இயற்றியவர், பட்டினத்தார். இவர் காலம் கி. பி. 10-நூற்றுண்டு.

4. பிறிதுபடு-மனத்தை வேறுபடுத்தும் வினை-தீவினை புலன்-ஐம்புலன். உவட்டின்-பெருக்கினல். நிறை - மன அடக்கம். கூம்பு-பாய்மரம். உணர்வு - அறிவு. காயம் - உடல். அலங்கல்-மாலை. கலங்குபு-கலங்கி. எயில் - மதில். வம்பலர் மணத்தோடு மலர்கின்ற ; மணம் கமழும்.

4. பாரிகாதை

பாரியின் சரித்திரத்தைக் கூறும் நூல், பாரிகாதை. பாரி-கடையெழு வள்ளல்களில் ஒருவன். இதனை இயற்றியவர் சேது சமஸ்தானம் ரா. இராகவையங்கார்,

5. மாந்து-வாரி உண்ணுதற்கு உரிய. கிள்ளை - கிளி. அயில்-வேல் 6. 'செழியா-செழித்து தீது-குற்றம். 7. வெம்பாடு-கடுந்துயரம். பருவந்தான் - துன்புற்றுன். ஓவம்-சித்திரம். ஆவம்-துயர். 8. சார்பு-பற்றுக்கோடு. உக்க-சிதைந்துள்ள. வேளிர்வேள் - வேளிர்குலத்திலே பிறந்த வேள் என்னும் பாரி. வேளிர்-குறுநிலமன்னர்.9. ஓர்பு-உணர்ந்து ஆரஞர்-அரிய துன்பம்.

5. நீதிநூல்

நீதியினை விளக்கிக் கூறும் நூல், நீதிநூல். இதனை இயற்றியவர், வேதநாயகம் பிள்ளை. இவர் காலம் 19-ம் நூற்ருண்டின் இறுதி.

10 சின்ன-அற்பமான. சீவன்-உயிர். உன்னுதல்-நினைத்தல். கைம்மாறு-பிரதி உபகாரம். 11. கைதவம்-பொய் ஒழுக்கம். வாய்மை-உண்மை.

6. தமிழ் விடுதூது

மதுரை சோமசுந்தரக் கடவுள்மீது காதல்கொண்ட தலைவி ஒருத்தி வருத்தமுற்று அதனை அறிவிக்கும்படி அக் கடவுளிடம் தமிழையே தூதாக விட்டதைக்கூறுவது, தமிழ் விடு தூது. ஒரு பிரபந்தம்.

12. புகழ்உரு-புகழ்உடம்பு. தேவஉரு-தேவவடிவு. வாணி-கலைமகள். பாயல்-படுக்கை. முனி-அகத்தியர். நேசர்-நான் காதலிக்கின்ற மதுரைக்கடவுள். பொருள்-இறையனார் அகப்பொருள். நீ-இவ்வளவு பெருமையுடைய நீ. ஈரடி-திருக்குறள். ஐயர்-திருவாரூர் தியாகராசப்பெருமான். பெண்மதி-பேதைமை.

7. நன்னூல்

நன்மையாகிய நூல், நன்னூல். இஃது ஒரு சிறந்த இலக்கண நூல். இதனை இயற்றியவர், பவணந்தி முனிவர். இவர் காலம் 13-ம் நூற்றாண்டின் முற்பகுதி.

13. ஆ-பசு. இல்லிக்குடம்-ஓட்டைக்குடம். நெய்யரி-பன்னாடை. 13. களி-கள்ளுண்டு மகிழ்பவன். மடி-சோம்பேறி; மானி-அகங்காரம் உள்ளவன். ஏழை-அறிவற்றவன். மந்தன்-நுட்புத்தியில்லாதவன். தறுகணன்-பயப்படாதவன். படிறன்-பொய்யன். 15 மடம்-அறியாமை. இகக்கும்-ஒழியும். 16 ஒருகுறி-ஒருமுறை 17 சொல்லும்முறை 18 ஆசான்-ஆசிரியன். 19. அவ்வினையாளர்-தம்மோடு பயிலும் மாணவர். மைஅறுபுலமை-குற்றமற்ற அறிவு.

V. தனிப் பாடல்கள்

2. புரவி-குதிரை. வாரணம்-யானை. திறை-கப்பம் வாணபூபதி-ஏகம்பவாணன். நித்திலம்-முத்து. ஆர்-ஆத்திமரம்; சோழன். வேம்பு-வேப்பமரம்; பாண்டியன். பனை-பனைமரம்; சேரன். அரசு-அரசமரம்; பல அரசர்கள். அத்தி-அத்திமரம்; யானைகள். 3 சிலம்பம்-குச்சி விளையாட்டு. தேசி நடை-குதிரைச்சவாரி. கபம்-ஓர்நோய். 2. செஞ்சுடரோன் மைந்தன்-சுக்கிரீவன். தென்னிலங்கை

வேந்தன்.விபீடணன். பார்த்தன்-அருச்சுனன். 4. வாணி-கலைமகள். கடாட்சம், சந்தானம்-மக்கட் பேறு. நோவகல்-வியாதியின்மை. 5 துர்க்குணர்-துட்டர். 7. ஊன்-மாமிசம். அயம்-ஆடு. மைந்தன்-முருகன். சிந்து-சமுத்திரம். விண்-ஆகாயம். 7. சவை-சபை. மேதினியோர்-பூமியிலுள்ளவர் ஆலாலம்-விஷம். அரன்-சிவன். 8. காட்சி-அறிவு. புலனைந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து. காவாமல் கற்பது-பயன் பெறும்பொருட்டுக் கற்பது-ஊண் உணவு- 9. செஞ்சொல் செவ்வியசொல். சங்கரன் - சிவபெருமான். வேடன்-கண்ணப்பன். பஞ்சவரில் ஒருவன் - அருச்சுனன். 10. கற்பித்தல்-பழக்குதல். பதுமத்தான் - பிரமதேவன், பண்ணினன்-உண்டு பண்ணினன். 11 காமதேனு-தேவலோகத்திலுள்ள ஒரு பசு. தாரு-கற்பகவிருட்சம், மன்றுள்-சிதம்பரத்துள்.

VI. பல்வகைச் சுவைகள்

1. மந்தி - பெண்குரங்கு. வான்கவி - தேவலோகத்துக் குரங்கு. காயசித்தி - உடல் அழியாதபடி செய்யும் ஒரு வித்தை. தேனருவி-ஓர் அருவி. தேர்க்கால்-சக்கரம் 2 கிம்புரி-பூண். தேமா - மா மரம். குறும்பலா - ஓர் பலாமரம். 3. அம்புலி-சந்திரன். கவளம்-வாய் உணவு. 4. வடம்-கயிறு. வெள்ளநீள் தொடர் - நீண்ட வெள்ளிச் சங்கிலி. வான் - ஆகாயம். 5. பங்கயம் - தாமரை. 6, தளர்வுறுதல் - மனச் சோர்வடைதல். 7. வம்பர் - வீண் சண்டை இழுப்பவர் 8. ஆவி-உயிர். வீட்டை-குடும்பத்தை, 10. முட்புதர் - முட்கள் நிறைந்த செடியின் கூட்டம். 11. கிட்டி - நெருங்கி, 12. விழுது-வேர். எயிறு-பல். 13. தூளி-புழுதி. 14 'ஊளை - நரியின் சப்தம். தேனடை-தேன்கூடு 15- ஆனினம்-பசுக் கூட்டம்- 16. வேலை-கடல்- பாலி-பாலாறு, பெண்ணை - பெண்ணையாறு. பொன்னி - காவிரி. பொருநை - தாமிரபர்ணி நதி. 17. விருந்து-புதுமையாய் வந்தவரை உபசரிப்பது.

97776 031